விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

அன்பு வாசகர்களே...
புருசோத்தமன் எழுதும்
தமிழரின் தலைவிதி எப்படியாகும்?
கட்டுரை உள்ளே...

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 15 திங்கட்கிழமை (29.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 161

## வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்குண்டு காணாமல் போனோர் # உயிரிழப்பு

# 250ஐ தாண்டியது

(கொழும்பு)

**நாட்டின் மூன்று மாகாணங்களில் ஏற்பட்ட மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி உயிரிழந்த மற்றும் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 250 ஐ தாண்டியுள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் வெளியிடப்பட்டு உள்ளதுடன், இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.**

நாட்டில் நிலவிய மழையுடனான வானிலையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி காணாமல் போனவர்களில் சிலர் சடலங்களாக மீட்கப்பட்டு வருவதையடுத்தே உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதாக கூறப்படுகின்றது. (23-ம் பக்கம்...)



## இளைஞன் மீது தாக்குதல்!

(தாண்டிக்குளம்)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் வீட்டிற்குள் புகுந்த 15 பேர் அடங்கிய குழுவினர் அங்கிருந்த இளைஞன் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர். 23☛

## 4-வது முறையாக மீண்டும் திருட்டு!

(கரணவாய்)

வடமராட்சி மந்திகை சந்தியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றில் நான்காவது முறையாகவும் நேற்று முந்தினம் சனிக்கிழமை இரவு திருடர்கள் தமது கைவரிசையினைக் காட்டியுள்ள 23☛

## வங்காள விரிகுடாவில் சூறாவளி அபாயம்

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் மையம் கொண்டுள்ள புயல் காற்று உயர் அழுக்கத்தின் விளைவாக வடக்கு திசை நோக்கி பயணித்தால் மணிக்கு 80 வீதமாக காற்றின் வேகம் அதிகரித்து சூறாவளி ஏற்படுவதற்கான 23☛

## திருமண வீட்டினுள் புகுந்து 15 பவுண் தங்க நகை மற்றும் பணம் திருட்டு

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு, இராஜ வீதி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தில் 15 பவுண் தங்க நகைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்த மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி வீட்டில் நேற்று முன் தினம் திருமண வைபவம் ஒன்று இடம்பெற்றுள்ள நிலையில், அன்றைய தினம் இரவே குறித்த திருட்டு இடம்பெற்றுள்ளது.

திருமண வீடு என்ப 24☛

## எண்மரை காப்பாற்றி இளைஞன் மரணம்

(கொழும்பு)

நாட்டில் கடந்த நான்கு தினங்களுக்குள் ஏற்பட்ட இயற்கையின் சீற்றம் காரணமாக பலர் கொல்லப்பட்டதுடன், நூற்றுக்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.

இந்நிலையில் அடித்துச் செல்லப்பட்ட கடும் வெள்ளத்திற்குள் போராடி, எட்டு மனித உயிர்களை காப்பாற்றிய இளைஞன் வெள்ளத்தில் சிக்குண்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

பெலியத்த தம்முல்ல பிரதேசத் 23☛

## தமிழர்களின் தங்கம்; அரசிடம் தகவலில்லை

(கொழும்பு)

யுத்தத்தின் பின்னர் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான தங்கம் தொடர்பில் எந்தவித தகவலும் அரசாங்கத்திடம் கிடையாது என இந்து சமய மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வாசுதேவ நாணயக்கார எம். பி. எழுப்பியுள்ள கேள்வியொன்றுக் 23☛

## சர்வமத பிரார்த்தனை நாளை பயண ஒழுங்குகள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் மேற்கொண்டுள்ள தொடர் போராட்டத்தின் நூறாவது நாளில் முன்னெடுக்கவுள்ள மாபெரும் சர்வமத பிரார்த்தனையில் கலந்து கொள்வோருக்கான பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

வடக்கில் வலிந்து 23☛

## ஆயுதங்களுடன் புகுந்து திருட்டு

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை கிழக்கு சித்தன்கேணியில் நேற்றுக் காலை வேளை திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கத்தி, கோடரிகளுடன் வந்த 5 பேரைக் கொண்ட திருடர்கள் குழுவினரே துணிகரமாக வீடு ஒன்றினுள் புகுந்து 6 பவுண் தங்க நகை மற்றும் அறுபது ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 23☛

## இராணுவ அச்சுறுத்தல்களால் கல்விச் செயற்பாடு பாதிப்பு!

### சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு



(பளை)

வட- கிழக்கிலே வாழ்கின்ற எங்கள் பிள்ளைகள் தற்போதைய காலகட்டத்திலும் பல்வேறுபட்ட நெருக்கீடுகளுக்கு மத்தியில்தான் தமது கல்வியைத் தொடர வேண்டிய நிலை காணப்படுகின்றது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் 24☛

## பதுளையில் காட்டுத் தீ; வனப்பகுதி எரிந்து நாசம்

(பதுளை)

பதுளை கிறனர்பின் பாதுகாக்கப்பட்ட வனாந்தரப் பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீ காரணமாக ஏராளமான வனப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளது.

தென்மேற்கு பருவப் பெயர்ச்சி காரணமாக தென்னிலங்கை உள்ளிட்ட சில இடங்களில் மழை பெய்த போதிலும் நாட்டின் வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்கள் கடும் வரட்சி 23☛

## பல்கலை அனுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

2016-ம் ஆண்டு நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட பீடங்கள் மற்றும் திணைக்கள 23☛

## இறைச்சிக்காக மாடுகளை விற்பனை செய்யத் தடை

### இந்திய மத்திய அரசு உத்தரவு

(புதுடில்லி)


இந்தியா முழுவதும் இறைச்சிக்காக மாடுகள் விற்பனை செய்வதை பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு தடை செய்துள்ளது.

மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் அண்மையில் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் இத்தகவல் கூறப்பட்டு உள்ளது

இனிமேல், சந்தைகளில் விவசாய தேவைகளுக்காக மட்டுமே மாடுகளை விற்பனை செய்யவோ, வாங்கவோ முடியும். கசாப்பு தொழிலுக்காக, இறைச்சி தேவை 23☛

## விநாயகமூர்த்தி காலமானார்


(யாழ்ப்பாணம்)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் மூத்த அரசியல்வாதியும் மனித உரிமை வாதியுமான சட்டவாளர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தனது 84 ஆவது அகவையில் 23☛

# வட மாகாண விளையாட்டு வீரர்கள் தேசிய ரீதியில் முன்னணி வகிப்பர்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் நம்பிக்கை பாராட்டு



(யாழ்ப்பாணம்)

**எமது வட மாகாண விளையாட்டு வீரர்கள் தேசிய ரீதியில் முன்னணி வகிக்கக்கூடிய ஒரு நிலையை அடைவார்கள் என நம்பிக்கை தெரிவித்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கடுமையான பயிற்சிகளும் மன உறுதிகளும் வெற்றிகளை குவிக்க வேண்டும் என்ற உத்வேகமும் விளையாட்டு வீரர்களிடத்தில் மிளிரவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.**

யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில். நேற்று பிற்பகல் இடம்பெற்ற வட மாகாண விளையாட்டுப்போட்டியின் நிறைவு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முதலமைச்சர் தனது உரையில் மேலும் குறிப்பிடுகையில்,

வெற்றி பெற்றவர்கள் இறுமாப்பு கொள்ளவும் கூடாது. அதேபோல் தோற்றவர்கள் துவண்டு விடவும் கூடாது.

சிறந்த விளையாட்டுவீரர்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும் கூட எல்லா விடயங்களையும் பதற்றம் இல்லாது ஏற்றுக்கொள்வார்கள். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, புரிந்துணர்வு ஆகிய நல்ல பழக்க வழக்கங்களை உருவாக்க இவ் விளையாட்டு நிகழ்வுகள் பெரிதும் உதவுகின்றன.

அத்துடன் விளையாட்டு என்பது வீரவீராங்கனைகளின் உடலுக்கு மேலும் வலுவைச் சேர்க்கவும் மூளைக்கு புத்துணர்வைத் தரவும், சகோதர மனப்பான்மையை வளர்க்கவும் சிறந்த ஒரு நிகழ்வாக அமைகின்றது.

வட மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நிகழ்வுகளின் விளைவாக இங்குள்ள வீரவீராங்கனைகள் தமது பயிற்சிகளை முறையாக மேற்கொள்வதற்கு ஏற்ற பயிற்சியாளர்கள் இல்லாமை, பயிற்சி பெறுவதற்கு ஏற்ற விளையாட்டு உபகரணங்கள் இல்லாமை, உள்ளக, வெளியக விளையாட்டு அரங்கங்கள் இல்லாமை போன்ற காரணங்களால் விளையாட்டு நிகழ்வுகளில் ஏனைய மாகாணங்களில் உள்ள வீரவீராங்கனைகளை விட சற்றுக் குறைவாகவே செயற்பட வேண்டியிருந்தது. எனினும் எம்மவர்களை சர்வதேச தரத்தில் உள்ள வீரவீராங்கனைகளுக்கு ஒப்பானவர்களாக உருவாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே எமது விளையாட்டுத் திணைக்களம் மிகப் பெரிய அளவில் கூடுதலான நிதிச் செலவீனங்களுடன் இந் நிகழ்வுகளை பிரதேசமட்டம், மாவட்டமட்டம், மாகாண மட்டம் என பல மட்டங்களில் நடத்தி வீரவீராங்கனைகளை தெரிவு செய்திருக்கின்றார்கள்.

இவை யாவும் எமது இளைஞர் யுவதிகளின் செயற்பாட்டை மிளிரச் செய்யும் என்பதில் எமக்கு எந்தவித சந்தேகமுமில்லை.

ஒரு விளையாட்டு வீரனுக்கு அல்லது வீராங்கனைக்கு இருக்க வேண்டிய சிறந்த பண்புகளில் ஒன்றுதான் வெற்றி தோல்விக்கு அப்பால் பங்குபற்றல் என்ற நிலைப்பாடு. முடிந்தது மட்டும் இடைவிடாது முயற்சி செய்பவன் இறுதியில் வெற்றியாளன் ஆவான். இப்பேர்ப்பட்ட போட்டிகள் எமது இளைஞர் யுவதிகளை இடைவிடாத பயிற்சிகளிலும், போட்டிகளிலும் பங்குபற்றச் செய்து அவர்கள் தரத்தை உயர்த்த உதவி செய்யும் என்பது எமது எதிர்பார்ப்பு.

எந்தவொரு நிகழ்விலும் கலந்து கொள்ளுகின்ற போது மனதில் வெற்றி பெற வேண்டும் என்ற போட்டித் தன்மை இருக்க வேண்டும். ஆனால் அதுபொறாமையாக மாறி விடாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும்.

வெற்றி நிச்சயம் என்ற மனோதிடம் செயற்கரியனவற்றை செய்யஉதவும். தெய்வமும் அதற்குத் துணைநிற்கும்.

எமது விளையாட்டு வீரர்களைப் பொறுத்தமட்டில் அவர்களிடம் சிறந்த உடல் வலிமையும் மனஉறுதியும் இருப்பதை நான். பல தடவைகளில் அவதானித்திருக்கின்றேன். ஆகவே உங்களின் கடுமையான பயிற்சிகளும் மனஉறுதிகளும் வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என்ற உத்வேகமும் மிகவிரைவில் எமது வடமாகாண விளையாட்டு வீரர்கள் தேசிய தரத்தில் முன்னணி வகிக்கக் கூடிய ஒருநிலையை உருவாக்கும் என்பதில் ஐயம் இல்லை.

படிப்பில் சிறந்து விளங்கும் பலர் சுயநலம் மிக்கவர்களாக இருப்பதை நாம் காண்கின்றோம். விளையாட்டில் மட்டும் சிறந்து விளங்கும் பலருக்கு பொது அறிவு குறைவாக இருப்பதையும் காண்கின்றோம். ஆகவே கல்லூரிகள் தமது மாணவச் செல்வங்கள் படிப்பிலும் விளையாட்டிலும் ஆர்வம் மிக்கவர்களாக விளங்க ஆவன செய்ய வேண்டும். சமனான மனோபாவம் உடையவர்களாகத் தமது மாணவ சமுதாயத்தை உருவாக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# சொந்த மண்ணில் வாழவிடுங்கள்

## இரணைதீவு மக்கள் கோரிக்கை



(கிளிநொச்சி)

சிறந்த கடல் வளத்துடன் சிறப்பாக வாழ்ந்த ஊரை இழந்துவிட்டு, தற்போது நொடிந்து நோயாளர்களாக வாழ்ந்து வருவதாக கவலை தெரிவிக்கும் கிளிநொச்சி இரணைதீவு மக்கள், தாம் தமது சொந்த மண்ணுக்கு செல்வதற்கான அனுமதியை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தங்களது பூர்வீக நிலமான இரணைதீவுக்குச் சென்று குடியேறுவதற்கான அனுமதியை பெற்றுத்தருமாறு கோரி கிளிநொச்சி இரணைதீவு மக்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் மேற்கொண்டு வரும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம், நேற்று 28 நாட்களை தொடர்ந்து வருகின்ற நிலையில் இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களே இக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

செல்வம் கொழிக்கும் வகையிலும், தொழில் வளங்கள் நிறைந்த நிலையிலும் காணப்பட்ட தமது ஊரில் இருந்து பலர் பட்டதாரிகளாகவும் உருவாகியுள்ளனர் எனக் குறிப்பிடும் இம் மக்கள், தற்போது எவ்வித வசதிகளும் இன்றி வாழ்வதாகவும், தமது ஊருக்குச் செல்லும் ஆவலுடன் காத்திருப்பதாகவும் மேலும் தெரிவித்தனர்.

இம் மக்களின் பூர்வீக நிலம், தற்போது கடற்படையினரின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற நிலையில் அதனை மீட்க மக்கள் தொடா போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

# சுற்று நிருபங்களை சுற்றி வையுங்கள்!

## நிவாரண பணி செய்யுங்கள்- மனோ

சட்டம், விதிகள் என்ற சுற்று நிருபங்களை சுற்றி வைத்து விட்டு நிவாரண பணிகளை செய்யுங்கள். சுற்று நிருபங்களில் இருக்கின்ற விதிகளை காட்டி தாமதம் செய்யாமல், நிவாரண பணிகளில் இறங்குங்கள். இதற்கு அனைத்து அமைச்சர்களும், எம்பிக்களும் துணை இருக்கின்றோம். இதுவே இன்று எங்கள் அரசாங்க கொள்கை என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனும், பிரதி தலைவர் பழனி திகாம்பரமும் நேற்றுமுன்தினம் களுத்துறை மாவட்ட வெள்ள சேதங்கள் மற்றும் நிவாரண நடவடிக்கைகளை ஸ்தலத்துக்கு சென்று பார்வையிட்டனர். மதுராவெளை பகுதியில் வெள்ளத்தில் மரணம் அடைந்தவர்களின் இறுதிக்கிரியைகளிலும் கலந்து கொண்டனர்.

அப்பிரதேசத்தில் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளுக்கு உரிய பணிப்புரைகளையும், ஆலோ சனைகளையும் அமைச்சர்கள் மனோ கணேசனும், பழனி திகாம்பரமும் வழங் கினர். அவ்வேளையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

தேவையான அளவு நிதி இருக்கின்றது. இந்திய அரசு முதல் பல்வேறு நட்புறவு நாடுகள் எங்களுக்கு உதவுகின்றன. சுத்தமான நீர், உலர் உணவு அல்லது சமைத்த உணவு, அவசியமான இடங்களில படகுகள், கூடாரங்கள், மருந்து வகைகள், உள்ளாடைகள் உட்பட ஆடைகள் ஆகிய அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இவற்றை விநியோகிக்க இராணுவத்தினர், விமானப்படையினர், கடற்படையினர் இரு க்கின்றனர். எனவே சுற்று நிருபங்களில் இரு க்கின்ற விதிகளை காட்டி தாமதம் செய்யாமல், அவற்றை சுற்றி வைத்து விட்டு நிவாரண பணிகளில் இறங்குங்கள். இதற்கு அனை த்து அமைச்சர்களும், எம்பிக்களும் துணை இருக்கின்றோம் என மனோ கணேசன் குறிப்பிட்டார். (செ)

# பேராசிரியர் சண்முகலிங்கன் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்து ஒன்றில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ)

# நிவாரண பணிகள் நிறைவுறும்வரை வாகன கொள்வனவு இடைநிறுத்தம்

(அம்பாந்தோட்டை)

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் நிறைவுறும்வரை அமைச்சர்களுக்கான புதிய வாகனக் கொள்வனவு இடைநிறுத்தப்படவுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த தகவலை அம்பாந்தோட்டையில் வைத்து நேற்று அவர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் அமரவீர, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளை திருத்தியமைத்துக் கொள்ள 20 இலட்சம் வரையான நிதியுதவி அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் இயற்கை அனர்த்தங்களின் காரணமான உயிரிழப்புகளின் போது இதுவரை வழங்கப்பட்ட 15 ஆயிரம் ரூபாய் நிதியை ஒரு மில்லியன் வரை அதிகரிப்பது குறித்தும் அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளது.

இந்நிலையில் பொதுமக்களுக்கான அனர்த்த நிவாரணப் பணிகள் நிறைவுறும் வரையில் அமைச்சர்களுக்கான புதிய வாகனக் கொள்வனவுகள் இடைநிறுத்தப்படவுள்ளது.

அத்துடன் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான நலன்புரி சேவைகள், விசேட ஏற்பாடுகளை இடைநிறுத்தி அவற்றுக்குச் செலவிடப்படும் பணத்தையும் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணப் பணிகளுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (செ)

ARPICO Insurance
வேலைவாய்ப்பு
காப்புறுதி துறையில் IBSL பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு ARPICO INSURANCE இல் அடிப்படைச் சம்பளத்துடன் (EPF, ETF) கூடிய கீழ்க் குறிப்பிடப்படும் பணிநிலைகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு வழங்கவுள்ளது.
Agency Managers
Agency Leaders
Consultants
அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
காலம் : 30.05.2017 நேரம் - 10.00 A.M
இடம் : 86, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா சந்தி அருகாமை)
தொடர்பு : 077 2417007
(9057)

# தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் முகாம்கள் தீவிர கண்காணிப்பில்

## தீவிரவாதிகள் ஊடுருவல் அச்சம்

(சென்னை)

**தமிழகம் முழுவதும் இலங்கை அகதிகள் முகாம்கள் ஊடாக தீவிரவாதிகள் ஊடுருவி விடக் கூடாது என்பதற்காக கண்காணிப்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக பொலிஸார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

இலங்கையில் உள்நாட்டு போர் நடந்த போது சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் அகதிகள் தமிழகத்திற்கு சென்றனர்.

இதற்காக தமிழகத்தில் 95 இடங்களில் அகதிகள் முகாம்கள் அமைக்கப்பட்டன. இலங்கையில் உள்நாட்டு போர் முடிவுக்கு வந்தவுடன், தமிழகத்தில் இருந்த 30 ஆயிரம் அகதிகள் கடந்த நான்கு ஆண்டுகளில் இலங்கைக்கு திரும்பிசென்ற னர்.

மீதமுள்ள 95 ஆயிரம் இலங்கை அகதிகள் அந்தந்த முகாம்களில் வசித்து வருகின்றனர். இலங்கை அகதிகள், அரசின் அனுமதி பெறாமல் உறவினர்களை தங்களுடன் தங்கவைத்தனர்.

அகதிகள் போர்வையில் தீவிரவாதிகள் தங்கி நாசகார செயல்களில் ஈடுபட வாய்ப்புள்ளதாக, இந்திய மத்திய புலனாய்வு பிரிவுக்கு இரகசிய தகவல் தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து, இந்திய மத்திய அரசின் அறிவுறுத்தலின் பேரில் தமிழக அரசு, இலங்கை அகதிகள் முகாம்களை கண்காணிக்க இரகசிய உத்தரவிட்டது.

அனைத்து மாவட்ட எஸ்பி அலுவலகத்திலும் இதற்கென ஒரு பிரிவு உருவாக்கப்பட்டது.

அவர்கள் முகாம்களிலுள்ள இலங்கை அகதிகள் குறித்த விபரங்களை வாரம் தோறும் சேகரித்து மாவட்ட எஸ்பிமற்றும்சென்னை தலைமையிட பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்பி வருகின்றனர்.

எஸ்.பி அலுவலகத்தில் உள்ள இந்த பிரிவில் அந்தந்த மாவட்டங்களிலுள்ள அகதிகள் முகாமைச் சேர்ந்தவர்கள் ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களை தவிர்த்து தினமும் அல்லது அவர்கள் விரும்பும் நாட்களில் தங்களது அடையாள அட்டை மூலப்பிரதியை நேரில் காண்பித்து, நகல் ஒன்றை அளித்து கையெழுத்து அல்லது விரல் ரேகை பதிவு செய்து தங்களது குடும்பத்தினர் பற்றிய விபரங்களை தெரிவிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கூறுகையில், 'இலங்கை அகதிகள் போர்வையில் வெளிநாட்டு, உள்நாட்டு தீவிரவாதிகள், நக்சல்கள் யாரேனும் தங்கி விடக்கூடாது என்பதற்காக இந்த விபரங்களை சேகரிப்பதும், சோதனையிடுவதையும் வழக்கமாக கொண்டுள்ளோம்.

இது நம் நாட்டு மக்கள் மற்றும் இலங்கை அகதிகளின் நலனுக்காகவே செய்யப்படுகிறது' என்றார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு தமிழகத்திலிருந்து இலங்கை கடற்பகுதிக்கு சென்ற படகை இலங்கை கடற்படையினர் வழிமறித்து விசாரணை நடத்தினர்.

அதில் தமிழகத்தை சேர்ந்த இருவர் மற்றும் மியன்மார் நாட்டைச் சேர்ந்த 29 அகதிகள் இருந்தது தெரியவந்தது.

இவர்கள் அனைவரும் கடந்த ஜனவரி மாதம் 23ம் திகதி தூத்துக்குடியிலிருந்து தஞ்சை மாவட்டம் அதிராம் பட்டினத்திற்கு வந்துள்ளனர்.

மியன்மார் அகதிகள் என்பதால் அங்குள்ளவர்களில் சிலர் அவர்களுக்கு உதவிசெய்துள்ளனர். பின்பு இவர்கள் அனைவரும் இலங்கைக்கு செல்ல முயன்ற போது இலங்கை கடற்படையினரிடம் சிக்கி கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-7)



ஜனநாயக ஆளுகையையும் பொறுப்புக்கூறலையும் பலப்படுத்துதல் எனும் தொனிப்பொருளில், இலங்கை பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்கள் வலுவூட்டல் கருத்தரங்கு நேற்றைய தினம் யாழ்.கிறீன்கிறாஸ் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார மற்றும் சிறுவர் பெண்கள் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த கருத்தரங்கில் வடக்கில் உள்ள மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மகளிர் அபிவிருத்தி நிலைய அதிகாரிகள், பெண்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

### பருத்தித்துறையில் இன்று காலை

## கடற்றொழிலாளர்கள் கவனயீர்ப்பு ஊர்வலம்

கடற்றொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று காலை பருத்தித்துறையில் கவனயீர்ப்பு ஊர்வலம் ஒன்று நடைபெறும். பருத்தித்துறையில் உள்ள துறைமுக அபிவிருத்தியின் போது முதலில் குறிக்கப்பட்ட எல்லையை விட கொட்டடி, முனை கடல் தொழிலாளர்கள் படகுகள் நிறுத்தும் பகுதிக்குள் பின்னர் எல்லை குறிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் 300 வரையான படகுகளை நிறுத்துவதற்குரிய இடம் இல்லாமல் போகவுள்ளமைக்கு கவலை தெரிவித்துள்ள மீனவர்கள் இந்த எல்லையினை முன்னர் குறிக்கப்பட்ட எல்லைக்கு மாற்றுமாறே இக் கவனயீர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபடவுள்ளனர்.

காலை 9 மணியளவில் பருத்தித்துறை கொட்டடியில் இருந்து பதாகைகளை தாங்கியவாறு அமைதியான முறையில் ஆரம்பமாகும் ஊர்வலம் பிரதான வீதியால் சென்று பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் மகஜர் கையளிப்புடன் நிறைவடைய உள்ளதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். (இ-60)

## இந்தியாவின் இரண்டாவது கப்பல் இலங்கைக்கு வந்தது

இலங்கையில் வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக நிவாரணப்பொருட்களை வழங்குவதற்காக, இந்தியாவின் இரண்டாவது கப்பலான ஐ.என்.எஸ் ஷார்துல் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை நேற்றுக் காலை வந்தடைந்தது. இந்தக் கப்பல், மேலதிக படகுகள், இலங்கை அதிகாரிகளால் கோரப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய, அதிகளவான நிவாரணப் பொருட்களுடன் வந்தடைந்துள்ளது. (இ-7)

## ஆறுகளால் ஆபத்து

நில்வள கங்கையில் ஏற்பட்டுள்ள நீர் அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாத நிலையில் பாரிய அனர்த்த நிலை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதற்கமைய அக்குரஸ்ஸவில் இருந்து மாத்தறை நகரம் வரை நில்வள கங்கைக்கு அருகில் உள்ள பிரதேச மக்களை உடனடியாக வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொடகட, ஹித்தட்டிய, துடாவ, மாலிம்பட, சிறிபானாகொட, மாதுருதுவ, பரஹத்கொட, கந்துவ ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு இதனால் பாதிப்பு ஏற்படகூடும் என அடையாளம் காணப்பட் டுள்ளது.

இதனால் மாத்தறை வைத்தியசாலையின் நோயாளிகளை வெளியேற்றுமாறு வடிகால் மற்றும் நீர்ப்பாசன துறை திணைக்களத்தின் வெள்ள அமைப்பு அதிகாரிகள் அறிவிப்பு விடுத்துள்ளனர். (இ-7)

## சர்வதேசத்தின் உதவியை நாடுவதே முஸ்லிம்களுக்கு வழி-சிப்லி பாறூக்

(கொழும்பு)

இந்த நாட்டிலுள்ள முஸ்லிம்கள் தங்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டிய தேவைப்பாடு எழுந்துள்ளது எனக் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்தார்.

தற்போது முஸ்லிம்களுக்கு உள்ள ஒரேயொரு வழிமுறை சர்வதேச சமூகத்தின் உதவியை நாடுவது மாத்திரமே எனத் தெரிவித்த அவர், இலங்கையிலுள்ள அனைத்து சர்வதேச தூதுவராலய உயர்ஸ்தானிகர்கள் ஊடாகவும் தமது பிரச்சினைகளை முஸ்லிம்கள் முன்வைக்க முடியும் எனவும் கூறினார்.

இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் செயற்பாடுகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு, அரபு லீக் ஆகியவற்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

காத்தான் குடியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

### கடும் காற்று, கடல் கொந்தளிப்பால்

## மட்டக்களப்பில் 25 ஆயிரம் மீனவக்குடும்பங்கள் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் வீசி வரும் கடும் காற்று மற்றும் கடல் கொந்தளிப்புக் காரணமாக 25 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ருக்ஷான் குரூஸ் நேற்று தெரிவித்தார்.

கடற்றொழிலில் ஈடுபடும் 14 ஆயிரம் மீனவக் குடும்பங்களும் வாவி மீன்பிடியில் ஈடுபடும் 11 ஆயிரம் மீனவக் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

கடும் காற்றும் மற்றும் கடல் கொந்தளிப்புக் காரணமாக இம்மாவட்டத்தில் மீன்பிடி நடவடிக்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பூநொச்சிமுனை, ஏத்துக்கால, புன்னைக்குடா, நாவலடி, வாகரை உட்பட பல கரையோரப் பிரதேசங்களில் கடும் காற்று வீசி வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

மீன்பிடி நடவடிக்கைக்காக கடலுக்கு மீனவர்களைச் செல்ல வேண்டாம் என்று கடற்றொழில் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## சம்பியன்ஸ் டிராபி பயிற்சிப் போட்டி

# இந்தியா அமர்க்கள ஆரம்பம்



சம்பியன்ஸ் டிராபி தொடரை இந்தியா வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளது. பயிற்சி போட்டியல்மழை குறுக்கிட, 'டக்வெர்த்-லீவிஸ்' முறைப்படி நியூசிலாந்தை 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இங்கிலாந்தில், வரும் ஜூன் முதலாம் திகதி ஐ.சி.சி., சம்பியன்ஸ் டிராபி தொடர் ஆரம்பமாகிறது. இதில் 'நடப்பு சம்பியன்' இந்தியா, அவுஸ்திரேலியா, இலங்கை உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கின்றன. அதற்கான ப்யிற்சி ஆட்டங்கள் தற்போது நடக்கின்றன.

லண்டன் ஓவல் மைதானத்தில் நடந்த பயிற்சி போட்டியில் இந்தியா, நியூசிலாந்து அணிகள் நேற்று மோதின. இந்திய அணியில் யுவராஜ் சிங், ரோகித் சர்மா இடம்பெறவில்லை.

**ஷமி அசத்தல:** நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு, மொஹமட் ஷமி தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' மார்டின் கப்டில் (9), அணித் தலைவர் வில்லியம்ஸன் (8), நீல் புரூம் (0) ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த கோரி அண்டர்சன் (13), புவனேஷ்வர் பந்தில் போல்டானார்.

மொஹமட் ஷமி வீசிய 9வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் விளாசிய லூக் ரோஞ்சி, அரைச் சதமடித்தார். ரவிந்திர ஜடேஜா 'சுழலில்' ரோஞ்சி (66), கிராண்ட்ஹோம் (4) சிக்கினர். மிட்சல சான்ட்னர் (12) நிலைக்கவில்லை. அஷ்வின் வீசிய 26ஆவது ஓவரில் 2 பவுண்டரிகள் அடித்த ஜேம்ஸ் நீஷம், ஆறுதல் தந்தார். அடுத்து வந்த அடம் மில்ன் (9), ரிம் சௌதி (4), டிரண்ட் போல்ட் (9) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

நியூசிலாந்து அணி 38.4 ஓவர்களில் 189 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. நீஷம் (46) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் ஷமி, புவனேஷ்வர் தலா 3, ஜடேஜா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**ஹோலி நம்பிக்கை:** சுலப இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ரஹானே (7) ஏமாற்றினார். பின் இணைந்த ஷிகர் தவான், அணித் தலைவர் ஹோலி ஜோடி நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தது. இரண்டாவது விக்கெட்டுக்கு 68 ஓட்டங்கள் சேர்த்த போது நீஷம் பந்தில் தவான் (40) வெளியேறினார். தினேஷ் கார்த்திக் 'டக்-அவுட்' ஆனார்.

**மழை பாதிப்பு:** விராத் ஹோலி, அரை சதம் கடந்தார். இந்திய அணி 26 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 129 ஓட்டங்கள் எடுத்திருந்த போது கனமழை பெய்ய, ஆட்டம் பாதியில் ரத்துச் செய்யப்பட்டது. ஹோலி (52), தோனி (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பின், 'டக்வொர்த் - லீவிஸ்' முறைப்படி வெற்றிக்கு 26 ஓவரில் 84 ஓட்டங்களை இந்திய அணி எடுத்திருக்க வேண்டும். எனினும் இந்திய அணி 26 ஓவரில் 129 ஓட்டங்கள் எடுத்திருந்ததால், 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றதாக அறிவிக்கப்பட்டது.

லண்டன், ஓவல் மைதானத்தில் நாளை நடக்கவுள்ள 2ஆவது பயிற்சி போட்டியில் இந்தியா, பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

## கோபோ டெல் ரொய் கால்பந்து தொடர்

# பார்சிலோனா சம்பியன்



கோபா டெல் ரெய் கால்பந்து தொடர் இறுதிப் போட்டியில் டெபோர்ட்டிவோ அலெவ்ஸ் அணியை 3:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி பார்சிலோனா சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

கோபா டெல் ரெய் கால்பந்து இறுதிப் போட்டி நேற்று மட்ரிட்டில் நடைபெற்றது.

இதில் பார்சிலோனா - டெபோர்ட்டிவோ அலெவ்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

ஆட்டத்தின் 30ஆவது நிமிடத்தில் மெஸ்சி முதல் கோலை பதிவு செய்தார். அடுத்த 3ஆவது நிமிடத்தில் அலெவ்ஸ் அணிக்கு 'பிரிஹிக்' வாய்ப்பு கிடைத்தது. அதை பயன்படுத்தி ஹெர்னாண்டஸ் தியோ சிறப்பாக கோல் அடித்தார். இதனால் 1:1 என இரு அணிகளும் சமநிலையில் இருந்தது.

45ஆவது நிமிடத்தில் மெஸ்சி கொடுத்த அபாரமான பந்தை நெய்மர் கோலாக்கினார். முதல்பாதி நேரத்தின் கூடுதல் நேரத்தில் மெஸ்சி பாஸ் செய்த பந்தை அல்காசெர் அபாரமாக கோல் அடித்தார். இதனால் முதல் பாதி நேரத்தில் பார்சிலோனா 3:1 என முன்னிலை பெற்றது.

பின்னர் இரு அணிகளும் கோல் அடிக்காததால் பார்சிலோனா 3:1 என வெற்றி பெற்று தொடர்ந்து 3ஆவது முறையாக கோபா டெல் ரெய் கிண்ணத்தை கைப்பற்றியது. இந்த கிண்ணத்துடன் பார்சிலோனா 29ஆவது முறையாக கோபா டெல் ரெய கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

கடைசி 64 வருடத்தில் தொடர்ந்து 3ஆவது முறையாக கோப்பையை வென்ற அணி என்ற பெருமையையும் பெற்றுள்ளது.

## இலங்கையை புரட்டிப்போட்ட வெள்ளம்

# கிரிக்கெட் வீரர்களின் உருக்கமான பதிவுகள்

நாட்டின் தென்மாகாணம் உட்பட 12 மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையினால் இம்மாவட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், 150க்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளனர். 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்படைந்துள்ளனர்.


மீட்பு படையினர் விரைந்து மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் இங்கிலாந்தில் நடக்கும் சம்பியன்ஸ் டிராபி தொடருக்காக இலங்கை வீரர்கள் இங்கிலாந்து சென்றுள்ளனர்.


நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் மிகுந்த சோகத்திற்குள்ளாகியுள்ள இலங்கை கிரிக்கெட் வீரர்கள் தங்களின் உருக்கமான பதிவுகளை பதிவேற்றம் செய்துள்ளனர்.

இலங்கை அணியின் தலைவரான மத்தியூஸ் தனது டுவிட்டர் பக்கத்தில், போட்டி முடிந்த பின்னர் சோகமான செய்தியைக் கேட்டேன். நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்காக பிரார்த்தனை செய்துகொள்வதாக பதிவேற்றம் செய்துள்ளார்.

இந்த பதிவேற்றத்தில் மத்தியூஸ் #pray for sri lanka என்ற ஹாஸ் டேக்கையும் பயன்படுத்தியுள்ளார்.

இவரைத் தொடர்ந்து இலங்கை அணியின் முன்னாள் வீரரான ஜெயவர்த்தன,





இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக பிரார்த்தனை செய்து கொள்கிறேன் என்று பதிவேற்றம் செய்துள்ளார்.

இலங்கை அணியின் மற்றொரு முன்னாள் வீரரான சங்கக்கார தனது டுவிட்டர் பக்கத்தில். இந்த வெள்ளம் மற்றும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவருக்காகவும் பிரார்த்தனை செய்து கொள்கிறேன், பாதுகாப்பாக இருங்கள் என்று பதிவேற்றம் செய்துள்ளார்.

## சம்பியன்ஸ் டிராபி தொடர்

# மலிங்கவை நம்பியிருக்கும் இலங்கை

சம்பியன்ஸ் டிராபி தொடரில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் இலங்கை அணி மலிங்கவின் மஜிக் பந்துவீச்சை நம்பியிருக்கிறது.


சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் ஜூன் முதலாம் திகதி தொடங்குகிறது. இதில் இடம்பிடித்துள்ள 8 அணிகளில் இலங்கையும் ஒன்று. இலங்கை அணி 'பி' பிரிவில் இடம்பிடித்துள்ளது.

இதே பிரிவில் தென்னாபிரிக்கா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் உள்ளன. இளம் வீரர்களை கொண்ட இலங்கை அணி சமீபகாலமாக சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை.

சிம்பாப்வே, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடரை வென்றாலும், இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான தொடரை இழந்திருந்தது.

இளம் வீரர்களை கொண்டு சம்பியன்ஸ் டிராபியில் சாதிக்க முடியாது என்று நினைத்த இலங்கை கிரிக்கெட் சபை மலிங்க மற்றும் காயத்தில் இருந்து மீண்ட மத்தியூஸ் ஆகியோரை இலங்கை அணியில் சேர்த்துள்ளது.

மலிங்க கடந்த 18 மாதங்களாக கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை. தற்போது இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடினார்.



அவர் ரி20 போட்டிகளில் மட்டுமே கலந்து கொண்டுள்ளார். இதனால் 10 ஓவர்கள் வீசக்கூடிய அளவிற்கு உடற்தகுதி பெறுவாரா? என்ற கேள்வி எழுந்தது.

ஆனால் சம்பியன்ஸ் டிராபி தொடர் 10 ஓவர்கள் வீசி, தனது மஜிக் பந்தின் மூலம் இலங்கை அணிக்கு வெற்றியை தேடித் தருவார் என்று இலங்கை கிரிக்கெட் சபை நம்புகிறது.

இதுகுறித்து இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்கா சுமதிபால கூறுகையில், "மலிங்கவின் உடற்தகுதி முன்னேற்றம் அடைந்து வருகிறது. அவர் சம்பியன்ஸ் டிராபி தொடரில் 10 ஓவர்கள் பந்து வீசுவார் என்று நம்புகிறோம்" என்றார்.

மலிங்க 10 ஓவர்கள் வீசினால் அது இலங்கை அணிக்கு மிகக்பெரிய உதவியாக இருக்கும். மலிங்கவைத் தவிர சுராங்க லக்மல், நுவான் பிரதீப், நுவான் குலசேகர, திசர பெரேரா போன்ற வேகப்பந்து வீச்சாளர்களும் உள்ளனர்.





திக்கம் பகுதியில் 1987 ஆம் ஆண்டு நடந்த வன்செயல்களால் உயிரிழந்த மக்களின் 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும், இரத்ததானமும், மலர் வெளியீட்டு விழாவும் நேற்று இடம்பெற்றது. காலை 9 மணியளவில் திக்கம் கலாசார மண்டபத்தின் மத்திய சனசமூக நிலையத் தலைவா் த. திருவரங்கன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 1987 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 29,30,31 ஆம் திகதிகளில் இடம்பெற்ற வன்செயல்க ளினால் உயிரிழந்த 24 பேரின் படங்களுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர்களின் நினைவாக **தியாக தீபங்கள்** பாகம் இரண்டு நூல் வெளியிடப்பட்டதுடன் இரத்த தானம் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

படங்கள்:- மகாலிங்கம்

# அனர்த்தம் காரணமாக 3 இலட்சத்திற்கும் அதிகமான மின் இணைப்புகள் துண்டிப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக சுமார் 3 இலட்சத்து 36 ஆயிரத்திற்கும் அதிகமான மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் சக்திவலு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பாதிப்புக்களுக்குள்ளான பிரதேசங்களில் காணப்படும் மின்வசதிகள் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

"மின்சாரத் துண்டிப்பு தொடர்பில் இலங்கை மின்சார சபையின் 1987, இலங்கை தனியார் மின்சார நிறுவனத்தின் 1910 அல்லது 1901 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து தெரியப்படுத்த முடியும். மாத்தறை, காலி, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் கொழும்பின் பல பாகங்களில் மின் விநியோகத்தடை குறித்து மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பாதுகாப்புக் கருதி பல இடங்களில் மின்சாரத் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. அனர்த்தங்களைக் குறைக்கும் வகையிலேயே இவ்வாறு மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ளது" என சுலக்ஷன ஜயவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இந்து மாமன்றத்தின் நிவாரண உதவி

இலங்கையின் பல பாகங்களிலும் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளைச் செய்ய அகில இலங்கை இந்து மாமன்றம் முன்வந்துள்ளது. இதற்கு பொருளாகவோ / நிதியாகவோ உதவவிரும்புவோர் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகம், 91/5, சேர். சிற்றம்பலம் ஏ - கார்டிணர் மாவத்தை, கொழும்பு -02(011 243 4990/011 234 4720), அகில இலங்கை இந்துமாமன்ற யாழ். பணிமனை, 211/17, கோயில் வீதி, நல்லூர் (021 222 1075), இந்து வித்தியாவிருத்திச் சங்கம் சரஸ்வதி மண்டபம், இல.75, லோறன்ஸ் வீதி, பம்பலப்பிட்டி (011 258 5975), விவேகானந்த சபை, இல 34, விவேகானந்த மேடு, கொழும்பு -13 ( 011 242 2646), மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம், ஞான வைரவர் தேவஸ்தானம், பெரியகடை வீதி, மன்னார் (023 222 2205) ஆகிய இடங்களில் ஒப்படைக்கலாம் மேலும் விபரங்களுக்கு சின்னத்துரை தனபாலா - 077 763 1787 (சமூகநலன் குழுத் தலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்) ஜெ.நிரோஷ்காந் - 077 767 8858 (சமூகநலன் குழுச் செயலாளர்-அகில இலங்கை இந்து மாமன்றம்) ஆகியோரையும் தொடர்பு கொள்ள முடியும்.

மாமன்றத்தின் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு உங்கள் நிதியுதவியைச் செலுத்தி வைப்புச் சீட்டினை எமக்கு அனுப்பி வைத்தால் மாமன்றத்தின் பற்றுச்சீட்டு உடனடியாக அனுப்பி வைக்கப்படும். வங்கி விபரம் இலங்கை வங்கி (லேக் ஹவுஸ் கிளை) கணக்கு இலக்கம் - 3268614 **SWIFT CODE :** BCEYLKLX : BCEYLKLX என இந்து மாமன்றம் அறிவித்துள்ளது. (இ-7)


## மத்திய மகா அஞ்சலிகள்

**அமரர் திருமதி. சொர்ணம் இராமநாதன்**



ஏமது பாடசாலையின் உப அதிபர்
**திருமதி. யோகேஸ்வரி நடராசா**
அவர்களின் அன்புத்தாயார்
**அமரர் திருமதி.**
**சொர்ணம் இராமநாதன்**
அவர்களின் பிரிவால் துயருற்று
இருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**நலன்புரிச்சங்கம்**
**கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்**
**கிளிநொச்சி.**

(9050)

## 30 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

**அமரர். திரு. கா. ஆழ்வாப்பிள்ளை**

("உரிமையாளர் சந்திராஸ்" சூ பலர்ஸ், யாழ்ப்பாணம்)

தோற்றம் : 13.02.1935 மறைவு : 29.05.1987



என்றும் எங்கள் மனதில்
உங்கள் அன்பு
நீங்காது இருக்கும் ஐயா
உங்கள் அன்பை என்றும் மறவாத
உங்கள் பிரிவால் துயருறும்

திரு.க.தர்மகுலசிங்கம் (மூத்த மருமகன்)
திருமதி.த.சந்திரமலர் (மூத்த மகள்)
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

"சந்திரபவனம்" மனோகரா,
அல்வாய்.

(6712)


## இராசி பலன்

29.05.2017
(வைகாசி 15, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 4.54 மணிவரை
புனர்பூசம் மாலை 6.57 மணிவரை
சுபநேரம் 11.52 - 1.22 மணிவரை
இராகுகாலம் 7.22 - 8.52 மணிவரை
சதுர்த்தி விரதம், அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சூரி புத | செவ் சந் |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கேட்டை, மூலம்<br>பகல் 1.18 மணிக்கு<br>கடக - சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உற்றார், உறவினர்களின் வருகையுண்டு, வெளியூர்த்தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை.

**மிதுனம்** உண்மையான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும்.

**கடகம்** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், பயணத்தில் பலன் கிடைக்கும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், திடீர் பயணமொன்று ஏற்படலாம்.

**கன்னி** எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விரதங்களில் நம்பிக்கை கூடும், இளைய சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம்.

**துலாம்** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிக்க நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையும், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்** நினைத்த காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், உறவு - பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள்.

**மீனம்** பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.

# நீண்ட நேரம் அரசியல் பேச தெரியாது நீண்ட நோக்கோடு பணி செய்வேன்


## மாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாகாணசபை உறுப்பினர் பதவியையோ அல்லது மாவட்ட அமைப்பாளர் பதவியையோ ஜனாதிபதி எனக்கு தந்த போது கிடைக்காத பேரின்பம் இன்று கிடைத்திருக்கின்றது அதற்கு வடமராட்சி சிகை ஒப்பனை சங்கத்தினரே காரணம் என சி. அகிலதாஸ் தெரிவித்தார்,


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் .மாவட்ட அமைப்பாளராக வட மாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் நியமிக்கப்பட்டமையை கௌரவித்து வடமராட்சி சிகை ஒப்பனை சங்கத்தினர் நடத்திய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்

வடமராட்சி மண்ணில் நான் வளர்ந்த நெல்லியடி நகரில் நான் எதிர்பார்க்காத



வகையில். என்னை அழைத்து கௌரவிப்பது மிக்க மகிழ்ச்சி அளிக்கின்றது.

நான் சிறு வயதுமுதல் இனம், மதம், மொழி சாதி சமயம் பார்ப்பவன் அல்ல அது என்னோடு பழகிய நண்பர்கள் பலருக்கு தெரிந்திருக்கும். மற்றய அரசியல் தலைமைகளைப் போன்று சகோதர சகோதரிகளே என்று கூறிவிட்டு ஒலிவாங்கியைவிட்டு போனவுடன் சொன்னதை மறப்பவனும் அல்ல நான் எனக்கு நீண்ட நேரம் அரசியல் பேச தெரியாது. ஆனால் நீண்ட நோக்கோடு மக்கள் பணி செய்ய தெரியும். உமில்லியன் ரூபாவினை வாக்கு பெறுவதற்காக ஏனைய உறுப்பினர்கள் பல இடங்களுக்கு பகிர்ந்து அளிக்கும்போது நான் குடிசையில் வாழும் மூன்று குடும்பங்களுக்கு கல்வீடு அமைப்பதற்கு அந்நிதியை வழங்கியிருந்தேன். எனது நோக்கம் எதை மக்களுக்கு செய்தாலும் அது திருப்தியாக அமையவேண்டும் என்பதாகும் இன்று மாகாண சபை உறுப்பினரான நான் நாளை அப்பதவியில் இல்லாமல் போகலாம் ஆனால் பதவி இருந்தாலும் இல்லாமல் போனாலும் மக்களுக்கான எனது பணி தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)



யாழ்.நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவின் போது நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அன்ரன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# பிரம்மோற்சவம்

காரை நகர் கள பூமி பாலா வோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரம்மோற்சவம் நாளை 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் எதிர்வரும் 9 ஆம் திகதி பூங்காவனத் திரு விழாவும் நடைபெறவுள்ளது. (இ-7)

# அந்தோனியார்ஆலய வருடாந்த திருவிழா

யாழ். பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி ( வியாழன் ) மாலை 5 மணிக்கு திருச் செபமாலையும் கொடி யேற்றமும் குழந்தையேசு சுருபத்தடியில் வழிபாடும் ஆரம்பமாகும். 2.6.2017 வெள்ளி மாலை 5 மணிக்கு வரவேற்பு அந்தோனியார் சுருபத்தடியில் வழிபாடும் 3.6. 2017 மாலை 5 மணிக்கு கடல் அந்தோனியார் சுருபத்தடியில் வழிபாடும் தொடர்ந்து நவநாள் வழிபாடுகள் மாலை 5 மணிக்கு திருச் செபமாலை யுடன் ஆரம்பமாகி 13.6.2017 தேர்ப்பவனியுடன் நிறைவு பெறவுள்ளது. (இ-105)




# நிவாரணப் பொருட்கள் சேகரிப்பு

கன மழையினால் பாதிக்கப்பட்ட சகோதர தென்பகுதி உறவுகளுக்கு உதவ லொறி மூலம் யாழ். மாவட்டத்தில் நிவாரணப் பொருட்கள் இன்று திங்கட் கிழமை காலை முதல் சேகரிக்கப்படவுள்ளன.

யாழ் .மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் கந்தசுவாமி கருணாகரன் அதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார். தென் பகுதியில் பெய்த கடும் மழையினால் 13 மாவட்டங்களைச் சேர்ந்த பல இலட்சம் மக்கள் செய்வதறியாதுதவிக்கின்றனர்.

இம் மக்களின் துன்ப துயர நிலைகளுக்கு வடக்கில் இருந்து தென் பகுதிக்கு உதவி எனும் தொனிப் பொருளில் உதவ யாழ். மாவட்ட மக்கள் முன்வர வேண்டும்.

நல்லெண்ண உதவிக்கு எமது உறவுகள் உடுபுடைவைகள் (பெற்சீற் , துவாய், சறம், சேலை) சுகாதாரப் பொதிகள்(சோப்/பனடோல் , பால்மா வகைகள்) உலர் உணவு பொருட்கள் ( மீன் ரின் , சீனி,பிஸ்கற் , உணவுப் பொருட்கள் (உலர்) மற்றும் தண்ணீர் போத்தல் உட்பட தங்களால் ஆன உதவிகளை மனமுவந்து வழங்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் .மாவட்ட அமைப்பாளர் கந்தசுவாமி கருணாகரன் கேட்டுள்ளார்.

இடர் பாதித்த மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் சேகரிப்பு லொறி பவனி இன்று திங்கட் கிழமை காலை 8.30 மணிக்கு (29/05/2017 யாழ். ஆரியகுளம் சந்தியில் உள்ள சந்நிதி முருகன் கடையில் ஆரம்பித்து யாழ். நகர் முழுவதும் சுற்றி வரும். இதனை தொடர்ந்து திருநெல்வேலி- கோண்டாவில்- மருதனார்மடம் - சுன்னாகம்- மானிப்பாய் ஊடாக யாழ் வந்து சேரும்.

மேற்படி லொறி மூலமான மனிதாபிமான உதவியில் உதவி பொருள் சேமிப்பு திட்டத்திற்கு யாழ். மாவட்ட பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்ம ரட்ண முழு அனுமதியை வழங்கியுள்ளார்.

எனவே யாழ் .குடா நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் இவ் உதவி திட்டத்திற்கு ´ உங்கள் கரங்கள் மூலம் உதவுமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்படி உதவி வழங்கல் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கருணாகரனின் தொலைபேசியூடாக 077749 6998, 077 201 8275 விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

இதில் 20 பேர் கொண்ட தொண்டர் அணி உதவிப் பொருட்கள் பெறும் பணியில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

# யாழ். உயர் தொழில் நுட்பவியல் புதுமுக மாணவர்கள் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உயர்தொழில் நுட்பவியல் நிறுவன உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நாளை முற்பகல் 10 மணியளவில் யாழ். சரஸ்வதி மண்டபத்தில் நா. யதுர்சன் தலைமையில் நடைபெறும்.

இவ் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நிறுவன பணிப்பாளரும் பொறியியலாளருமான சி.ஆர் ரவீந்திரன் , சிறப்பு விருந்தினராக நிறுவன பழைய மாணவர் சங்க செயலாளரும் யாழ். மாவட்டச் செயலக அபிவிருத்தி உத்தியோகத்தருமான வி. தயாபரன், கௌரவ விருந்தினராக கணக்கியல் துறைத் தலைவர் திருமதி எல். சூரியகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# வீதி தடை செய்யப்படும்

கொக்குவில் மேற்கு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் 29.05.2017 திங்கட் கிழமை தொடக்கம் 04. 06. 2017 ஞாயிற்றுக் கிழமை வரை இடம் பெறயிருப்பதால் ஆலய கிரியைகள் நேரமாகிய காலை 6.00 மணி தொடக்கம் நண்பகல் 12. மணி வரையும் பிற்பகல் 4 மணி தொடக்கம் இரவு 10 மணிவரையும் வீதி மூடப் பட்டிருக்கும். வட திசையில் ஆடியபாதம் வீதிக்கும், தென் திசையும் பூநாறி வீதிக்கும் இடையில் மணியர்பதி வீதியில் ஆலயம் அமைந்திருப்பதால் ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு வாகன இடையூறுகள் ஏற்படாது தடுப்பதற்காக (கிரியைகள் நடைபெறும் நேரம்) மேற் குறிப்பிட்ட இரு வீதியையும் தடை செய்து தருமாறு நல்லூர் பிரதேச சபையிடம் விடப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (இ)

# யாழ். ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ். மாவட்டத்திற்கான 2 வது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை 30 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடை பெறும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ-7)

# வாக்காளர் தினத்தை முன்னிட்டு வடமராட்சியில் விழிப்புணர்வு

வாக்காளர் தினத்தினை முன்னிட்டு தேர்தல்கள் ஆணைக் குழுவினால் வடமராட்சிப் பகுதியில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஜுன் முதலாம் திகதி வாக்காளர் தினமாகும் எனவே அன்று பதினெட்டு வயதினைப் பூர்த்தி செய்தவர்கள் தங்களது கிராம அலுவலரினால் வழங்கப்படும் வாக்காளர் படிவத்தினை பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறும் கோரப்பட்டது.

மேலும் இப் பதிவு பல்கலைக்கழக அனுமதி இழப்பீடு போன்றவற்றை பெறுவதற்கு பயன்படும். வாக்காளராக பதியாது விடுவதும் வாக்களிக்காது விடுவதும் உங்கள் உரிமைகளை நீங்களே இழந்தவராக கருதப்படுவீர்.

எனவே பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் கிராம அலுவலரினால் வழங்கப்படும் படிவத்தை பூர்த்தி செய்து ஒப்படைக்கும் படி ஒலி பெருக்கி மூலம் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-60)

# கலாபூசண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரல்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இவ் வருடத்திற்கான கலாபூசண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதில் கலைக்கு விசேட சேவையாற்றிய 2017.12.15 ஆம் திகதி 60 வயதைப் பூர்த்தி செய்த பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் கலைஞர்கள் 2017.06.10 ஆம் திகதிக்கு முன்னர் தங்களுடைய கலைசார் விபரங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவில் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ

# போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் வடக்கு மாகாணத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பின்வரும் கற்கை நெறிகளினை கற்பிக்கும் போதனாசிரியர்கள் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

காய்ச்சி ஒட்டுபவர் (வெல்டர்), வெதுப்பக உற்பத்தியாளர் , சமையலாளர் ,முன் பள்ளி ஆசிரியர் பயிற்சி ,கட்ட நிர்மாண உதவியாளர், மின் மோட்டார் மீள் முறுக்குநர், விவசாய இயந்திர உபகரணங்கள் திருத்துனர், வெளியிணைப்பு படகு இயந்திர திருத்துனர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர் , தோற் பொருள் மற்றும் கைப்பை உற்பத்தியாளர்.

கல்வித் தகைமை

கா.பொ.த. சாதாரண தரத்தில் ஒரு அமர்வில் தமிழ் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அத்துடன்

தொழிற் தகைமை

இலங்கை மூன்றாம் நிலைதொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப /தொழிற் பயிற்சி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழிற் தகைமை மட்டம் - 5 (NVQ -5) பெற்றிருத்தல்

அல்லது

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் குறித்த தொழிற் துறையில் டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றிருத்தல் அத்துடன்

அனுபவம்

குறித்த துறையில் ஆகக் குறைந்தது 1 வருடம் உள்நாடு அல்லது வெளிநாடு கற்பித்தல் அனுவபம் இருத்தல் வேண்டும். அத்துடன்.

வயதெல்லை

18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவர்கள் தங்கள் சுயவிபரக் கோவை மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை 1 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம் இல. 12 கே.கே. எஸ். வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 5.6.2017 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ


52

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



வன்னிப்போரை நிறுத்தக்கோரி சகோதரன் முத்துக்குமார் தீக் குளிப்பதற்கு முன்னதாக எழுதி வைத்த மரண வாக்குமூலத்தை கடந்த இரண்டு தொடர்களில் பார்த்தோம்.

தன்னுயிரைத் தியாகம் செய் வதற்கு முன்னதாக முத்துக்குமார் எழுதிய வாக்குமூலத்தை வாசித்த



உங்களில் சிலர் நீண்டு விட்டது என்று கூடச் சலிப்படைந்திருக்க லாம்.

ஆனால் எங்களுக்காகத் தன்னு யிரைத் தியாகம் செய்த தமிழக த்துச் சகோதரனின் மரண வாக்குமூலத்தை வாசிக்காமல் விடுவது அவனின் தியாகத்தைக் கொச்சைப்படுத்துவதாக அமைந்து விடும் என்பதால்தான் அதனை அப்படியே இங்கு தந்தோம்.

தவிர,எங்களின் முகமறியாத ஒரு பிறவி தன்னுடலுக்குத் தீயி ட்டு ஓ! உலகமே என் ஈழத்துத் தமிழ்ச் சகோதரர்களைக் காப்பா ற்று, சிங்களப் பேரினவாதம் என் ஈழத்து உடன் பிறப்புக்களைக் கொன்று குவிப்பதைத் தடுத்து நிறுத்து என உரக்கக் குரல் எழுப்பிய முத்துக் குமாருக்கு ஈழத் தமிழினம் என் றும் நன்றியுடையதாக இருக்க வேண்டும்.

எங்களுக்காக என்று கூறி எங்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்தில் பதவிபெற்ற பின் எங்களுக்கு எதிராகச் செயற் படும் கயவர் மத்தியில் முத்துக் குமாரின் தியாகம் வான் கடந்தது என்று சொல்வதில் எந்தத் தவறும் இருக்காது.

சகோதரன் முத்துக்குமாரைத் தொடர்ந்து தமிழகத்திலும் மலே சியா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலும் உள்ள தமிழ்ச் சகோ தரர்கள் வன்னி யுத்தத்தை நிறுத்தக் கோரி தங்கள் உடலை உயிரோடு எரித்துக்கொண்டனர். அந்தத் தியா கிகளை நாம் அறிந்து வைத்திருப்

## ராஜீவ் காந்தியின் கொலை புலிகளுக்கு பாதகமாயிற்று

பது மிகவும் அவசியமாகும்.

அந்தத் தியாகிகள் என்றும் நம் இதயங்களில் இருத்தப்பட வேண்டிய தெய்வங்களாவர். அவர்களின் பெயர், ஊர், அவர்கள் தங்களை ஆகுதியாக்கிய நாள் என்பன வருமாறு,

திண்டுக்கல் மாவட்டம் பள் ளப்பட்டி இரவி (02.02.2009), சீர்காழி இரவிச்சந்திரன் (07.02.2009), சென்னை அமரேசன் (08.02.2009), கடலூர் தமிழ்வேந்தன் (18.02.2009), சென்னை சிவப்பிரகாசம் (21.02. 2009),சிவகாசி கோகுலகிருட்டிணன் (25.02.2009),வாணியம்பாடி சீனிவாசன் (01.03.2009),பெரம்பலூர் எழில்வளவன் (05.03.2009), கடலூர் ஆனந்த் (15.03.2009), அரியலூர் இராசசேகர் (17.03.2009), புதுக் கோட்டை பாலசுந்தரம் (22.03.2009), சிவகாசி மாரிமுத்து (22.03.2009), கரூர் சிவானந்தன் (17.04.2009), திருப்பூர் சுப்பிரமணி (23.04.2009), ஆகியோர் தமிழ்நாட்டிலும் மலே சியாவில் ஸ்ரீபன் ஜெகதீசன் (01.02.2009), ராசா (07.02.2009), சுவிட் சர்லாந்தில் முருகதாசன் (12.02.2009) ஆகியோர் ஈழத்தமிழர்களுக்காக தம் உடலை உயிரோடு எரித்துக் கொண்டனர்.

உலகில் எந்த இனத்திலும் நடக்க முடியாத ஒரு தியாகமாக ஈழத்தின் தமிழ்ச் சகோதரர்களுக்காக உலகு வாழ் தமிழ்ச் சகோதரர்கள் தீக்குளி த்து தம்முயிரை ஆகுதியாக்கினர். இச்சம்பவம் தமிழ் மக்களை கடு மையாகப் பாதித்தது.

இவற்றையெல்லாம் பார்த்த கலைஞர் கருணாநிதி தள்ளா வய திலும் நாடகம் நடத்தத் தலைப் பட்டார்.

வழமையில் நாடகம், திரைக் கதை வசனம் எழுதிய கலைஞர் கருணாநிதி இப்போது கதையையும் எழுதி நாடகத்தையும் தானே நடிக்கலானார்.

ஆம், வன்னிப் போரை நிறுத்தக் கோரி கலைஞர் கருணாநிதி உண்ணாவிரதமிருக்கிறார். அவரின் உண்ணாவிரத நாடகம் சில மணி நேரம் நடக்கிறது. இந்திய ஊடகங் கள், கலைஞர் கருணாநிதி உண்ணா விரதம்; ஈழத்தமிழர்களுக்காக என்று உரத்துச் செய்தி சொல்கின்றன.

அவ்வளவுதான். உலக மேடை யில் கலைஞர் கருணாநிதியின் உண்ணா விரத நாடகம் அரங்கேறியது. இன் றைய பாகுபலி-2 எந்த மூலைக்கு என்று கூறுமளவில் கலைஞரின் உண்ணாவிரத நடிப்பு, இருந்த இடத்தில் இருந்து கொண்டு மிகப் பிரமாதமாக நடந்து முடிந்தது. அந்த உண்ணாவிரதத்தோடு வன்னி யுத்தம் நிறுத்தப்பட்டதான தக வல்களும் வெளிவருகின்றன.

இந்தத் தகவல் வன்னிப் போரில் அகப்பட்ட மக்களுக்குச் சென் றடைந்ததோ என்னவோ தெரியா தாயினும் இந்தச் செய்திகள் ஊட கங்களில் ஒலித்துக் கொண்டிரு க்கும் போது வன்னிக் கொடும் போரில் தமிழ் மக்கள் சூடுபட்டு நிலத்தில் வீழ்ந்து தம் செங் குருதியால் புழுதி மண்ணை நனைத்தபடி உயிர் நீத்த வண்ணம் இருந்தனர்.

அட! நெஞ்சுக்கு நீதி எழு திய- திருக்குறளை குறளோ வியமாகத் தந்த கலைஞரா இப்படியொரு துரோகம் செய் தார் என்று எண்ணி இடி விழுந்து கலைஞரே! உனக்கு உன் மகன் அழகிரிதான் சரி என்று சொல்லுமளவில் எங்க ள் நிலைமை இருந்தது.

அந்தளவிற்கு ஈழத்தமிழ் மக்களை கலைஞர் கருணா நிதி ஏமாற்றினார்.

வன்னியில் நடந்த யுத் தத்தை தடுத்து நிறுத்தக்கூடிய வல்லமை கலைஞர் கருணா நிதிக்கு இருந்ததாயினும் அதை அவர் செய்யாமல் விட்டதற் கும் காரணம் உண்டு. அதா வது ஈழத்தமிழ் மக்கள் மீது அவருக்கு வெறுப்பு இல்லை யாயினும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அவர் கடும் கோபம் கொண்டிருந்தார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொ லையே அதற்குக் காரணமா கும். முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம் பவம் கலைஞர் கருணாநிதி, செல்வி ஜெயலலிதா ஆகி யோருக்கு மட்டுமன்றி தமி ழகத்தின் ஏனைய அரசியல் தலைவர்களு க்கும் மிகுந்த கவலையையும் நெருக்கடியையும் கொடுத்தி ருந்தது.

ராஜீவ் காந்தியைக் கொல் வதாக இருந்தாலும் அதைத் தமிழ் நாட்டில் செய்திருக்க க்கூடாது என்பது அவர்களின் நிலைப் பாடு.

(வளரும்)

-புருசோத்தமன்-

# இரண்டு கோடியே 50 இலட்சம் ரூபா நிதியில் நான்கு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்

## கரைச்சி பிரதேச சபை செயலாளர் கம்சநாதன் தெரிவிப்பு

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியொதுக்கீடான 2. கோடியே 50; இலட்சம் ரூபா செலவில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் 4. வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் கணேசன் - கம்சநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையினால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி ஒதுக்கீடு 2 கோடியே 50 இலட்சம் ரூபா உதவியுடன் கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பின் தங்கிய பிரதேச கிராம மக்கள் நலன் சார்ந்த 4 வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.


இதற்கமைய,கரைச்சி பிரதேச பிரிவுக்குட்பட்ட கல்லாறுக் கிராம மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு 60 இலட்சம் ரூபா நிதி செலவிடப்படவுள்ளது.

இதேவேளை,உருத்திரபுரம் கிராமத்தில் உள்ள 2. ஆம் குறுக்கு வீதி புனரமைப்புச் செய்வதற்காக ஒரு கோடியே 20, இலட்சம் ரூபா நிதி செலவிடப்படவுள்ளது.

இந் நிலையில், வட்டக்கச்சி மக்களின் நலன் கருதி இலவச ஆயுள்வேத சித்த மருத்துவ வைத்தியசாலை அமைப்பதற்காக 30, இலட்சம் ரூபாவுடன், கரைச்சிப் பிர தேச சபையின் நிதி 17. இலட்சம் ரூபாவு மாக மொத்தம் 47, இலட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் கூடிய ஆயுள்வேத வைத்திய சாலைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

மருதநகர் கிராமத்தில் சிறுவர்களின் பொழுது போக்கு வசதிகளை மேம்படுத்தும் வகையில் நவீன வசதிகளுடன் கூடியதாக சிறுவர் பூங்கா ஒன்று 40, இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

ஒட்டு மொத்தமாக இந்த 4, வேலைத் திட்டங்களுக்கும் வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீடு 2, கோடியே 50,இலட்சம் ரூபாவும், எமது சபையின் நிதி ஒதுக்கீடு 17,இலட்சம ரூபாவுமாக மொத்தம் 2 கோடியே 67, இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-15)




# கிளிநொச்சி இ.செ.சங்கத்தின் புதிய ஆளுநர் சபை தெரிவு

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சி கிளையின் புதிய ஆளுநர் சபை நேற்று முன்தினம் தெரிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் செல்லையா சிவகுருநாதன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே புதிய ஆளுநர் சபை தெரிவு நடைபெற்றது.

புதிய நிர்வாகத்தெரிவில் இரண்டு தரப்புக்கிடையில் கடும் போட்டிக்கு மத்தியில் வாக்கெடுப்பின் மூலம் புதிய ஆளுநர் சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது. புதிய ஆளுநர் சபை தெரிவில் 71 பொதுச் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தலைவர் தெரிவு நடைபெற்றது. வாக்கெடுப்பில் 41.28 எனும் வாக்குகள் அடிப்படையில் அ.வேழமாலிகிதன் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சி கிளையின் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

இதே போன்று செயலாளர் தெரிவிலும் வை. வைகுந்தன் மற்றும் சேதுபதி ஆகியோர் போட்டியிட்டு வாக்கெடுப்பின் மூலம் 41 க்கு 30 என்ற அடிப்படையில் சேதுபதி செயலாளராக தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து உப தலைவராக த.பிரபாகரன், பொருளாளராக பொ.பத்மகாந்தன், ஆளுநர் சபை உறுப்பினர்களாக க.சச்சிதானந்தசிவம், க.திருலோகமூர்த்தி, ச.சந்திரசேகரம், ஆ.இராசரத்தினம், இ.செல்வராசா, ச.பெர்ணான்டோ ஆகியோரும்தெரிவு செய்யப்பட்டனர். (2-5-312)

# துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் அரச கால்நடை வைத்தியர் விடுதிகள் விரைவில்

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி 17.76 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் உள்ள அரச கால்நடை வைத்தியர் விடுதிகள் அமைக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,


வன்னியில் இடம் பெற்ற இறுதிக்கட்ட போரின்போது அழிவடைந்த பிரதேசங்களைக் கட்டி எழுப்பும் வேலைத் திட்டத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரண்டு இடங்களில் அரச கால்நடை வைத்தியர் விடுதிகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கமைய, துணுக்காயில் 9.33 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளது. புதுக்குடியிருப்பில் 8.43 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

தற்போது இவ் வேலைகளுக்கான கேள்வி கோரல்கள் கோரப்பட்டுள்ள நிலையில், வெகு விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதங்களிற்குள் நிறைவு செய்யப்படவுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)

# வன்னேரியில் சுற்றுலா மையம் திறப்பு





(பரந்தன்)

வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதி ஆறு மில்லியன் ஒதுக்கீட்டில் வன்னேரியில் அமைக்கப்பட்ட கரைச்சிப் பிரதேச சபையின் கீழுள்ள சுற்றுலா மையம் வடக்கு மாகாண முதலமைச்சரினால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பறவைகள் சரணாலயமாகக் காணப்படுகின்ற வன்னேரிக் குளத்தை அண்டிய பகுதியிலேயே இச் சுற்றுலா மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதிக்கு வெளி நாட்டில் இருந்து பருவகாலப் பறவைகள் அதிகம் வருகை தருகின்றமையால் குறித்த பிரதேசத்தை எதிர்காலத்தில் மிகப்பெரிய சுற்றுலா மையமாக்கும் நோக்கோடு இம் மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்குமாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர்,கரைச்சிப் பிரதேச சபை செயலாளர், கரைச்சிப் பிரதேச செயலர் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-5-312)

**'வாழ்வோம் வளம் பெறுவோம்'**

# செயற்றிட்டத்தினுள் 384 குடும்பங்கள் உள்ளீர்ப்பு



வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனினால் முன்னெடுக்கப்படும் வாழ்வோம்வளம்பெறுவோம்செயற்றிட்டத்தின் பதினொராம் கட்டமானது நேற்று முன்தினம் மக்கள் தொடர்பகத்தில் நடைபெற்றது.

புலம்பெயர் அன்பர்களின் நிதிப் பங்களிப்பில் முன்னெடுக்கப்பட்ட குறித்த செயற்றிட்டத்தின் 11ஆவது கட்டத்தில் நாற்பத்தைந்து குடும்பங்கள்உள்ளீர்க்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, இதுவரையில் 384 குடும்பங்களை உள்ளீர்த்திருப்பதாக து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

வாழ்வோம் வளம் பெறுவோம் செயற்றிட்டத்தில் கடந்த 5,6,7,8,9,11ஆம் கட்டங்களில் 213குடும்பங்களுக்கு 285340.00ரூபா தொகையில் உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# வீடமைப்பு அதிர்ஷ்டலாபச் சீட்டுக்குலுக்கல்; ஆறு சமுர்த்திப் பயனாளிகள் தெரிவு

## மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புதல் அமைச்சின் கீழுள்ள சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாடு தழுவிய ரீதியில் உள்ள சமுர்த்தி பயனாளிகளிகளுக்கிடையே மாதாந்தம் நடைபெற்று வரும் வீடமைப்பு அதிர்ஷ்டலாபச் சீட்டுக் குலுக்கலில் முல்லைத்தீவு மாவட்டத்தின் 6, பிரதேச செயலக பிரிவுகளிலும் இருந்தும் தலா ஒருவர் வெற்றி பெற்றுள்ளதாக மாந்தை கிழக்கு செயலாளர் இ. றமேஸ், தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு தழுவிய ரீதியில் உள்ள சமுர்த்தி உதவிபெற்று வரும் குடும்பங்களிற்கிடையே நடைபெற்று வரும் சமுர்த்தி வீடமைப்பு அதிர்ஷ்டலாபச் சீட்டுக் குலுக்கலில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற அதிர்ஷ்டக் குலுக்கலில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் 06, சமுர்த்தி பயனாளிகள் வெற்றியீட்டியுள்ளனர்.

இதற்கமைய, மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில், கணேசன் - பூமாணி, பரிசுச் சீட்டு இலக்கம் - 38298, கரைதுறைப்பற்று பிரதே செயலகப் பிரிவில் இருந்து, தவீந்திரன் - நிர்மலாதேவி, பரிசுச் சீட்டு இலக்கம் - 354121, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் இருந்து,கதிர்வேலு - யசோதரன் - பரிசுச் சீட்டு இலக்கம் -311702, புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் இருந்து,யோகராசா - பத்மினி, பரிசுச் சீட்டு இலக்கம் - 194745, துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் இருந்து, முருகையா - விக்கினேஸ்வரி 402836,வெலிஓயா பிரதேச செயலக பிரிவில் இருந்து, பீ. பீ. ரன்ஜனி பரிசுச் சீட்டு இலக்கம் - 181392, ஆகிய 06, சமுர்த்தி பயனாளிகள் வெற்றியீட்டியுள்ளதாக சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புதல் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வெற்றியீட்டியவர்களுக்கு தலா 02, இலட்சம் ரூபா பணப் பரிசு வழங்கப்படவுள்ளது.

இப்பரிசிலில் மூலம் சமுர்த்தி அலுவலரின் ஒப்புதலுடன் புதிதாக வீடு ஒன்றை அமைத்துக் கொள்ளலாம் அல்லது காணி ஒன்றைக் கொள்வனவு செய்யலாம், அல்லது வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்கில் சுய தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம், அல்லது உயர் கல்வி கற்று வரும் பிள்ளைகளின் எதிர்காலக் கல்விக்காகச் செலவு செய்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-15)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பிரிவுகளில் ஆளணிப் பங்கீடு அதிகரிக்கப்படவேண்டும்

## செயலாளர் அறிவிப்பு

(மல்லாவி )

கிளிநொச்சி மாவட்டத்தின் கீழ் உள்ள பச்சிலைப் பள்ளி பிரதேசபையின் பல்வேறு பிரிவுகளில் ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருவதால் பொது மக்களுக்கான தேவைகளையும் சேவைகளையும் நிறைவேற்றுவதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாக பச்சிலைப்பள்ளி பிரதேசபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பச்சிலைப்பள்ளி பிரதேசபையில் 18 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மொத்தம் 3 ஆயிரத்து 925 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 756 அங்கத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். மக்கள் இடப்பெயர்வின் பின்னரான மீள் குடியேற்றத்தின் போது குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் வாழுகின்ற மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வளப் பங்கீடுகள் மற்றும் ஆளணிப் பங்கீடுகள் அதிகரிக்கப்பட வேண்டும். பிரதேசசபையின் ஆளணி வளப் பங்கீடானது பல வருடங்களுக்கு முற்பட்ட மக்கள் தொகையின் மதிப்பீட்டுக்கு அமைய த்யாரிக்கப்பட்டவையாக காணப்படுகின்றது.

இதனால் தற்போது அதிகரித்துள்ள மக்கள் தொகைக்கு ஏற்பவும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற வகையிலும் ,ஆளணித் தொகுதியிலும் மாற்றம் செய்ய வேண்டும் என எமது மேலதிகாரிகளுக்கு புள்ளி விபரத் தகவல்கள் ஊடாக தெரியப்படுத்தியுள்ளோம்.

இதன்பிரகாரம் சுகாதார பணியாளர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள், நூலகர்கள், வரி அறவீட்டாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், காவலாளிகள், சாரதிகள் உட்பட பல்வேறு பதவி நிலைகளுக்கு ஆளணி வளப்பங்கீடு அதிகரிக்கப்பட வேண்டும். இவ்வாறான நிலையில், பொதுமக்கள் உட்பட அனைத்து தரப்பினருக்குமான பிரதேசசபையின் சேவைகளையும், தேவைகளையும் பிரதேச சபையின் கீழ் உள்ள முள்ளிப்பற்று (இயக்கச்சி), முகமாலை, புலோப்பளை ஆகிய மூன்று உப அலுவலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகி ன்றது.

தற்போது எமது சபை யின் கீழ் உள்ள ஆளணிப்பட்டியலுக்கு அமைவாக ஆளணிப்பற்றாக் குறைவாகவுள்ளது.

முகாமைத்துவ உதவியாளர் 10 பேர் கடமையாற்ற வேண்டிய நிலையில், தற்போது 9 பேர் உள்ள நிலையில் ஒரு முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடம் காணப்படுகின்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 6 பேர் கடமையாற்ற வேண்டிய நிலையில், தற்போது 4 பேர் மட்டுமே கடமையாற்றி வருகின்ற நிலையில் 2 பேர் பற்றாக் குறையாக காணப்படுகின்றது. நூலகர்கள் 3 பேர் தேவையான இடத்தில் 2 பேர் உள்ள நிலையில் ஒரு நூலகர் பதவி வெற்றிடமாகவே உள்ளது.

ஆயுள் வேத மருந்தாளர்கள் 2பேர் தேவையான இடத்தில் தற்போது 2 பேர் கடமையில் உள்ள நிலையில் ஒரு மருந்தாளர் பதவி வெற்றிடமாகவே உள்ளது.

இதே போன்று, சுகாதார பணியாளர்கள் 10, பேருக்கு அனுமதி காணப்படும் நிலையில் 9 பேர் கடமையில் உள்ளனர், ஆயினும் இந்த பணிநிலைக்கான ஆளணியினர் தொகையும் அதிகரிக்கப்பட வேண்டும். 4 காவலாளிகள் வெற்றிடங்களுககு 2 பேர் கடமையாற்றும் நிலையில் 2 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. மேலும் பௌசர் வண்டிகளுக்கும், கழிவு முகாமைத்துவ வாகனங்களுக்கான சாரதிகள் பற்றாக்குறை காணப்படுகின்றது,

தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் 3 பேர் கடமையாற்ற வேண்டிய நிலையில் தற்போது 2 பேர் மட்டும் கடமையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)




# ஆயுதப் போராட்டத்தால் தான் மாகாணசபை உருவாகியது

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு

ஆயுதப்போராட்டத்தால் தான் மாகாணசபை உருவாகியது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா, ஓமந்தை, நாவற்குளத்தில் வாழ்ந்த கனகசபை நல்லதம்பி (உடையார்) யின் நூற்றாண்டு விழாவும் ஞாபகார்த்த மண்டப திறப்பு விழாவும் நடைபெற்ற போது நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர்மேலும் தெரிவித்ததாவது,எங்களது கிராமங்களை, பிரதேசங்களை கட்டியெழுப்ப பல ஆயிரம்கோடி நிதி தேவையாகவுள்ளது. ஒரு பக்கம் நாங்கள் அரசாங்கத்துடன் மோதவேண்டியுள்ளது. மறுபக்கம் எங்களது கட்சிக்குள்ளே தனிநபர் ஆதிக்கம் காரணமாக எடுக்கப்படுகின்ற முடிவுகளால் கட்சிக்குள்ளும் நாங்கள் சில விடயங்களை கையாள வேண்டியுள்ளது. இன்று எங்களுக்குள்ளே ஒரு மாகாணசபை உருவாகியுள்ளது என்றால் அது ஒரு ஆயுதப்போராட்டத்தால் தான் உருவாகியுள்ளது. ஆயுத போராட்டம் தான் பல கசப்பான அனுபவங்களை எங்களுக்கு தந்தாலும் கூட அந்த ஆயுத போராட்டம்தான் உலகத்தை தமிழ் மக்கள் பக்கம் திரும்பி பார்க்க வைத்துள்ளது. வடகிழக்கு இணைந்த மாகாண சபை இருந்தது என்றால் எங்களது ஆயுத போராட்ட காலத்தில் தான். எங்களது போரிலே பாதிக்கப்பட்ட கை, கால், கணவனை இழந்து பாதிக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலகட்டத்தில் தான் நாங்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆகவே எங்களுக்கு கீழ் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கும் நாங்கள் உதவி செய்ய வேண்டும்' என்றார். இதன்போது அக்கிராமத்தில் வாழ்ந்து வரும் முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந் நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், எம். தியாகராசா, ஆர்.இந்திரராஜா உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-5-250)

# பளை பிரதேச சபை; புதிய கட்டடம் திறப்பு



வடக்குமாகாண முதலமைச்சரின் அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட பளை பிரதேசசபைக்கான புதிய கட்டடம் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் திறந்து வைத்தார். மேலும் இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி .சிறீதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கல்வி அமைச்சர் த.குருகுலராஜா. வடக்குமாகாண சபை உறுப்பினர் அரியரத்தினம் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் உட்பட பலரும்கலந்து கொண்டனர். (2-5-111)

### உயிலங்குளம் மாதிரிக் கிராமத்தில்

# பயனாளிகள் இதுவரை குடியேறாத வீடுகள்; வீடுகள் இல்லாதவர்களுக்கு வழங்கப்படும்

## மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் கிராமத்தில் மக்கள் மீள் குடியேற்றத்தின் பின்னரான காலங்களில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட 50 வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வீடுகளில் இன்னமும் குடியேறாத குடும்பங்களது வீடுகளை வீடுகள் இல்லாது இருக்கும் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு பெற்றுக் கொடுக்கப் படவுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, மற்றும் இந்துமத விவகார அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இது தெடர்பாக மேலும் தெரிய வருவதாவது கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் கேள்வி விடை நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா எழுப்பியிருந்த கேள்விக்கு பதில் அளித்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில், துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உயிலங்குளம் மாதிரிக் கிராமத்தில் தற்போது 25 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவர்களுக்கு மின்சார இணைப்பு வசதிகள், குழாய் கிணறு வசதிகள், மற்றும் வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த மாதிரி கிராமத்தில் குடியிருப்பவர்களுக்கு வயல் நிலங்கள் இல்லாமையாலும், மற்றும் பொருத்தமான வாழ்வாதார தொழில் வாய்ப்புக்கள் இல்லாத காரணத்தாலும் குடியிருப்பாளர்கள் இங்கிருந்து இடம் பெயர்ந்து வருகின்றனர்.

வீடுகள் வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு காணிக்கான அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், வழங்கப்பட்ட வீடுகளில் பலர் நிரந்தரமாக குடியிருக்காத காரணத்தினால் அனுமதி பத்திரங்களை வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

எனவே,வீடுகள் வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு காணி அனுமதி பத்திரங்கள் இன்னமும் வழங்கப்படாத காரணத்தினால் அவர்களுக்கு உத்தியோகபூர்வமாக இந்த அறிவித்தலை வழங்கி வேறு பயனாளிகளுக்கு காணியுடன், வீட்டையும் வழங்க இடமுண்டு.

அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் இந்த. வீட்டுத்திட்டத்தில் உள்ள வீடுகளை மாற்றுத் திறனாளிகள், மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு மாற்றி வழங்க முடியும்.

இதற்கான நடவடிக்கைகளை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மேற் கொள்வார் என மேலும் அவர் தெரிவித் துள்ளார். (2-5-15)


# 'பொலித்தீன் பாவனைக்குத் தடை' வித்தியாலயத்தில் விழிப்புணர்வு


கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணிவரை பொலீத்தின் பாவனையைத்தடை செய்தல் பற்றிய விழிப்புணர்வு செயற்பாடு வித்தியாலய முதல்வர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்விற்கு வடக்கு மாகாண சபை கல்வியமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இச் செயற்பாட்டில் வித்தியாலயத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்திற்குமேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (2-5-84)



பேராசிரியர் சி.தில்லைநாதனின் அமுத விழாவும் பேராசிரியர் பொ.பூலோகசிங்கத்தின் "தமிழ் ஆய்வுச் சிந்தனைகள்" எனும் நூல் வெளியீடும் அண்மையில் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் பீடாதிபதி கு.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பேராசிரியர் பீடாதிபதியால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும் நூலின் முதற் பிரதியை ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் எஸ்.வேலுப்பிள்ளை தம்பதியர்க்கு பேராசிரியர் வழங்குவதையும் யாழ். தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் வாழ்த்துரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கை கடற்படைத்தளபதிக்கு இந்திய கடற்படையின் கௌரவம்





(கொழும்புழு)

எழிமலவில் உள்ள இந்தியக் கடற்படை அகடமியில் 338 கடற்படையினர் மற்றும் அதிகாரிகள் பயிற்சி முடித்து வெளியேறும் நிகழ்வில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன பிரதம விருந்தினராகப் பங்கேற்றார்.

நேற்று முன்தினம் இந்த நிகழ்வு எழிமலவில் உள்ள இந்திய கடற்படை அகடமியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்ற இலங்கை கடற்படைத் தளபதி, பயிற்சியை முடித்த கடற்படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர், பயிற்சி முடித்த அதிகாரிகளுக்கான சின்னங்களையும் சூட்டினார்.

இந்தியக் கடற்படை அகடமியில் பயிற்சி முடித்து வெளியேறும் படையினரின் அணிவகுப்பு நிகழ்வில், வெளிநாட்டு கடற்படை தளபதி ஒருவர் அதிதியாகப் பங்கேற்றிருப்பது இதுவே முதல்முறையாகும்.

இது இரண்டு நாடுகளுக்கும் இடையில் உள்ள உயர்ந்த பட்ச பாதுகாப்பு ஒத்துழைப்பை வெளிப்படுத்துவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, இந்தியாவிலேயே சப் லெப்டினன்ட் தொழில்நுட்பப் பயிற்சியையும், நீர்மூழ்கி எதிர்ப்பு சிறப்புப் பயிற்சியையும், டில்லியில் தேசிய பாதுகாப்பு கல்லூரி கற்கைநெறியையும் பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## டில்லி பல்கலை. சுவர்களில் ஐ.எஸ்.ஆதரவு வாசகங்கள்


## பொலிஸார் விசாரணை

டில்லி பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சுவர்களில் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு ஆதரவான வாசகங்கள் எழுதப்பட்டிருந்ததாக மாணவர் சங்கம் சார்பில் அளிக்கப்பட்ட புகாரை தொடர்ந்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

டில்லி பல்கலைக்கழகத்தின் வணிக கல்லூரி வளாகத்தில் இருக்கும் சுற்றுச் சுவர்களில் தடை செய்யப்பட்ட தீவிரவாத இயக்கமான ஐ.எஸ்க்கு ஆதரவாக வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. இதனையடுத்து, அந்த பல்கலைக்கழக மாணவர் சங்க தலைவர் இது குறித்து நேற்று முன்தினம் பொலிஸில் புகாரளித்தார்.


சில மாணவர்கள் இந்த செயலில் ஈடுபட்டுள்ளதாகவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தனது புகாரில் குறிப்பிட்டுள்ளார். புகாரின் மீது வழக்குப்பதிவு செய்த மவுரிஸ் நகர் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதேபோல், பல்கலைக்கழக வளாகத்தில் இருக்கும் சமூகசேவை துறையின் சுவர்களில் நக்சல், சிறப்பு ஆயுத சட்டம் ஆகியவற்றுக்கும் ஆதரவாக வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. இது குறித்தும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ)



## தமிழகத்தில் ‘சிஸ்டம்’ சரியில்லை என ரஜினி கூறியது கண்டிக்கத்தக்கது

## அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன்



நடிகர் ரஜினிகாந்த் தமிழகத்தில் "சிஸ்டம்" சரியில்லை என்று கூறியது கண்டிக்கத்தக்கது என தமிழக வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் தெரிவித்தார். தமிழக வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் நெல்லையில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

தமிழக வனத்துறையில் பழங்குடியினர் இனத்தை சேர்ந்த 206 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இறைச்சிக்கு மாடுகளை விற்பனை செய்வதற்கு தடை விதித்தது தொடர்பாக தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியுடன் ஆலோசனை நடத்தி முடிவு அறிவிக்கப்படும்.

தமிழகத்தில் வரலாறு காணாத அளவுக்கு வரட்சி நிலவுவதால் காட்டு விலங்குகள் சில நேரங்களில் ஊருக்குள் புகுந்து விடுகின்றன. அதைத்தடுக்கும் வகையில் வன விலங்குகளுக்கு மலைப் பகுதியில் உள்ள தொட்டிகளில் குழாய்கள் மூலம் தண்ணீர் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

ஜெயலலிதாவுக்கு நினைவிடம் அமைக்க கட்டட கலை வல்லுநர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். ஜெயலலிதா நினைவிடம் உலகில் சிறந்ததாக அமைய இருக்கிறது.

முதலமைச்சரை, எம்.எல்.ஏ.க்கள் தனித்தனியாக சந்தித்து பேசுவதில் எந்த தவறும் இல்லை. அவ்வாறு பேசும் போது அவரவர் தொகுதிக்கான கோரிக்கைகளை எடுத்துக்கூறி நிறைவேற்ற முடியும். மேலும் அமைச்சரவை விரிவாக்கம் குறித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி முடிவு செய்வார்.

நடிகர் ரஜினிகாந்த் புதிய கட்சி தொடங்குவது அவரது விருப்பம். ஆனால் தமிழகத்தில் "சிஸ்டம்" சரியில்லை என்று கூறியது கண்டிக்கத்தக்கது. தமிழக சட்டசபையில் ஜெயலலிதா படத்தை திறப்பதில் எந்த தவறும் கிடையாது. சட்டசபைக்கு கடந்த 6 ஆண்டுகளாக கருணாநிதி வரவில்லை. இருந்தாலும் வைரவிழா கொண்டாடுகிறார்கள். அது அவர்களது விருப்பம் ஆகும். அதேபோல் சட்டசபையில் ஜெயலலிதா படத்தை திறப்பது எங்களது உரிமை ஆகும்.

அ.தி.மு.க. இரு அணிகளும் இணைய நாங்கள் தயாராக இருக்கிறோம். மற்றொரு பிரிவினரை வாருங்கள் என்று தொடர்ந்து அழைத்து வருகிறோம். ஆனால் அவர்கள் இதுவரை வரவில்லை.

எங்கள் அணியில் 123 எம்.எல்.ஏக்கள், பெரும்பாலான எம்.பி.க்கள் உள்ளனர். 98 சதவீதம் கட்சி நிர்வாகிகளும் 50 மாவட்டங்களில் 48 மாவட்ட செயலாளர்களும் உள்ளனர். எனவே 2 அணிகளும் இணைவதில் தாமதம் ஏற்பட்டு இருப்பதால் தொண்டர்கள் சோர்வடைந்து இருப்பதாக கூறுவதை ஏற்க முடியாது.

ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு என்ற இரகசியத்தை இப்போதே கூற முடியாது. தேர்தல் அறிவிக்கப்படும் நேரத்தில் உரிய முடிவை தெரிவிப் போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## இரண்டு பாடசாலைகள் இன்று மூடப்படும்

இரத்தினபுரி மற்றும் நிவித்திகல ஆகிய கல்வி வலயங்களுக்கு கீழுள்ள சகல பாடசாலைகளும் இன்று மூடப்படும் என்று சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.(இ-7)

## மீட்புப்பணியின் போது பலியான படை அதிகாரிக்கு பதவி உயர்வு

உயிரிழந்த விமானப் படை ஊழியரான வை.எம்.எஸ்.யாப்பாரத்னவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான மீட்புப் பணிகளின் போதே, இவர் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, இவருக்கு இலங்கை விமானப் படையின் வாரண்ட் 'அதிகாரியாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## வர்த்தக மாநாடு கொழும்பில் நாளை

முதலீடு மற்றும் வர்த்தக மாநாடு நாளை செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை வர்த்தக சபை ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாடு கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் மூன்று நாட்கள் நடைபெறவுள்ளன. இந்த மாநாடு வியாழக் கிழமை நிறைவு பெறும்.

இலங்கையின் பொருளாதார வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவது இந்த மாநாட்டின் நோக்கமென இலங்கை வர்த்தக சபை தெரிவித்துள்ளது.

15 நாடுகளைச் சேர்ந்த முன்னணி வர்த்தக நிறுவனங்கள் மற்றும் 50ற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## டில்லியில் கைது செய்யப்பட்ட சிறுநீரக மோசடி குழுவினர் இலங்கையுடன் தொடர்பாம்

டில்லியில் கைது செய்யப்பட்ட சிறுநீரக மோசடி குழுவினர் இலங்கையுடன் தொடர்புகளைப் பேணியிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது குறித்து விசாரணை செய்வதற்காக கொழும்பிற்கு விசேட பொலிஸ் குழுவொன்றை அனுப்பவுள்ளதாக டில்லி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

சிறுநீரகங்களை தானம் செய்த பலர் கொழும்பிற்கு சென்று அங்குள்ள வைத்திய சாலையில் சத்திரசிகிச்சை செய்தமை கண்டறியப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சிறுநீரகங்களை வழங்க முன்வந்த இருவரை டில்லி பொலிஸார் மீட்டுள்ளதுடன், சிறுநீரக மோசடி செய்யும் குழுவினர் அவர்களில் ஒருவருக்கு நான்கரை இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளதுடன், மற்றையவருக்கு மூன்றரை இலட்சம் ரூபா தருவதாக உறுதி அளித்துள்ளனர்.

சிறுநீரக மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நால்வர் வழங்கிய வாக்குமூலங்களின் அடிப்படையில் கொல்கத்தா, மும்பை மற்றும் ஐதராபாத் ஆகிய நகரங்களுக்கு பொலிஸ் குழுவினர் விசாரணைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

ஜெய்தீப் ஷர்மா என்ற எம்.பி.ஏ.மாணவனின் உதவியுடன் டில்லி பொலிஸார் சிறுநீரக மோசடி குழுவினரை கைதுசெய்துள்ளதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே சிறுநீரக மோசடியுடன் தொடர்புடைய சிலர் இலங்கையில் வைத்து கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 8 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

(கொழும்பு)

8 மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படலாம் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ். பண்டார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இரத்தினபுரி, காலி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலேயே இந்த மண்சரிவு ஆபத்து நிலவுகின்றது.

மழை குறைந்துள்ள போதிலும் இந்த மாவட்டங்களுக்கான மண்சரிவு ஆபத்து தொடர்ந்தும் நிலவி வருகின்றது. (இ-7)

# டெங்கு பரவும் சூழல்; நால்வருக்கு அபராதம்

டெங்கு பரவும் சூழலை வைத்திருந்த நால்வருக்கு தலா 1000 ரூபா வீதம் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

கரவெட்டி சுகாதார பகுதியினரும் நெல்லியடிப் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது நால்வர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் நால்வரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 1000 ரூபா வீதம் அபராதம் விதித்து நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)

# பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்த வேண்டும்

## அகத்தியர் அடிகளார் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்த சைவ மகா சபை பெருந்தலைவர் தென்கயிலை ஆதீனம் தவத்திரு. அகத்தியர் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

அண்மைய நாட்களாக இயற்கை அனர்த்தத்தால் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வரும் தென்பகுதி மக்களின் துயரங்களில் நாமும் பங்கு கொள்வதோடு அவலங்களிலிருந்து மீண்டெழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பல வருடங்களாக யுத்தத்தின் கொடிய விளைவுகளால் வகைதொகையற்ற உயிரிழப்புக்களையும் அகதி வாழ்வையும் சந்தித்த நாம் மற்றையவர்களை காட்டிலும் இயற்கையின் கோர தாண்டவத்திற்கு உள்ளாகியிருக்கும் தென் பகுதி சகோதரர்களாகிய உங்கள் துன்பத்தை ஆழமாக உணர்கின்றோம்.

இந்த சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டுள்ள சகோதரர்களுக்கு எமது சைவத் தமிழ் ஆலயங்கள், தொண்டர் அமைப்புக்கள் தம்மாலான மனிதாபிமான உதவிகளை வழங்கி ஆற்றுப்படுத்துமாறு வேண்டி நிற்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)


டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

பைவர் கிளாஸ் மோல்ட், பைவர் கிளாஸ் உற்பத்தி, றபர் மோல்ட் மற்றும் சிறுவர்களுக்குத் தேவையான உள்ளக, வெளியக விளையாட்டு உபகரணங்கள் தரமான முறையில் செய்து தரப்படும்.

(சி.8589)

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 021 222 8680, 077 592 5088


# போதையில் ரகளை; ஒருவர் கைது

மது போதையில் மோட்டார் சைக்கிளில் வந்து ரகளையில் ஈடுபட்ட ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் பருத்தித்துறை ஓராம் கட்டைச் சந்திப் பகுதியில் மது போதையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்து அப்பகுதியில் நின்ற ஆட்டோவில் மோதியதுடன் ஆட்டோவில் இருந்தவர் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளார்.

அதனையடுத்து உடனடியாகச் செயற்பட்ட பருத்தித்துறை பொலிஸார் கற்கோவளம்பகுதியைச் சேர்ந்த நபரினை கைது செய்தனர். அவரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)


நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜீ

82/4 கலட்டி அம்மன் கோவிலடி, வண்ணார்பண்ணை.

077 784 1558

(இ-8668)


# கரவெட்டி பிரதேச சபையின் கழிவகற்றலில் பின்னடைவு



கரவெட்டிப் பிரதேச சபையின் கழிவகற்றும் இயந்திரம் விபத்துக்குள்ளான நிலையில் பொலிஸ் நிலையத்தில் உள்ளமையினால் கழிவகற்றலில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பிரதேச சபையில் கழிவகற்றலுக்கு பயன்படுத்தப்படும் இரண்டு உழவு இயந்திரங்களில் ஒன்று அண்மையில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் சிக்கி சேதமடைந்த நிலையில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் உள்ளது.

இதனால் ஒரு உழவு இயந்திரத்தினை வைத்து பெரும் பரப்பளவு உள்ள பிரதேசத்தின் கழிவுகளை அகற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (இ-60)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>கி.பா: 43 சூரிசெவ் 12 இல்<br>தகைமை/தொழில்: தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/6187 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி.பா: 56 செவ் 8 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்O/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/6275 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி.பா: 23<br>தகைமை/தொழில் A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6190 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 26 செவ் 1 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: BSc/ஆசிரியர்<br>தொ.இ: G/6281 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 25 செவ் 12 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில் A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6191 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 35 செவ் 1 இல்<br>உயரம்: 166cm<br>தகைமை/தொழில்: BSc, MSc/விரிவுரையாளர்<br>தொ.இ: G/6282 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா: 60 செவ் 8 இல்<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்: B.Eng லண்டன் NOT PR<br>தொ.இ: B/6193 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 68 செவ் 8 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்: Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/6283 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# உயிருக்குப் போராடும் மக்கள்; ஹெலியில் பறந்து சென்ற படகு





களுத்துறை மாவட்டத்தில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து மக்களை மீட்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

வெள்ளம் ஏற்பட்டுள்ள பிரதேசத்திற்கு ஹெலி மூலம் அவசரமாக படகு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

வீதியில் பயணிக்கும் போது ஏற்படும் தடை மற்றும் தாமதத்தை குறைத்துக் கொள்வதற்காக இவ்வாறு ஹெலி மூலம் படகு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கட்டுகுருந்த விமான படை முகாமில் இருந்து ஹெலி மூலம் படகு கொண்டு செல்லும் புகைப் படங்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# உலக சுகாதார நிறுவனத்தால் 1.5 மில்லியன் டொலர் உதவி

(கொழும்பு)

இலங்கையில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஒரு இலட்சத்து ஐம்பாதாயிரம் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்க உலக சுகாதார நிறுவனம் உறுதியளித்துள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

கல்பான, இரத்தினபுரி, தெனியாய மொரவக்க மற்றும் கம்புறுபிட்டிய ஆகிய பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அங்கு இருக்கின்ற நோயாளர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தேவையான அளவு வைத்தியர்கள் மற்றும் தாதியர்களும் அனுப்பப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# யாழ்ப்பாணம் வண்ணார்பண்ண

# ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்

## புனராவர்த்தன ந

# மஹா கும்பாபிஷேக



### நல்லை ஆதீன குருமுதல்வரின் ஆசிச்செய்தி

வண்ணார்பண்ணையில் காட்டுத்துறை பகுதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் அம்பலவாண விநாயகப் பெருமானுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்வடைகின்றோம். பல ஆலயங்களைக் கொண்ட இப் பிரதேசத்தில் நீண்ட காலமாக சிறிய ஆலயமாக இருந்த கோயில் இன்று பல வளர்ச்சிகளைக் கண்டு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இன்று இவ் ஆலயத்தில் நடைபெறுவது ஊருக்கும் மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். விநாயகர் வழிபாடு நம் சமயத்தோடு ஏனைய சமயத்தவர்களும் வழிபடும் தெய்வமாக விளங்கி எளிமையான வழிபாட்டைத் தன்னுடன் கொண்ட விநாயகர் வேண்டுவதை கொடுக்கின்றவராக வீற்றிருக்கின்றார். எல்லோரும் விநாயகர் வழிபாடு செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. இவ் வாலய அனைத்து அடியார்களுக்கும் பரிபாலன சபையினருக்கும் ஊர் மக்களுக்கும் இறை இன்பம் கிடைப்பதாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**
**ஆதீன குரு முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்.**




### கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசியுரை

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை பகுதியில் வீற்றிருந்து அருள் புரியும் அம்பலவாணர் விக்னேஸ்வரப் பெருமான் ஆலயம் அழகிய இராஜகோபுரத்துடன் புனர்நிர்மாணம் செய்யப்பெற்று மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு மக்கள் மனங்களில் தெய்வீக அருள் பொழிவதையிட்டு மகிழ்ச்சியாக அமைகின்றது. ஆலய நித்திய பூஜா துரந்தரர்கள், தர்மகர்த்தாக்கள், திருப்பணியினர் உள்ளிட்ட அனைவருமே மனம் சலிக்காமல் உற்சாகத்துடன் இப் பணியை குறுகிய கால இடைவெளியில் நிறைவு செய்தது விநாயகருடைய திருவருளாகும். சிறந்த அனுபவம் நிறைந்த சிற்பாசாரியார் குழுவினரும் வர்ணக் கலைஞர்களும் இரவு பகல் பாராது தமது கடமைகளை செவ்வனே நிறைவு செய்து இருப்பது பாராட்டப்படவேண்டியதாகும். என் குருநாதர் சிவஸ்ரீ தாணு மகாதேவ குருக்களின் ஆசிகள் கிடைப்பதன் மூலம் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து செய்கின்ற பாக்கியம் கிட்டியுள்ளமை எனக்கு மகிழ்ச்சியாக அமைகின்றது. அனைத்து சிவாச்சாரியார்கள் உள்ளிட்ட அனைவருக்கும் விநாயகப் பெருமான் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து நல் ஆசிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்பமே சூழ்க வாழ்க வளமுடன்

**சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் / கும்பாபிஷேக பிரதம குரு.**
**வல்லை சிவன் தேவஸ்தானம்.**



### சிவஸ்ரீ.தா.மகாதேவக்குருக்கள் ஆசியுரை


யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை திருவருள் மிகு அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலயம் சிறந்த முறையில் திருப்பணிகள் நடைபெற்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. பல சாந்தி வைபவங்கள் பூர்வாங்கமாக நடைபெற்று சிவாச்சார்யார்களின் மந்திரன் கிரியை , பாவனைகள் மூலம் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இந்த ஆலயத்தின் திருப்பணிகளுக்கும் மஹா கும்பாபிஷேக வைபவத்திற்கும் காரணகர்த்தாக்களாக விளங்கிய ஆலய தர்ம பரிபாலகர் , சிவாச்சாரிய பெருமக்கள், ஆலயத்தை அழகுறப் புதுப்பித்து சிற்ப சாஸ்திரங்களுக்கமைய ஆலயத்தை அமைத்துதவிய சிற்பாசாரியர்கள் மேலும் பாரிய கைங்கரியத்திற்கு நிதி உதவி நல்கிய உள்நாட்டு, வெளிநாட்டு தர்ம வள்ளல்கள், பக்தர்கள் அனைவருக்கும் இக் கும்பாபிஷேகத்தின் பயனால் சிறப்புற வாழ ஸ்ரீவம்பிகா சமேத அம்பலவாண விநாயகப் பெருமானின் பூரண ஆசி கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ. தா.மகாதேவக்குருக்கள் - அதிபர்,தர்மசாஸ்தா குருகுலம் காயத்ரீ பீடம், இணுவில், சுன்னாகம்.**

### ஆலய குருமாரது ஆசியுரை

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறைப் பகுதியில் கோயில் கொண்டெழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையாரது ஆலயத்தில் எம்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் புதிதாக அமைக்கப்பட்ட இராஜ கோபுரத்துக்கும் எம் பெருமானின் திருவருளால் புனராவர்த்தன நவகுண்ட பட்ச மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இவ் வாலயத்தில் திருப்பணிகள் சிறப்பாக நிறைவேறியுள்ளமை சிறப்பம்சமாகும். ஆலய மண்டபங்கள், பரிவார மூர்த்திகள் ,புதிய இராஜகோபுரம் ஆகியவை ஆலயத்திற்கு சிறப்பு சேர்க்கின்றன. இத் திருப் பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட ஆலய உரிமையாளர்கள், பரிபாலகர்கள் ஆகியோருக்கும் திருப்பணிக்கு நிதியுதவி நல்கிய உபயகாரர்கள், விநாயகர் அடியார்கள் மற்றும் திருப் பணிச் சபையினர், ஆலயத்தை அழகுற அமைத்த சிற்பக் கலைஞர் ஆகிய அனைவருக்கும் இக் கும்பாபிஷேக நன்னாளில் எம்பெருமானின் பரிபூரணமான திருவருள் கிடைத்து அனைவரும் சகல வளங்களுடனும் நலத்துடனும் வாழ்வாங்கு வாழ எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சிவாச்சாரியார்களது மந்திர கிரியா விசேடத்தினால் விநாயகப் பெருமானின் சாத்தியம் இவ்வாலயத்தில் பரிபூரணமாக நிறைந்துள்ளமை நாம் செய்த தவப்பயனே ஆகும். அனைவருக்கும் எம்பெருமானின் திருவருள் பொலிவதாகுக.

**பிரம்ம ஸ்ரீ இ.சந்தனகோபால சர்மா**
**பிரம்ம ஸ்ரீ இ.குமாரசாமி சர்மா**
**பிரம்ம ஸ்ரீ இ.பகவதீஸ்வர சர்மா.ஆலய குருமார்கள்.**



### பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் ஆசியுரை

பிரணவ வடிவினராகிய விநாயகப் பெருமான் ஊர்தோறும் அமைந்துள்ள ஆலயங்களில் எழுந்தருளி தன்னை நினைத்து வழிபடுவோரது துயர் தீர்ப்பவர். அத்தகைய பெருமைமிக்க விநாயகப் பெருமான் வண்ணார்பண்ணை காட்டுத்துறையில் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் என்ற திருநாமத்துடன் அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றார். இவ்வூர் மக்கள் எம்பெருமான் மீது அளவற்ற பக்தி கொண்டு வழிபட்டு வருவதன் பயனாய் ஆலயத்திருப்பணிக்கு பக்தியுடன் மனமுவந்து நிதி வழங்கி திருவருளுக்குப் பாத்திரராகியுள்ளனர். ஆலய உரிமையாளர் , முகாமையாளர் ஆகியோர் முழு அர்ப்பணிப்புடனும் அனுசரணையுடனும் திருப்பணி சபை அமைத்து ஊர் கூடி கோயில் அமைக்கும் கைங்கரியத்தை முன்னெடுத்தமை உன்னதமான சிவபுண்ணிய செயலாகும் . அதன் பயனாய் ஆலயம் பூலோகக் கைலாயம் போன்று புதுப்பொலிவுடன் திகழ்கின்றது. திருப்பணி செய்வார்க்குஞ் சிவனை யுன்னிச் செம்பொன் விருப்புடன்னீவார் பெறுக வீடு என்ற சைவ சமய நெறி கூறும் பிரமாணத்திற்கேற்ப ஆலயத்தில் அழகிய மண்டபம், பரிவாரக்கோயில்கள் மணிக்கோபுரம் , புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரம் ஆகியவற்றால் ஆலயம் கல்லக் கோயிலாகத் திகழ்கின்றது. எம்பெருமானுக்கு இன்று (29.05.2017) நடைபெறும் மஹா கும்பாபிஷேகத்தைக் காணும் பேறு எமக்குக் கிட்டியுள்ளமை நாம் செய்த தவப்பயனே. திருப்பணியை நிறைவு செய்து மஹா கும்பாபிஷேகத்தை நடத்திய ஆலய முகாமையாளர், உரிமையாளர் ஆகியோருக்கும் ஆலயத்தை அழகுற அமைத்த கலைஞர்களுக்கும், திருப்பணி சபையினருக்கும் பக்தியுடன் திருப்பணிக்கு நிதியுதவி நல்கிய உபயகாரர்களுக்கும் ஊர் மக்களுக்கும் ஏனைய வழிகளில் உதவிய அனைவருக்கும் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக. ஆலயத்தில் தெய்வீக சாந்தியத்தை ஏற்படுத்திய சிவாச்சாரியர்களது குருவருளும் அனைவருக்கும் கிட்டுவதாக

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

**பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்,**
**வாழ்நாள் பேராசிரியர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**


### சிவஸ்ரீ பி.கிருபாரக் குருக்கள் ஆசியுரை

எங்கும் நிறைந்திலங்கும் பரம்பொருள் உருவத்திரு மேனி தாங்கி ஆன்மாக்களை ஆட்கொண்டு அருள் வழங்கும் இடம் கோவில். அந்த வகையில் வண்ணைக் காட்டுத்துறை பதியில் விநாயகப் பெருமான் அம்பலவாண விக்னேஸ்வரர் எனும் நாமம் தாங்கி பன்னெடும் காலமாக அருளாட்சி புரிந்து வருகின்றான். அந்த விநாயகரின் ஆலயத்தின் பேரழகும் குடமுழுக்கும் கண்டு மனம் நிறைவடைகின்றது. ஆலயத்தை புனரமைத்து, வர்ணம் தீட்டி, அழகிய இராஜகோபுரமும் அமைத்து நவீனப் படுத்திய பெருமை திருப்பணிச் சபையின ருக்குரியது. அதற்கு வழியமைத்துக்கொடுத்து ஆதரவு நல்கிய தர்மகர்த்தாக்கள், போற்றுவதற்குரிய வர்கள். இதற்கெல்லாம் துணைநிற்க விநாயகப்பெருமானை எப்போதும் மனதிருத்தி முப்போதும் திருமேனி தீண்டி எண்ணமும் செயலும் பிள்ளையாராகவே இறைபணியாற்றும் ஆலய பரம்பரை வழிவந்த பூசகர்கள் பணி சிறப்புடையது. எல்லாவற்றுக்கும் மேலாக திருப்பணி சிறக்க மனம் வாக்கு காயத்தால் ஆதரவு நல்கி பொருள் பல வழங்கி அருள் பல பெற்ற அடியவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இதற்கெல்லாம் தோன்றாத் துணையாய் உடனிருந்து அருள் வழங்கி ஆட்சிபுரியும் அம்பலவாண விக்னேஸ்வரப் பெருமான் தாள் பணிந்து எல்லோருக்கும் அவனருள் கிடைக்க பிரார்த்திப்போமாக.

" வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

**சிவஸ்ரீ பி.கிருபாரக் குருக்கள்**
**மஹோற்சவகுரு**
**கோப்பாய்.**

விளம்பர அனுசரணை : ஆ.க.கனகசபை குடும்பத்தினர்.



### வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலய வரலாறு

திருமூலரால் சிவபூமி எனப் போற்றப்பட்ட இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையில் விநாயகப் பெருமானுக்குப் பல ஆலயங்கள் உள்ளன. இவ் வகையில் வண்ணார்பண்ணையில் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையாரின் ஆலயமும் ஒன்றாகும். இவ் ஆலயம் ஏறக்குறைய நூற்றைம்பது வருட காலத்துக்கு மேல் பழைமை வாய்ந்ததாகும். காட்டுத்துறை என வழங்கப்படும் பெயர் இவ்வாலயம் எழுந்த காலத்தில் இயற்கை வளத்தைக் கொண்டதாக இப் பிரதேசம் அமைந்திருக்கலாம் என கருத முடிகின்றது. தெய்வங்களின் உறைவிடம் அமைதியாகவும் இயற்கைச் சூழல் அமைந்ததாகவும் இருக்க வேண்டும் என்பது சாஸ்திர விதிமுறையாகும்.

விநாயகப் பெருமான் மீது ஆழ்ந்த பக்தி கொண்ட முன்னோர்களால் குல தெய்வமாக வைத்து வழிபடும் நோக்கில் எழுந்ததே இவ் ஆலயமாகும். வண்ணை வடமேற்கில் ஓடை ஒழுங்கையில் அமைந்துள்ள இவ்வாலயம் பொன்னிறப் பணிக்க[illegible]டைப் பிள்ளையார் கோயில் என்றும் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயில் என்றும் காட்டுத்துறை ஆனந்த விநாயகக் கோயில் என்றும் பல பெயர்களைப் பெற்று சிறப்படைந்தது. கி.பி. 1892 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரச அதிபரது கோயில் பற்றிய குறிப்பு உள்ளது. இங்கு காட்டுத்துறைப் பிள்ளையார் என்ற தலைப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது. இக் கோயிலின் ஆரம்பம் கி.பி 1856ஆம் வருடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மூத்ததம்பி சோமநாதர் என்பவரால் ஓலைகள், கற்கள் கொண்டு ஆரம்பத்தில் இக் கோயில்கள் அமைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. இவ் ஆலயத்தின் முகாமையாளராக சங்கரப்பிள்ளை சரவணமுத்து என்பவரது பெயர் தரப்பட்டுள்ளது. இரு நேரப் பூசைகள் நடைபெறும் ஆலயமாகப் பரிணமித்து இன்றைய நிலையில் கொடியேற்றத்துடன் கூடிய மஹோற்சவம் நிகழும் ஆலயமாக வளர்ச்சி கண்டுள்ளது.

திரு. மூத்ததம்பி சோமலிங்கம் என்பவர் விநாயகப் பெருமான் மீது கொண்ட அளவற்ற பக்தியினாலும் இக் கோயிலின் வளர்ச்சியில் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாகவும் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையாருக்குரிய இக் கோயிலைப் பெரிதாகக் கட்டி முடித்து எம் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரரானார். இவரது இத் திருக்கோயிற் பணி பற்றி இக் கோயிலோடு தொடர்புடைய உறுதி மூலம் அறியலாம்.


ஆலய முகாமையாளராகவிருந்த இவருக்குப் பின் இக் கோயிலின் முகாமையாளராக இக் கோயிலைப் பரிபாலித்தவர்கள் நாவற்குழியூர் திரு. சோமலிங்கம் என்பவரும் கொக்குவில் திரு. சின்னையா என்பவர்களுமாவர். தமது மூதாதையர்கள் போலவே விநாயகர் மீது கொண்ட அளவற்ற பக்தியினால் இக் கோயில் வளர்ச்சியில் பெரும் ஆர்வம் காட்டினர்.

இம் மரபிற்கு அமைவாக சிறந்ததொரு திருக்கோயிற் திருத்தொண்டைக் கட்டிக் காக்கும் பெரும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் நாவற்குழியூர் திரு. சோமலிங்கம் சடாட்சரம் அவர்களும் திரு. சின்னையா அவர்களுமாவர். இவர்களது திருப்பணிக்கைங்கரியத்தினால் கோயில் பெருப்பிக்கப்பட்டு விமானம், ஸ்தூபி, வெளிமண்டபம் நிர்மாணிக்கப்பட்டு இக் கோயிலின் மஹா கும்பாபிஷேகம் 1953ஆம் ஆண்டு சிறப்பாக நடைபெற்றது. இந்து சாதனம் என்ற பத்திரிகை இந்த நிகழ்வை செய்தியாக வெளியிட்டமை ஓர் அரிய வரலாற்றுப் பதிவாகும். 1953ஆம் ஆண்டு இக் கோயில் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகும். காலப்போக்கில் 1986 ஆம் ஆண்டு இக் கோயிலில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கர்ப்பக்கிரகம் புனரமைக்கப்பட்டு விமானம் வர்ணந்தீட்டப்பட்டது. வசந்த மண்டபம் புதிதாக அமைக்கப்பட்டது.

திருப்பணிகள் நடைபெறும் காலத்தில் ஆலய அறங்காவலர்களில் ஒருவராகிய திரு. சி. சரவணமுத்துவின் மறைவையடுத்து அவரது புதல்வர் திரு. ஸ்ரீவாஸன் தந்தையின் வழியில் அவர் விட்டுச் சென்ற திருப்பணிகளைத் தொடர்ந்தார். இத் திருப்பணிகள் நிறைவேறியமையையடுத்து இவ் ஆலயத்தில் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் 24.08.1986 அன்று சிறப்பாக நடைபெற்றது.

மகா கும்பாபிஷேகம் நிறைவுற்றதைத் தொடர்ந்து திரு. சடாட்சரம் அவர்கள் துவஜாரோகணாதி மஹோற்சவம் நிகழவேண்டுமென்ற பெருவிருப்பினால் அதற்கான திருப்பணிகளைத் தமது தள்ளாத வயதிலும் அயராது ஆற்றி எம் பெருமானது திருவருளுக்குப் பாத்திரரானார். ஆரம்பத்தில் கட்டுத் தேரொன்றினை அமைக்கும் வேலை ஆரம்பமானது. திரு. சடாட்சரத்தின் புதல்வர் திரு. சோமலிங்ககுமார் அவர்களும் தந்தையின் வழியில் திருக்கோயிற் திருப்பணிகளைக் கவனித்து வந்தார். இதன் பயனாய் சண்டேஸ்சுவரர், பைரவர் ஆகிய மூர்த்திகளுக்குரிய பிரதிஷ்டை 01.07.1988 அன்று நடைபெற்றது. இவ் ஆலயத்தில் முதன்முதலாக கொடியேற்றம் 03.08.1988 அன்று நிகழ்ந்தது. தேர்த்திருவிழா 11.07.1988 அன்று நடைபெற்றது. இவ்வரிய நிகழ்வைக் குறிக்குமுகமாக இவ்வாலயத்திற்குரிய திருத்தல வரலாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத்தலைவர் கலாநிதி. ப. கோபால

# ...ன்னை காட்டுத்துறை அருள்மிகு ...னேஸ்வரப் பிள்ளையார் ஆலய ...ன நவ குண்டபக்ஷ ...க சிறப்பு மலர் – 2017



கிருஷ்ணன் அவர்கள் திரு. சடாச்சரம் அவர்களது வேண்டுகோளையேற்று இவ் வரலாற்று நூலை உருவாக்கி வெளியிட்டமை ஆலய வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள மூலமூர்த்தியாகிய விநாயகரது விக்கிர கம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டதாகும். தெய்வீகப் பொலிவும் சிற்பக் கலை நுட்பமும் இவ்விக்கிரகத்தில் சிறந்து விளங்குகின்றன. மஹோற்சவத்திற்கான பஞ்சமுக விநாயகர் விக்கிரகமும் இவ்வாலயத்தில் எழுந்தருளச் செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வாலயத்தில் விநாயகப் பெருமானுக்குரிய புதிய சித்திரத்தேரும் உருவாக்கப்பட்டு அதற்கான தேர் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாலயத்தில் தமது முன்னோரைத் தொடர்ந்து நீண்டகாலமாக குருத்துவப் பணியாற்றி ஆலயத்தை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் சென்ற குருமணி பிரம்மஸ்ரீ.தி. இரத்தினசபாபதிக் குருக்கள் அவர்களது பங்கும் பணியும் இவ்வாலய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவதாகும். அவரது இறைபணியைக் கௌரவிக்கும் வகையில் அவரது குடும்பத்தாரின் சார்பில் சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு எம் பெருமானுக்கு பக்தி பூர்வமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். அதற்கேற்ப ஒரு தேர் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் அறங்காவலர் திரு. ஸ்ரீநிவாஸன் அவர்களது முயற்சியினால் திருப்பணிகள் நிறைவேறி 2001 ஆம் ஆண்டு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அமரர் பிரம்மஸ்ரீ இரத்தின சபாபதிக் குருக்களைத் தொடர்ந்து அவரது புதல்வர் பிரம்மஸ்ரீ இ. சந்தானகோபாலசர்மா ஆலயத்தின் குருத்துவப் பணியினை ஏற்று நீண்ட காலம் ஆலய வளர்ச்சிக்கு அரிய பணியாற்றியவர். அவருக்கு அனுசரணையாக அவரது இரு சகோதரர்களும் ஆலய குருத்துவப் பணியில் இணைந்து செயற்பட்டனர். இவ்வாலய இறைபணியில் பிரம்மஸ்ரீ ந. ஸ்ரீதரசர்மாவும் இணைந்துள்ளார்.

இவ்வாலயத்தின் முகாமையாளராக விளங்கி இறை பணியாற்றிய திரு. சோமலிங்க குமார் மற்றும் திரு. ஸ்ரீநிவாஸன் ஆகியோரது மறைவையடுத்து அவர்களது குடும் பத்தினராகிய திருமதி.சிவகுமாரி சோமலிங்ககுமார் திருமதி. தவனேஸ்வரி ஸ்ரீநிவாஸன் ஆகியோர் இக் கோயிலில் முகாமையாளராக செயற்பட்டு வருகின்றனர். இப் பிரதேசத்தில் நிலவிய நீண்டகால அசாதாரண சூழ்நிலையால் எம் பெருமானது ஆலய திருப்பணி வேலைகள் தாமதமடைந்திருந்தன. இச் சந்தர்ப்பத்தில் திருமதி. சிவகுமாரி அவர்கள் எடுத்த ஆக்கபூர்வமான தீர்மானம் அனைவரினதும் பாராட்டுக் குரியதாகும். ஆலய முகாமையாளராகிய திருமதி. சிவகுமாரி அவர்களது அனுசர ணையில் திருப்பணி சபையொன்று அமைக்கப்பட்டு ஆலயத்தின் புனருத்தாரண பணி களைத் தொடர தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆலய முகாமையாளரது பிரதான அனுசரணையோடு ஆலய உபயகாரர்கள், ஊர் மக்கள் ஆகியோரது நிதியுதவி மூலம் திருப்பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கேற்ப 06.07.2016 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் திருப்பணிகள் திருப்பணி சபையினரது அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாட்டால் நிறைவேறியிருப்பது விநாயகப் பெருமானின் திருவருளேயன்றி வேறில்லை. விநாயகப் பெருமானின் ஆலயம் புதுப் பொலிவு பெற வேண்டுமென்பதில் கொண்ட பேரார்வத்தினால் அவர்கள் வழங்கிய நிதி திருப்பணி தொடர திருப்பணிச் சபைக்குப் பெரிதும் உதவியது. இதன்வழி எம் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராகியுள்ளனர். திருமதி. சிவகுமாரி அவர்களது சிறந்த வழிகாட்டலினாலும் திருப்பணி சபையினரது அர்ப்பணிப்பு மிக்க செயற்பாட்டி னாலும் ஆலயம் புதுப்பொலிவு பெற்றுத் திகழ்கின்றது. ஆலய மண்டபப் புனருத்தாரணம், பரிவாரத் தெய்வங்களாகிய மகாலட்சுமி, சந்தான கோபாலர், முருகன் ஆகியோருக்குப் பரிவாரக் கோயில்கள், சூரியன், சந்திரன் ஆகியோருக்கான பரிவாரக் கோயில்கள், இரண்டு மணிக் கோபுரங்கள், புதிதாக கலையெழிலுடன் அமைக்கப்பட்ட மூன்று தளங்களைக் கொண்ட இராஜகோபுரம் ஆகியவை அத்திருப்பணிக் கைங்கரியத்தின் பெறுபேறாகும். இவ் ஆலயத் திருப்பணியை முன்னெடுப்பதிலும் ஆலயத்தினை சிற்ப நுட்பத்துடன் கூடிய கலைக் கோயிலாக உருவாக்குவதிலும் புதிய இராஜகோபுரத்தை நிர்மாணிப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவராகிய அராலியைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் திரு. தவவீரசிங்கம் அனைவரினதும் பாராட்டிற்குரியவராவார்.

ஆலய முகாமையாளர் திருமதி. சிவகுமாரி சோமலிங்ககுமார் அவர்களினதும் திருமதி. தவனேஸ்வரி ஸ்ரீநிவாஸன் அவர்களினதும் ஆலய குருமணிகளினதும் சபையி னரினதும் ஊர் மக்களினதும் உளமார்ந்த பக்திபூர்வமான வேண்டுதல்களின் பிரகாரம் எம் பெருமானின் திருவருளால் திருப்பணிகள் சிறப்பாக நிறைவேறி இன்று (29.05.2017) எம் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் புதிய இராஜகோபுரத்திற்கும் புனராவர்த்தன நவகுண்டபட்ச மஹா கும்பாபிஷேகம் வல்வை சிவன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் அவர்களது தலைமையில் ஏனைய குருமணிகளின் அனுசரணையுடன் பக்திபூர்வமாக நடைபெறுகின்றது. இக் கும்பாபிஷேக வைபவத்தைக் காண்பதும் புதிய இராஜகோபுரத்தைத் தரிசிக்கும் பேறு கிட்டியமையும் எம் பெருமான் விநாயகரின் திருவருளேயன்றி வேறில்லை. நாம் செய்த தவப்பயனால் இவை எமது வாழ்வில் கிட்டிய அரிய வாய்ப்பாகும். ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப்பிள்ளையாரின் மஹா கும்பாபிஷேக திருவருட் பேறு அனைவருக்கும் கிடைப்பதாகுக.



### பிரதிப்பிரதம செயலாளரின் வாழ்த்துச்செய்தி

வினை தீர்க்கும் விநாயகப் பெருமான் என் சிந்தையிலே எப்போதும் கோயில் கொண்ட வகையிலேயே இறைவனை போற்றித் துதிக்க நான் பேறுபெற்றுள்ளேன். இவ்வாறான அருள் கொண்ட இறைவனின் கும்பாபி ஷேக வைபவம் வையகம் போற்றும் வண்ணம் சிறப்புற நடைபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக்கொள் கின்றேன். உமாபதியே உலகம் என்று ஒரு சுற்றில் வலம் வந்து வணங்கி அன்னை யவளின் மேன்மையையும் அன்பின் தத்துவத்தையும் அகிலமெல்லாம் அறிந்திடவே அற்புதம் படைத்தவன் இறைவன் விநாயகப் பெருமான்! சங்கத் தமிழ் மூன்றையும் பொங்கும் மகிழ்வுடனே துதிப்போர்க்கு வரமருளும் துங்கக்கரிமுகத்தவன் எங்கள் விக்னேஸ்வரன்! அங்கம் சிலிர்த்திடும் அவன் எண்ணம் கொண்டால்! இவ்வாறு எங்கும் வியாபித்த எங்கள் விநாயகன் இங்கே வண்ணை யிலே அருள்பாலித்திருப்பது இம் மண் பெற்ற பெரும்பேறே! விக்கினங்கள் தீர்க்கும் இந்த விக்னேஸ்வரப் பிள்ளையாரின் கடைக்கண் பார்வையிலே சுற்றம் சூழ்ந்த மக்கள் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப்பெற்று சகல சித்திகளையும் பெற்று மனநிறைவுடனும் தன வளமுடனும் சுற்றம்சூழ வாழ எல்லாம் வல்ல காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையாரின் ஆசி வேண்டி வணங்குகின்றேன்.


**சரஸ்வதி மோகநாதன், பிரதிப் பிரதம செயலாளர்-நிர்வாகம்.**



### நல்லூர் பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் வண்ணார் பண்ணையில் எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும் காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பல வாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலயமானது முழுமையாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்ய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருள்கிடைத்தமையினையிட்டு பிரதேசசெயலர் என்ற ரீதியில் பெருமகிழ்வடை கிறேன். 2017 வைகாசி மாதம் 29 ஆம் திகதி கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றுப் பக்தர்கள் வருகைதந்து கும்பாபிஷேக தரிசனம் செய்து பிள்ளையாரின் திருவருட்கடாட்சத்திற்கு ஆளாகி சகல சௌபாக்கியங்களையும் பெற்று இன்புற்று வாழ எல்லாம் வல்ல விக்னேஸ்வரப் பெருமான் அருள்பாலிக்க வாழ்த்தி வணங்குகின்றேன்.

**ஆழ்வாப்பிள்ளை சிறி,**
**பிரதேசசெயலாளர்,**
**பிரதேச செயலகம், நல்லூர்.**



### யாழ்ப்பாண பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலயத்தின் கும்பாபிஷேகப் பெரு விழா இன்று 2017.05.29 திகதியன்று நடைபெறவுள்ளதையிட்டு விழா சிறப்புடன் அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். ஆலயங்களின் வரலாற்றிலும் விருத்தியிலும் அப்பிரதேச மக்களின் பங்களிப்பு, விருத்தி, வரலாறு என்பன தங்கியிருப்பதைப் பிரதிபலிக்கும்இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன. இத்தகைய நிலையில் இவ் ஆலயத்தினை குறுகிய காலத்தில் கோபுரம் ஒன்றினையும் நிறுவி நிறைவுறப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் நடத்தி மக்களின் வாழ்வியலை மேம்படுத்த எமது மக்கள் மேற் கொண்டுள்ள அரும்பணிகளுக்கு அன்னார் சார்பிலும் எனது சார்பிலும் எனது பாராட்டுக்களையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"
"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"
"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

என்னும் சமயம் சார்ந்த பொன் மொழிகட்கு ஆதாரமாக ஆல யத்தின் கும்பாபிஷேகம் நடைபெற்று ஆலயத்திற்கும் மக்க ளுக்கும் புனிதத்தை ஏற்படுத்தி மக்களது ஆன்மீக வாழ்வு மேம்பட வேண்டும் என வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடை கின்றேன்.

**திரு.பொன்னம்பலம் தயானந்தன்**
**பிரதேச செயலர்,**
**பிரதேச செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**



### யாழ்.மாநகர ஆணையாளரின் வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாண மாநகரின் ஓடை ஒழுங்கையில் இன்று குடமுழுக்குக் கண்டு மஹா கும்பாபிஷேகம் காணுகின்ற யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயிலானது ஈழமணித் திருநாட்டின் வடபுலத்தில் அமைந்துள்ள கோயில்களுக்கு உண்டான அனைத்துச் சிறப்புக்களையும் பெற்ற ஒரு ஆலயமாக விளங்குகின்றது. ஆன்மாவை லயப்படுத்துகின்ற ஆலய வழிபாட்டில் தன்னகத்தே கொண்டிருக்கக் கூடிய இறைவனுக்கான பல்வேறுபட்ட கிரியைகள் நடைபெறுவது வழமையானதொன்றே. அப்படியான நிலையிலே இந்த ஆலயமும் இன்று மஹா கும்பாபிஷேகம் காண்பதும் அதன் நிறைவில் விநாயகப் பெருமானின் நல்லாசியை பெறவிருப்பதும் நாம் அனைவரும் செய்து கொண்ட பெரும் பாக்கியமேயாகும். காட்டுத்துறை பிள்ளையார் எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இக் கோயிலை புனருத்தாரணம் செய்வதில் ஊர் கூடி தேர் இழுத்துள்ளார்கள் என்றே சொல்லலாம். மகத்தான விநாயகப் பெருமானின் திருவருட் பொலிவு திக்கெட்டும் பரவி நிற்க பாரம்பரிய சம்பிரதாயங்களுடன் அம் மஹா கும்பாபிஷேகத்தை நடத்தும் இவ் ஆலய பரிபாலன சபையினருக்கு பாராட்டுக்க ளைத் தெரிவிப்பதோடு அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக் னேஸ்வரப் பிள்ளையாரின் பாதம் பணிந்து நல்வாழ்த்துக்க ளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பொ.வாகீசன், ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**





### ஆலய அறங்காவலரின் வாழ்த்துரை

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்து றையில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையாரின் திருவருட்சக்தி மிகவும் உன்னதமா னது. எமது மூதாதையர்கள் பக்திபூர்வமாக நிர் மாணித்து உள்ளன்புடன் பரிபாலித்து வந்த இவ் வாலயத்தில் இப்பிரதேசத்தில் நீண்ட காலம் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாகத் திருப்பணிகள் தாமதமடைந்திருந்தன. எம்பெருமானின் திருவருளால் கடந்த வருடம் 06.07.2016 அன்று பாலஸ் தாபனம் நடைபெறறு மிக குறுகிய காலத்தில் திருப்பணிகள் இவ்வாலயத்தில் நிறைவேற எம்பெருமானின் திருவருளே துணை செய்துள்ளது. எமது பரி பூரணமான அனுசரணையில் திருப்பணிச்சபையொன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் ஆலய உபயகாரர்கள், விநாயக அடியார்கள் பக்தியுடன் மனமுவந்து வழங்கிய திருப்பணிகளுக்கான நிதியுதவி பெறப்பட்டு இவ்வாலய புனருத்தாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு இன்று இவ்வாலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளமை எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. திருப்பணி கைங்கரியத்தில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட அன்பர்களுக்கு விநாயகப்பெருமானின் திருவருள் கிட்டுவதாக. ஆலயத்தின் கர்ப்பக் கிரகம், விமானம், பரிவாரமூர்த்திகளுக்கான ஆலயங்கள், ஆலய மண்டபம், அலங் கார வளை வுகள், இரண்டு மணிக் கோபுரங்கள், புதிதாக அமைக்கப் பட்ட மூன்று தளங்களைக்கொண்ட இராஜகோபு ரம் மற்றும் நில வேலைகள் ஆகி யவை புனரமைக்கப்பட்டும் புதிதாக கட்டியும் ஆலயம் தெய் வீகச் சிறப் புடன் காட்சியளிக்கின்றது. எம்பெரு மானுக்கு இன்று (29.05.2017) நிகழும் இம் மஹா கும்பாபிஷே கத்தை தரிசிக்கும் பேறு எமக்குக் கிட்டியுள்ளமை நாம் செய்த தவப்பேறே. திருப்பணிகளை அர்ப்பணிப்புடன் நிறை வேற்றிய திருப்பணிச் சபையினருக்கும் திருப்பணிக்கு நிதியுதவி நல்கிய உபயகாரர்கள், ஊர்மக்கள் ஆகியோருக்கும் ஆலயத்தை அழகுற அமைத்த சிற்பக்கலைஞர்களுக்கும் ஆலய குருமாருக்கும் மற்றும் பல்வேறு வகையில் உதவிநல்கிய அனைவருக்கும் இத் தருணத்தில் எமதுநன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எம் பெரு மானின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

**திருமதி.சிவகுமாரி சோமலிங்ககுமார்,**
**திருமதி தவனேஸ்வரி ஸ்ரீநிவாசன்,**
**ஆலய முகாமையாளரும் உரிமையாளரும்**





### செயலாளர் மற்றும் பொருளாளர் உள்ளத்திலிருந்து

விக்கினங்களை தீர்ப்பவர், வெற்றிகள்தருபவர்விநாயகர். எங்கள் குல தெய்வமாக வண்ணை மாநகரில் காட்டுத்துறையம்பதியில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் விநாயகர் எம்ம வர்க்கு வாரி வழங்கும் அருட்கடாட்சம் அளவிடற் கரியது. நீண்ட கால இடைவெளியில் அடியார்களின் அபிலாசையின் வெளிப்பாடாக ஏவிளம்பி வருடச் சித்திரை புனர்பூசத் தில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது சொற்கள் கடந்த பெரு மகிழ்ச்சியான விடயம். வித்தைக்கு இறைவனாக, வினைகள் அறுக்கும் பெருமானாக, ஆனந்த வாழ்வு அளிப்பவர் எங்கள் அம்பலவாண விக்னேஸ்வரப் பெருமான். அப்பெரு மானுக்கு மஹா கும்பாபிஷேகம் எனும் போது அதற்காக யார் யார் என்ன என்ன விதத்தில் உதவி புரிந்தனரோ அவ்வடியார் களின் புண் ணிய கைங்கரியத் தைப் போற்ற வேண்டும். கோலக் கோபுர கோகரணம் சூழாக்கால் களால் பயன் என்? மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகள், அழகிய இராஜ கோபுரம் என கம்பீரமாய் மிளிர்ந்து கொண்டிருக்கும் தலமாக எங்கள் காட்டுத் துறையான் திருக்கோயில் அமையப் பெற்றிருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை அனைவருடனும் பகிர்ந்து கொள்கிறோம். தன உதவி , திரவிய உதவி ,சரீர உதவி எனப் பல்வேறு உதவிகள் நல்கிய அத்தனை அன்புள்ளங்களுக் கும் விநாயகரின் பேரருள் கிட்ட வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

**கோபுர தரிசனம் கோடி புண்ணியம்**

**த.யோகேஸ்வரன், செயலாளர், Dr. இ.தயாசிவம், பொருளாளர்**

### காட்டுத்துறை பிள்ளையார் காட்டும் கருணை


ஒட்டுத்துறை பிரிவிலுறை காட்டுத்துறை பிள்ளையார்
காட்டும் கருணையினால் கல்விமான்கள் கடைக்காரர்
நாட்டமிகு தொழிலாளர் நியாயவாதியரை உருவாக்கி
ஊட்டமுற அருளளித்து உயர்வுற வைக்கின்றார்

காட்டுத்துறை கணபதியை கரங்குவித்து வணங்குவோர்
வீட்டுத்துயர் விலகும் வேதனைகள் வாடிவிடும்
நாட்டமுடன் நாயகனை நாளும் தொழுதுநாம்
நாட்டிடுவோம் நல்லமைதி ஈட்டிடுவோம் நற்பேறு


வானுயர் கோபுரத்துள் விநாயகரை வரவழைக்க
தேனாக மனமுவந்து திரவியங்கள் தந்தோரும்
கோணாது கங்குல்பகல் கோவிலுக்காய் உழைத்தோரும்
தூணாக தலை நிமிர்ந்து துயரின்றி வாழ்ந்திடுவர்

உதித்த புதுப்பொலிவு மதியாய் ஒளிபரப்ப
முதியோரும் மற்றோரும் முன் வந்து உதவிதரப்
பதிவாகுமித் திருநாளில் பக்திமல ரெடுத்து
துதிப்போம் கணபதியை தேறுதல் பெறுவதற்கு

**விநாயகர் அடியார்.**







அகில இலங்கை இளங்கோ கழகத்தின் புலமை ஒலி இலக்கியப் பெருவிழாவில் பண்டிதர் வீ.பரந்தாமனுக்கு தமிழ்மாமணி விருது வழங்கப்படுவதையும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம், யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# பலியானோர் எண்ணிக்கை 127 ஆக அதிகரிப்பு









இலங்கையின் தென் பகுதியில் ஏற்பட்ட பாரிய இயற்கை அனர்த்தம் காரணமாக இதுவரையில் 127 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை உயிரிழப்பு இன்னும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை, மேலும் 150 பேர் காணாமல் போயுள்ளனர். இந்த அனர்த்தம் காரணமாக ஒருஇலட்சத்து 5ஆயிரத்து 956 குடும்பங்களைச் சேர்ந்த 4இலட்சத்து 15 ஆயிரத்து 618 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

அத்துடன் 1602 வீடுகள் பகுதியாகவும் 187 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. 14 மாவட்டங்களில் மக்கள் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, களுத்துறை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த 14 மாவட்டங்களிலும், வெள்ளம், மண்சரிவு மற்றும் பலத்த காற்று உள்ளிட்ட அனர்த்தங்கள் காரணமாக 51 ஆயிரத்து 899 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இரண்டாயிரத்து 937 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்துக்கும் அதிகமானோர் 69 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக இதுவரை 47 பேர் பலியானதுடன், 4 ஆயிரத்து 815 குடும்பங்களை சேர்ந்த 18 ஆயிரத்து 31 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மேற்படி மாவட்டத்தில் 44 மத்திய நிலையங்களில் பாதிக்கப்பட்ட 1194 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 844 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, காவத்தை, பெல்மதுளை, பதுல்பான, கிரியெல்ல, இறக்குவானை, எஹலியகொட, குருவிட்ட, நிவித்திகல, எலபாத்த, கலவான,அயகம ஆகிய பிரதேசங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மழை குறைவடைந்துள்ள போதிலும் வெள்ள நீரின் அளவு குறைவடையவில்லை என வடிகாலமைப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. இதேவேளை வெள்ள நீரின் அதிகரிப்பு காரணமாக பல கங்கைகள் உடைப்பெடுத்துள்ளன. இதன்காரணமாக் பல கிராமங்கள் நீரில் மூழ்கி மாயமான தேசமாக காட்சியளிக்கின்றன. இதன் காரணமாக பல மக்களை மீட்க முடியாமல் மீட்பு பணியாளர்கள் தவித்து வருகின்றனர்.

தொடர்ந்தும் அடைமழை பெய்யுமாயின் உயிரிழப்புகளின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்படும் என மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-7)

# கருவாடு என்ற போர்வையில் கஞ்சா விற்ற தம்பதியர் கைது



(திருகோணமலை)

திருகோணமலை - சுமேத்திராகம பகுதியில், கருவாடு விற்பனை என்ற போர்வையில் கேரள கஞ்சா விற்பனை செய்த தம்பதியர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த விற்பனை நிலையம் தொடர்பாக திருகோணமலை பிராந்திய போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, 52 வயது கணவனும் 48 வயது மனைவியுமே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

இவர்கள் வசமிருந்த 1500 கிராம் கேரள கஞ்சாவும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் வழங்கிய தகவலின் பிரகாரம், திருகோணமலை மரத்தடிச் சந்தியில் வைத்து 6 கிராம் கேரள கஞ்சாவுடன் 27 வயது நபரையும் கைதுசெய்துள்ளனர். (இ-7)

# ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் மரணம்



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற பாரிய வெள்ளத்தினால் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் உயிரிழந்துள்ளனர்.

மண் சரிவு ஒன்றில் சிக்கி இவர்கள் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை குறித்த ஐவரின் இறுதிச் சடங்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கணவன், மனைவி மற்றும் இளம் பிள்ளைகள் மூவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் இந்த ஐவரும் ஒரே இடத்தில் புதைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இந்த குடும்பத்தின் மூத்த மகன் மாத்திரம் இந்த வெள்ளத்தின் போது உயிர் தப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் இடம்பெற்ற போது அவர் வீட்டில் இல்லாத காரணத்தினால் உயிர் பிழைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# சர்வதேச போர்க்குற்ற விசாரணை நீதிமன்றின் முன்னாள் நீதிபதி இலங்கைக்கு வருகின்றார்

சர்வதேச போர்க்குற்ற விசாரணை நீதிமன்றின் முன்னாள் நீதிபதி ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

சர்வதேச நீதிமன்றம் மற்றும் கம்போஜியாவின் சர்வதேச போர்க்குற்ற விசாரணை நீதிமன்றின் நீதிபதியாக கடமையாற்றிய மொடோனு கூச் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியில் கூச் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய உள்ள விசாரணைப் பொறிமுறைமை உருவாக்கப்படுவதற்கு ஆலோசனை வழங்குவதே ஜப்பானியரான கூச்சின் இலங்கை விஜயத்திற்கான பிரதான நோக்கம் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் நல்லிணக்க முனைப்புக்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில் இந்த விஜயம் அமையும் என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த சர்வதேச நீதிபதி, பரணகம ஆணைக்குழுவின் ஆலோசனைக் குழுவிலும் அங்கம் வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட பல்வேறு முக்கியஸ்தர்களை கூச் சந்திக்கவுள்ளார்.

இவர், இதற்கு முன்னரும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

கூச்சின் இலங்கை விஜயத்தை, ஜப்பானிய தூதரகம் உறுதி செய்துள்ளது. (இ-7)

# இயற்கை அனர்த்தத்திற்கு துரித தீர்வுகள் வழங்கப்படும்

## பிரதமர் ரணில் உறுதி

(கொழும்பு)

இயற்கை அனர்த்தத்திற்கு அரசாங்கம் துரித தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற விசேட பேச்சு வார்த்தையின் போது பிரதமர் இதனைத் தெரிவித்ததுடன் அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்பை மதிப்பீடு செய்த பின்னர், தேவையான நிவாரணம் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



மேலும் இருப்பிடங்களை இழந்தவர்களின் வீடுகள், சுகாதாரம், பிள்ளைகளின் கல்வி ஆகியன தொடர்பிலான விடயங்களைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், குறிப்பாக கல்வி நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் உள்ள பிரதேசங்களுக்கு விமானத்தின் மூலம் விரைவாக உணவுகள் வழங்கப்படும் எனவும் குறித்த பிரதேசங்களில் சுகாதார நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நெகிழ்வுமுறை வேலை நேரத்திட்டம் ஜூலை முதலாம் திகதி முதல் அமுல்



(கொழும்பு)

அரச பணியாளர்களுக்கான நெகிழ்வுமுறை வேலை நேரத்திட்டத்தை அரசாங்கம் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

கொழும்பு - பத்தரமுல்ல பிரிவில் முதற்கட்டமாக இந்த நெகிழ்வுமுறை வேலை நேரத்திட்டம் வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலர் நிகால் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறையின் கீழ் பத்தரமுல்ல பிரிவில் உள்ள அரச பணியாளர்கள் காலை 7.30 மணி தொடக்கம் 9.30 மணிவரையான நேரத்துக்குள், எந்த நேரத்திலும் தமது பணிகளை ஆரம்பிக்க முடியும்.

அத்துடன், வேலையை ஆரம்பித்த நேரத்துக்கு ஏற்ப, எட்டு மணிநேரத்தின் பின்னர், பிற்பகல் 3.30 மணி தொடக்கம், 5.30 மணிக்கு பணிகளை முடித்துக்கொள்ளலாம்.

இதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது. போக்குவரத்து நெருக்கடிகளை குறைப்பதற்கே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மூன்று மாதங்களுக்கு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, அதன் சாதக, பாதகங்கள் ஆராயப்பட்டு ஏனைய இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தத் திட்டம் தொடரபான சுற்றறிக்கை விரைவில் அரச பணியாளர்க்ளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று பொது நிர்வாக அமைச்சின் செயலர் ரத்ன சிறி தெரிவித்துள்ளார்.

பொதுமக்களைப் பாதிக்காத வரையில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் தமது வேலை நேர முறைமையை வகுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நெகிழ்வுமுறை வேலை நேரத்திட்டத்தை தனியார் துறையிலும் நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (இ-7)

# இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தம் குறித்து ரஷ்யா கவலை வெளியீடு



இலங்கையில் ஏற்பட்டுள்ள அனர்த்தம் தொடர்பில் ரஷ்யா கவலை வெளியிட்டுள்ளது.

சீரற்ற காலநிலையினால் இலங்கையில் 127 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 150 பேர் வரையில் காணாமற்போயுள்ளனர்.

இந்த அனர்த்த நிலைமைகள் குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இரங்கல் வெளியிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு உத்தியோக பூர்வமான முறையில் இந்த இரங்கல் செய்தியை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த நெருக்கடியான தருணத்தில் ரஷ்ய மக்கள் இலங்கை மக்களுடன் துயரைப் பகிர்ந்து கொள்வதாக ரஷ்ய ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## எல்லோரும் உங்களுக்குக் கட்டுப்பட வேண்டுமா?

நான் அறிந்தவரை மனிதர்கள் நான்கு விடயங்களுக்குக் கட்டுப்படுகின்றனர்.

அதிகாரம், பணம், திறமை, அன்பு ஒவ்வொருவரும் அவரவர் சுபாவத்தைப் பொறுத்து மேற்கூறியவற்றிற்குக் கட்டுப்படத் தயாராக இருக்கிறார்கள்.

மற்றவர்களைக் கட்டுப்படுத்தி ஆள நினைப்பது ஒரு வகையில் மேலாண்மை உணர்வு. இது தவறுதான் . எனினும் வாழ்க்கையில் வெற்றி வெற நாம் மற்றவர்களை வசப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறதே!

அதிகாரம் என்பது எல்லோருக்கும் அமைந்து விடாது. பணம் படைத்தவர்களுக்கும் பதவி கிடைத்தவர்களுக்கும் தான் இது வாய்க்கும்.

அதிகாரத்தைக் சுவடச் சரிவரப் பயன்படுத்தினால் தான் மற்றவர்கள் கட்டுப்படுவார்கள்.

அதை வைத்துக் கொண்டு ஆட்டம் போட்டால் கட்டுப்படுவதாக நடிப்பார்களே தவிர, பின்னால் திட்டுவார்கள். ஏன் எதிராகத் திரை மறைவில் வேலை செய்ய ஆரம்பித்து விடுவார்கள்.

பணமென்று எடுத்துக் கொண்டால், பெரும்பாலானவர்கள் இந்த விடயத்தில் பலவீனர்களாக இருக்கிறார்கள் என்பது உண்மையே.

ஆனால் பல நேரங்களில் நோட்டுகள் செல்லாத் தாள்களாக ஆகிவிடுவதுண்டு. பணத்தைக் காட்டி என்னை மடக்கிடலாம்னு பார்த்தியா என்று விடயம் எதிர்மறையாகத் திரும்பிவிடுவதும் உண்டு. சில கோட்டைக்குள் பணத்தின் அதிகாரம் சூன்யமாக இருக்கும்.

ஒருவன் திறமைசாலி என்றால் அவ்னை வேலைக்கு அமர்த்தியிருக்கும் முதலாளி கூட அவனைக் கண்டு உள்ளுக்குள் சற்றே அஞ்சுவார். அவன் என்ன கேட்டாலும் நடக்கும். அவன் என்ன சொன்னாலும் அது எடுபடும்.

இது ஒரு முதலாளி தன்னையும் அறியாமல் அவனுக்குக் கட்டுப்படுவதையே காட்டுகிறது.

குடும்பத்தில் இளையவனாக இருந்தாலும் ஒருவன் திறமைசாலி என்பதற்காகக் கூடப் பிறந்தவர்கள் மட்டுமல்ல, பெற்றோரே கூட அவன் சிந்திக்கிற கோணத்திலேயே சிந்தித்து, அவன் சொல்லுகிறபடியே நடந்து கொள்ளும் குடும்பத்தையும் நாம் பார்க்கத்தான் செய்கிறோம்.

ஆனால் இவற்றையெல்லாம் விடச் சக்தி வாய்ந்தது அன்பு எனும் ஆயுதம்.

பார்ப்பதற்குக் கூர் மழுங்கிய சாதாரண ஆயுதம் போல் தான் தோன்றும்.ஆனால் இது எப்படிப்பட்டவர்களையும் வளைத்துக் கட்டிப் போட்டு விடும்.

இதை நீங்கள் நட்பு என்றோ பாசம் என்றோ பிரியம் என்றோ எப்படி வேண்டுமானாலும் பெயரிட்டுக் கொள்ளுங்கள்.

ஆனால் இதன் ஆற்றல் மட்டும் அளவிட முடியாதது. இந்த ஆயுதத்திற்குக் கட்டுப்படாதவர்கள் என்று விதிவிலக்கு கூட இருக்க முடியாது.

மனித மனத்தின் தலையாய பலவீனம் என்ன தெரியுமா? அன்புக்காக ஏங்குவதுதான், எவ்வளவு கிடைத்தாலும் சரி, மனிதன் அது போதாது போதாது என்று மேலும் ஏங்குவான்.

ஆக அதிகாரம், பண பலம், திறமை, அன்பு ஆகியவற்றை ஒவ்வொன்றாக உபயோகித்தோ எல்லாவற்றையும் உபயோகித்தோ எத்தகையவர்களையும் கட்டுக்குள் கொண்டு வந்து விடலாம்.

இந்தப் பாணங்களையெல்லாம் பயன்படுத்தாமல் "என் பேச்சை யார் கேக்குறாங்க" என்று புலம்பித் திரிவது பொருளற்றது.


**லேனா தமிழ்வாணன்**

# எனது முதலாவது பட்ஜெட் புதிய அமெரிக்காவுக்கான அடித்தளமாக அமையும்

## ஜனாதிபதி ட்ரம்ப் உறுதி

(வோஷிங்டன்)

**புதிய அமெரிக்காவுக்கான அடித்தளமாக தனது முதல் பட்ஜெட் அமையும் என அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உறுதியளித்துள்ளார்.**




அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்ப், வாரந்தோறும் வானொலி மற்றும் இணையத்தளம் மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றி வருகிறார். அந்தவகையில் நேற்று முன்தினம் தனது அரசின் முதல் பட்ஜெட் குறித்து பேசினார். இந்த பட்ஜெட் புதிய அமெரிக்காவுக்கான அடித்தளமாக அமையும் என அப்போது அவர் உறுதியளித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், 'அமெரிக்காவின் உன்னதத்தை எட்டவும், நாட்டின் எதிர்கால பொருளாதார வளத்துக்காகவும், எனது நிர்வாகம் புதிய அடித்தளத்தை அமைத்து வருகிறது. அந்த வகையில் எனது நிர்வாகம் தாக்கல் செய்யும் முதல் பட்ஜெட், அமெரிக்க தொழிலாளர்களுக்கு இலட்சக்கணக்கான வேலை வாய்ப்புக்களுக்கான பாதையை உருவாக்குவதுடன் பொருளாதார தேக்க நிலையையும் மாற்றும் என்றார்.

தனது பட்ஜெட்டில் சமூக பாதுகாப்பு மற்றும் மருத்துவ திட்டங்களுக்கு நிதி குறைக்கப்படாது என்று கூறிய ட்ரம்ப் நமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மக்கள் வீடுகளில் மேற்கொள்வது போல முன்னுரிமைகளை அமைத்தல், தேவையற்றதை குறைத்தல், புதிய வாய்ப்புக்களை வளர்த்தல் போன்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

கவனமும், பாதுகாப்பும் இல்லாமல் பொருளாதார வளர்ச்சி சாத்தியமாகாது என்றும் ட்ரம்ப் தெரிவித்தார். (இ)

## தான் படித்த பல்கலையில் கௌரவம் பெற்ற மார்க் நிகழ்த்திய உரையின் 10 அம்சங்கள்

ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் படித்து, படிப்பைப் பாதியில் நிறுத்திய மார்க் ஸக்கர்பெர்க்கு, கடந்த வியாழக்கிழமை அதே பல்கலைக் கழகம் கௌரவப் பட்டம் வழங்கியது.

ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தின் ஓய்வறையில் 2004 ஆம் ஆண்டு பேஸ்புக்கைத் தொடங்கிய மார்க், இன்று சமூக ஊடகத்தில் உச்சத்தைத் தொட்டிருக்கிறார். பேஸ்புக்கால் படிப்பை நிறுத்திய மார்க், அதன் அங்கீகாரத்தால் தான் படிப்பை நிறுத்திய பல்கலைக்கழத்திலேயே கௌரவப் பட்டம் பெற்றுள்ளார்.

பட்டமளிப்பு விழாவில் அவர் நிகழ்த்திய உரையின் பத்து அம்சங்கள்

1. அனைத்தையும் எதிர் கொள்ளுங்கள். என்னால் எப்போதும் முடியாததை நீங்கள் சாதித்திருக்கிறீர்கள். இப்பொழுது ஹார்வர்டில் பேச வந்திருக்கிறேன் என்றால் நிச்சயம் எதையோ நிகழ்த்தியிருக்கிறேன்.


தன் பெற்றோருடன் மார்க்

2. ஹ்ரார்வர்டின் ஆகச் சிறந்த நினைவு பிரிசில்லாவை (மனைவி) சந்தித்தது தான். அப்போதுதான் என்னுடைய இணையத் தளமான பேஸ்மாஷை நிறுவியிருந்தேன். ஆனால் நான் தோற்கப் போகிறேன் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். என் பெற்றோர் அங்கிருந்து என்னை அழைத்துச் செல்ல வந்துவிட்டனர். என் நண்பர்கள் என்னை ஒரு விழாவுக்கு அழைத்துச் சென்றனர். அங்குதான் என் வாழ்க்கைத்துணையை சந்தித்தேன்.

3. யோசனைகள் எப்போதுமே முழுமையாக உருவாகாது. அதை ஆரம்பித்துப் பணியாற்றினால் மட்டுமே உங்களுக்குப் புரிய ஆரம்பிக்கும். திட்டங்களைத் தொடங்கினால் மட்டும் போதும். மிகுதியை அதுவே பார்த்துக் கொள்ளும் மக்களை இணைப்பது குறித்து முழுமையாக எனக்குத் தெரிந்திருந்தால், நிச்சயமாக நான் பேஸ்புக்கை உருவாக்கி இருக்க மாட்டேன்.

4. கொள்கைகளோடு இருப்பது நல்லதுதான். அதே நேரத்தில் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதற்கும் தயாராக இருங்கள். பெரிய திட்டங்களை நோக்கி உழைத்துக் கொண்டிருப்பவர்களை உலகம் விசித்திரமாகப் பார்க்கலாம். நீங்கள் சரியான முடிவை அளித்தாலும் கூட.

5. நமது அமைப்பில் ஏதோ தவறு இருக்கிறது. 10 வருடங்களில் கோடிக்கணக்கான டொலர்களை சம்பாதிக்க முடிபவர்கள் இருக்கும் அதே உலகில்தான், இலட்சக் கணக்கான மாணவர்கள் தங்களின் கடனைக் கூடக் கட்ட முடியாமல் தவிக்கிறார்கள்.

6. ஒவ்வொரு தலைமுறைக்கும் ஒவ்வொரு கடமைகள், தேவைகள் இருக்கின்றன. முந்தைய தலைமுறைகள் வாக்குக்கும் சமூக உரிமைகளுக்கும் போராடினர். இந்த காலகட்டம் புதிய சமூக ஒப்பந்தத்துக்கான நேரம்.

7. நம்முடைய திட்டங்கள் உலகளாவிய அளவில் இருக்க வேண்டும். அதைக் கொண்டு மற்றவர்களும் புதிய யோசனைகளைத் தொடங்க முயற்சி செய்ய ஏதுவாக இருக்கவேண்டும்.

8. நாட்டில் ஏழை மக்களுக்கு உதவ ஏராளமானோர் காத்திருக்கின்றனர். ஆனால் பணம் கொடுப்பது மட்டுமே சேவை அல்ல. உங்களின் நேரத்தையும் கொடுக்கலாம்.

9. ஒவ்வொரு தலைமுறையும் தங்களின் நட்பு வட்டத்தைப் பெருக்கிக் கொண்டே செல்கிறது. நம் தலைமுறையில், இப்போது ஒட்டுமொத்த உலகமும் ஒன்றிணைந்து வருகிறது. ஆனால் நாம் நிலையில்லாத காலத்தில் வாழ்ந்து வருகிறோம்.

10. நம்முடைய நேரத்துக்கான போராட்டம் இது. சர்வாதிகாரம், தனிமைப் படுத்தல் மற்றும் தேசியவாத சக்திகளுக்கு எதிராக உலகளாவிய சமூகத்தினர் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் அமெரிக்காவின் நிலை என்ன?

### அடுத்த வாரம் முடிவு செய்கிறார் ட்ரம்ப்



(சிசிலி)

பாரிஸ் பருவநிலை மாற்றம் தொடர்பான ஒப்பந்தத்தில் அமெரிக்காவின் நிலை குறித்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அடுத்த வாரம் தனது இறுதி முடிவை அறிவிக்க உள்ளார்.

உலக வெப்பமயமாதலைக் குறைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தம், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அமுலுக்கு வந்தது. இந்த ஒப்பந்தத்தில் இந்தியா, சீனா உட்பட 195 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

ஆனால், அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இந்த ஒப்பந்தத்திற்கு ஆதரவாக இல்லை.

இந்த ஒப்பந்தம் அமெரிக்காவின் வளர்ச்சிக்கு ஏற்றதல்ல என்று ட்ரம்ப் நினைப்பதால், இந்த ஒப்பந்தம் குறித்து அவரது நிர்வாகம் இதுவரை எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. எனவே, இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிவிடும் என்றே பரவலாக பேசப்பட்டு வருகிறது.

ஆனால், பாரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து விலகக் கூடாது என ட்ரம்பின் கட்சியான குடியரசு கட்சியைச் சேர்ந்த 36 செனட் சபை எம்.பிக்கள் வலியுறுத்தி உள்ளனர். சில எம்.பிக்கள் வெளியேற வேண்டும் என கருத்து தெரிவித்துள்ளனர். எனவே, பாரிஸ் ஒப்பந்தத்தில் உள்ள சாதக பாதகங்களை ஆராய்ந்து வரும் ட்ரம்ப் நிர்வாகம், ஒப்பந்தத்தை ஏற்பதா அல்லது விலகுவதா? என்பது பற்றி ஆலோசித்து வருகிறது.

இந்த சிக்கலான சூழ்நிலையில், பாரிஸ் ஒப்பந்தம் தொடர்பாக அடுத்த வாரம் இறுதி முடிவை எடுக்க உள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவர், இத்தாலியின் சிசிலியில் இருந்து டுவிட்டர் மூலம் இத்தகவலை வெளியிட்டுள்ளார். (இ)




## பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தால் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி முடங்கும்-வெள்ளை மாளிகை

பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தினால் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி முடங்கும் நிலை ஏற்படும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போதே ட்ரம்ப் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார், பாரிஸ் பருவநிலை ஒப்பந்தம் குறித்து அவர் கடுமையாக விமர்சித்தும் வந்தார்.

பாரிஸ் பருவநிலை ஒப்பந்தம் ஒருதலைபட்சமாக உள்ளது எனவும், அமெரிக்கா ஏகப்பட்ட பில்லியன் டொலர்கள் தொகையை இதற்காக செலவழிக்கிறது. ஆனால் இந்தியா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் பங்களிப்பு இதில் ஏதும் இல்லை என குற்றஞ் சாட்டினார்.




பாரிஸ் பருவ நிலை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெளியேறுவதை உலக நாடுகளின் தலைவர்கள் தடுப்பது போன்று சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் முகமூடிகள் அணிந்து நடித்து காட்டும் காட்சி.

இந்த நிலையில் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தம் குறித்து ட்ரம்பின் பொருளாதார ஆலோசகர் கேரி கோன் கடந்த வெள்ளிக்கிழமை கூறும்போது, "முந்தைய ஒபாமா நிர்வாகத்தால் அமெரிக்கப் பொருளாதாரத்தில் முடக்கம் ஏற்பட்டதை நாம் அறிவோம். ஜனாதிபதி ட்ரம்ப் நாடு திரும்பியவுடன் பாரிஸ் ஒப்பந்தம் தொடர்பாக தனது முடிவை வெளியிட இருக்கிறார்.


பாரிஸ் பருவநிலை ஒப்பந்தம் குறித்து ஜி-7 நாடுகளின் தலைவர்களின் கருத்தை கேட்கவும் அவர் ஆர்வமாக இருக்கிறார். அவர்களுடனான உரையாடல் ஆக்கபூர்வமான விவாதமாக இருந்திருக்கும். ஏனெனில் நம்முடன் பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் ஜனாதிபதிகள் உள்ளனர்.

ஜனாதிபதி ட்ரம்ப் சுற்றுச்சூழல் குறித்து மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளார். சுற்றுச் சூழலுக்கு நலன் பயக்கும் செயல்களை செய்ய விரும்புகிறார். அத்துடன் சேர்த்து அமெரிக்கர்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும் அவர் விரும்புகிறார்" என்றார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா இருந்த போது கரியமிலவாயு வெளியீட்டில் அமெரிக்கா இரண்டாம் இடத்தில் இருந்தது. மேலும் கரியமிலவாயு அளவை 2005 ஆம்ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டுக்குள் 25 வீதம் முதல் 28வீதம்வரை குறைக்க அவர் உறுதியும் அளிக்கப்பட்டது.

196 நாடுகள் உள்ள பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகுவது என்பது அந்நாட்டின் பருவநிலை சார்ந்த ராஜதந்திர நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது. (இ-7)

# அமைச்சரவையில் மீண்டும் மாற்றம்



(கொழும்பு)

அமைச்சரவையில் மீண்டும் ஒரு மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக அமைச்சர் கபீர் ஹாசிம் தெரி வித்துள்ளார்.

நல்லாட்சி அரசின் முதலாவது அமைச்சரவை மாற்றம் அண்மையில் இடம்பெற்றிருந்த நிலையில் சிங்கள ஊடகம் ஒன்றிற்கு அமைச்சர் இவ்விடயத்தைகுறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அமைச்சுப் பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் அந்தந்த அமைச்சு தொடர்பாக சிறந்த தேர்ச்சியை கொணடிருக்க வேண்டுமென்ற மகிந்த அணியினரின் வாதத்தை ஏற்க முடியாதெனவும் அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

குறிப்பாக கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் மூன்று முக்கிய அமைச்சு பொறுப்புக்களை ராஜப க்ஷ குடும்பத்தினர் தம்வசம் வைத்திருந்ததை மறந்து விடக்கூடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கலாபூசண விருது -2017

இலங்கையின் கலை இலக்கியத் துறைகளுக்கு அளப்பெரும் பங்காற்றுகின்ற கலைஞர்கள், இலக்கியவாதிகள், விற்பன்னர்களுக்கு வருடம் தோறும் அரசின் உயர் விருதான கலாபூஷணம் எனும் விருது வழங்கப்படுகிறது.

இவ்விருது வழங்கல் தொடர்பான செயற்பாடுகளை வருடந்தோறும் கலாசார அமைச்சின் கீழ் இயங்குகின்ற கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற் கொள்கின்றது.

இவ் வைபவத்தின் போது சிங்களம், முஸ்லிம், தமிழ் ஆகிய மூவினக் கலைஞர்களும் உள்ளடக்கப்படுகின்றார்கள்.

தமிழ்க் கலைஞர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு உரியதாகும். 60 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள் மட்டுமே இவ் விருதினைப் பெறுவதற்கான தகைமையுடையவர்களாவர். சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை போன்ற பல்வேறு துறைகளில் மிகவும் சிறப்புறச் சேவையாற்றிய வர்கள் விருது பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

2017 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருதுக்கு தகைமையுடைய தமிழ்க் கலைஞர்கள் தமது விண்ணப்பங்களை பிரதேச, மாவட்டச் செயலகங்களில் பணிபுரியும் எமது திணைக்கள கலாசார உத்தியோகத்தர்களிடம் இருந்தும் திணைக்களத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இந்த விண்ணப்பப்படிவங்களை WWW. Hindu dept. gov.lk என்ற திணைக்களத்தின் இணையத்தள முகவரியில் இருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப் பங்களோடு கலைஞர்கள் தமது தகுதியை உணர்த்தும் முழுமையான ஆவணங்களை பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும் என பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ

# வீதியோரத்தில் வீசப்பட்டிருந்த ஒரு நாள் சிசு உயிருடன் மீட்பு

பிறந்து ஒரு நாளேயான சிசுவொன்று வீதி. ஓரத்தில் வீசப் பட்டிருந்த நிலையில் நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை மீட்கப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது ஏறாவூர் சர்வோதய வீதியில் சிசுவொன்று வீசப் பட்டுக்கிடப்பதைக் கண்ட அவ் வீதியை அண்டி வாழும் மக்கள் சிசுவை பாதுகாப்பாக எடுத்து ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

உயிருடன் இருந்த அந்த சிசு மேலதிக பராமரிப்புக்கும் சிகிச்சைகளுக்குமாக உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டதாக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம். எச். எம். தாரிக் தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பாக தாங்கள் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரி வித்த ஏறாவூர் பொலிஸார் சிசுவின் தாய் இன்னமும் கண்டறியப் பட வில்லை என்றும் கூறினர். (இ-7)

# இரத்தினபுரியில் 13 பிரதேச செயலக பிரிவுகளில் மண்சரிவு அபாயம்

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் 13 பிரதேச செயலகங்களிலும் மண்சரிவு, வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

மண் சரிவு அனர்த்தத்தால் நிவித்திகலை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதி பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு மண்ணில் புதையுண்ட 12 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 14 பேர் காணாமல் போயுள்ளதுடன் இவர்களை மீட்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இதுவரை 47 பேர் மண்சரிவினாலும், வெள்ளத்தாலும் உயிரிழந்துள்ளனர். 328 குடும்பங்களைச் சேர்ந்த 1168 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 123 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி வெள்ளவல மரத் தோட்டம் பிரதேசத்தில் மண் சரிவு அபாயத்தால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இரத்தினபுரி நகரில் ஏற்பட்ட வெள்ளத்தால் இரத்தினபுரி சிவன் கோவில், முத்தவ பௌத்த விகாரை, அமன பாலிகா மகா வித்தியாலயம் என்பவற்றில் பாதிக்கப்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி வெள்ளம் பரவியுள்ள பகுதிகளில் ஓடங்கள் மூலம் மக்களை ஏற்றி பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதோடு போக்கு வரத்துக்கும் உதவி வருகின்றனர்.

காவத்தை பொற்றுவ 100 ஏக்கர் பிரிவில் 40 குடும்பங்கள் மண்சரிவு அபாயத்தை எதிர் நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும்இறக்குவானை காவத்தை தேவ பெல்மதுள்ள பகுதிகளில் வெள்ளம் வழிந்தோடியுள்ள போதும் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை வழமைக்கு திரும்ப வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1086


### மாதவன்




### கௌசல்சா




### வதனி




### கவிதா




### மதுமிதா

ஒரு அரிய கண்டுபிடிப்பு
உதட்டுக்கு மேல்
முளைத்தால் மீசை
உதட்டுக்கு கீழ்
முளைத்தால் தாடி
இதில இருந்து என்ன
தெரியுது வாய்தான்
பிரிவினைக்குக் காரணம்
இவ்ளோதாங்க உலகம்.

### கங்கயன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ்நாடு- ஓர் பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

2001ஆம் ஆண்டு இந்தியக் குடிக்கணிப்புப்படி கர்நாடக மாநிலத்தில் 1886765 தமிழர்களும் ஆந்திர மாநிலத்தில் 1362198 தமிழர்களும் கேரள மாநிலத்தில் 598618 தமிழர்களும் இருந்துள்ளனர். ஆந்திர மற்றும் கேரள மாநிலங்களில் தமிழர்கள் கூடுதலாக- தமிழக எல்லைப்புறங்களை அண்டி வாழ்கின்றார்கள். ஆனால் கர்நாடக மாநிலத்தில் தமிழர்கள் மிகக்கூடுதலாக பெங்களூர் நகரப் பகுதியிலும் மண்டைய மாவட்டத்திலும் வாழ்கின்றார்கள். தமிழ்நாட்டின் நவீன கால வரலாற்றை பின்வரும் மூன்று காலமாகப்பிரித்து நோக்குவோம்.

1.மதுராஸ்பிறசிடென்சிக்காலம்
2.சென்னை மாநிலக் காலம்
3.தமிழ்நாட்டுக்காலம்

மதராஸ் பிறசிடென்சியில் தமிழ்நாடு, ஆந்திரக் கரையோர மாவட்டங்கள் மற்றும் கேரளா, கர்நாடக மற்றும் ஒரிசா பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. 1800க்குப் பின் நெடுங்காலமாக பிரித்தானியர் நிர்வாகத்திற்கு உட்பட்டு இருந்த மாநிலத்திற்கு 1920 இல் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்டசபை உருவாக்கப்பட்டது. இச்சபை 132 அங்கத்தவர்களைக் கொண்டதாக இருந்ததுடன் இத்தொகையில் 98 பேர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களாகவும் 34 பேர் அரசால் நியமிக்கப்பட்டனர். 1920 இல் இருந்து 1949 வரை இம்முறை நடைமுறையில் இருந்தது.

இக்காலத்தில் 14 முதலமைச்சர்கள் இருந்துள்ளனர். இவர்களுள் 10 பேர் நீதிக்கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் 4 பேர் இந்திய தேசிய காங்கிரஸை சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். கூடுதலான முதல்வர்கள் தெலுங்கர்களாக இருந்தனர். இக்காலத்தில் ஒருமுறை இராஜகோபாலாச்சாரியார் முதல்வராக இருந்துள்ளார். 1916 இல் நிதிக்கட்சி செயற்பாடுகள் குறிப்பாக இம் மாநிலத்தில் பிராமணர் அல்லாதோரின் நலன்களில் ஈடுபாடு கொண்ட சங்கமாக முதலில் பரிணமித்து பின் 1920 இல் ஆட்சியைப் பிடித்தது.

1930, 1940களில் பெரியார் ஈ.வி.கே.இராசசாமியார் முக்கிய சமூக சீர்திருத்தக்கொள்கைகளை முன்னெடுத்தார். இவரது கொள்கைகள் தமிழ்நாட்டின் அரசியலில் பெரும் தாக்கத்தை பின்னர் ஏற்படுத்தியிருந்தது.


இந்தியா 26 ஆம் திகதி ஜனவரி 1950 இல் குடியரசாகியது. இதனைத் தொடர்ந்து சென்னை மாநிலம் உருவாகியது. புதிய முறையில் இருசபைகள் கொண்ட சட்ட சபைகளுக்கான தேர்தல்கள் 1952 இல் நடைபெற்றன. சென்னை மாநிலத்திலிருந்து 1953இல் ஆந்திரமாநிலம்உருவாக்கப்பட்டது.பின்னர் 1956 இல் இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. இதனால் சென்னையில் இக்காலப்பகுதியில் ஐந்து முதல்வர்கள் இருந்துள்ளனர். இவர்களது பெயர்களும் ஆட்சி செய்த நாட்களும் பின்வருமாறு,

திரு. பி.எஸ்.குமாரசாமிராஜா (805), திரு.இராஜகோபாலாச்சாரி (733), திரு.காமராஜ மூன்று முறைகள் (3432) திரு. பக்தவற்சலம் (1251), அறிஞர் அண்ணாத்துரை (680), 1952 இல் இருந்து 1969 இற்கு இடைப்பட்ட காலத்தில் சென்னை மாநிலம் பல வழிகளில் முன்னேற்றம் அடைந்தது. இக்காலத்தில் முதல்வராக இருந்தவர்களில் அறிஞர் அண்ணாத்துரையை விட மற்றைய நால்வரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாவர். கர்மவீரர் காமராசரின் சிறந்த ஆட்சி பற்றி இன்றும் மக்களால் பேசப்படுகின்றது.

1969 தைத்திங்கள் 14 ஆம் திகதி சென்னை மாநிலத்தின் பெயர் தமிழ்நாடு என மாற்றப்பட்டது. இப்பெயர் மாற்றம் தமிழர்களுக்கு பெரும் கௌரவத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது. தமிழ் உணர்வைவளர்த்தெடுக்க உதவியது.

இப்பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்னர் இன்றைய முதல்வர் பழனிச்சாமி உட்பட எட்டுப் பேர்கள் முதல்வர்களாக இருந்துள்ளனர். இப்பெயர் மாற்றத்தின்பின் அறிஞர் அண்ணாத்துரை பதவியிலிருந்த பொழுதே உயிர்நீத்தார். இவரது மரணத்தின் பின்னர் கலைஞர் கருணாநிதி முதல்வராகப் பொறுப்பேற்றார். இவர் தமிழ்நாட்டின் முதல்வராக 5 தடவைகள் இருந்ததுடன் 13 முறைகள் சட்ட சபைத் தேர்தலில் பங்கு பற்றி 13 முறைகளும் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார். 60 வருடங்களாக தமிழக சட்ட சபையில் அங்கத்தவராகவும் இருந்து வருகின்றதுடன் தமிழ்நாட்டு அரசியலில் மிக முக்கிய அரை நூற்றாண்டுக்கு மேல் மிக முக்கிய பிரமுகராக இருக்கின்றார்.

1972 இல் அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கும் அன்றைய தி.மு.க.பொருளாளர் புரட்சித்தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரனுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகியது. மேலும் 1977 இல் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் தி.மு.கவை தோற்கடித்து தமிழக ஆட்சியைக் கைப்பற்றி யது.




துரை 20 நாட்கள் மாத்திரமே முதல்வராக இருந்துள்ளார். முதல்வராக கடமையாற்றியவர்களும் அவர்கள் கடமையாற்றிய நாட்களும் பின்வருமாறு,

அறிஞர் அண்ணாத்துரை (700), கலைஞர் கருணாநிதி ஐந்துமுறை (6863), மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரன் (3624), புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா ஆறுமுறை (5239), ஜானகி இராமச்சந்திரன் (23), நாவலர் நெடுஞ்செழியன் இருமுறை (15), ஓ.பன்னீர்செல்வம் மூன்று முறை (368), எடப்பாடி பழனிச்சாமி (16 ஆம் திகதி பெப்ரவரி 2017 இல் இருந்து முதல்வராக இருந்து வருகிறார்.

1967 இல் இருந்து இன்று வரை தமிழ்நாடு திராவிடக் கட்சிகளால் திராவிட முன்னேற்றக் கழகத்தாலும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தாலும் ஆட்சி செய்யப்பட்டு வருகின்றது. அறிஞர் அண்ணாத்துரை 1967 இல் தி.மு.க. ஆட்சியை நிறுவி 700 நாட்கள் மாத்திரமே முதல்வராக இருந்துள்ளார்.

நோய்வாய்ப்பட்ட அறிஞர்

1977 இல் ஆட்சியைப் பிடித்த எம்.ஜி. ஆர். 1987 வரை உயிருடன் இருக்கும்வரை சகல சட்ட சபைத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று ஆட்சி புரிந்தார். 1987 இல் எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின்னர் நாவலர் நெடுஞ்செழியன், திருமதி ஜானகி இராமச்சந்திரன் சில நாட்கள் முதல்வர்களாக இருந்தனர். 1989 இல் கலைஞர் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி 1991 ஆம் ஆண்டு வரை ஆட்சியி லிருந்தார். மக்கள் திலகம் எம்.ஜி. ஆரின் மறைவுக்குப் பின் கட்சி யின் தலைமைப் பதவிக்கு வந்த புரட்சித் தலைவி 1991 இல் அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியை நிறுவினார்.

1996 இல் மீண்டும் தி.மு.க. ஆட்சி கலைஞர் தலைமையில் ஏற்பட்டது. மீண்டும் 2001 இல் அ.தி.மு.க. ஆட்சி ஏற்பட்டது. பின்னர் 2006 தி.மு.க ஆட்சி ஏற்பட்டது. 1911 இல் இருந்து இன்று வரை அ.தி.மு.க ஆட்சியே இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது.

தமிழ்நாட்டின் அரசியலில் 1967 இற்குப் பின்னர் கலைஞர் கருணாநிதி, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா ஆகிய மூவரும் முக்கியமானவர்களாக இருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் பல அரசியல் கட்சிகள், பல அரசியல் பிரமுகர்கள் இருந்தபோதும் மாநில அரசியலில் மிகச் சிறிய இடத்தையே பெற்றுள்ளனர்.

1952 தொடக்கம் 1964 இற்கிடையில் முதல்வராக இருந்த கர்மவீரன் காமராஜர் அவர்கள் இன்றும் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார்.

தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டதுடன் இக்கட்சிகளால் முன்னெடுத்த சமூக சீர்திருத்தங்கள், நலனோக்குத் திட்டங்கள்,செயற்பாடுகள் குறிப்பாக நலிந்தவர்கள், புறந்தள்ளப்பட்டவர்கள், தலித்துக்கள் மேம்படவும் புதுவாழ்வு பெறவும் உதவியாக இருந்தன. பெரியார் இராமச்சாமி நாயக்கரின் சமூக முற்போக்கு கொள்கைகளை குறிப்பாக கலைஞர் கருணாநிதி சிறப்பாக முன்னெடுத்துள்ளார்.

மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரனும் புரட்சித் தலைவி ஜெயலலிதாவும் பல்வேறு சமூக நலத் திட்டங்களை முன்னெடுத்துள்ள போதும் சமூக நீதிக் கொள்கைகளை பெரியளவில் முன்னெடுக்கவில்லை. மேலும் ஜெயலலிதாவின் ஆட்சியின் பிற்பகுதியில் பழைமைவாதக் கருத்துக்கள், பகுத்தறிவுக்கு ஒவ்வாத நிகழ்வுகள் மீளவும்வலுப்பெறத்தொடங்கின.

மேற்கு வங்கத்தில் மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 25 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து ஆட்சி செய்த பொழுதும் அவர்கள் பொதுவுடைமை சித்தாந்தத்தை முன்னிறுத்தி, நலிந்த, புறந்தள்ளப்பட்ட தலித்துக்களின் வாழ்வை மேம்படுத்த முனைந்தது. அவர்கள் சமூக சீர்திருத்தங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறிவிட்டனர். இதனால் வங்காளத்தில் சமூக - பொருளாதார முன்னேற்றம் கீழ்மட்டத்தில் பெரியளவு ஏற்படவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் திராவிட கட்சிகள் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுடன் சமூக வலுவூட்டல் திட்டங்களையும் சமமாக முன்னெடுத்தால் தமிழ்நாடு சமூக - பொருளாதாரத் துறையில் பெரியளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

சென்னை நகரை ஆங்கிலத்தில் மதராஸ் என்றும் தமிழில் சென்னை நகர் எனவும் அழைத்தனர். இன்று சென்னைநகர் தமிழிலும் ஆங்கிலத்திலும் சென்னை என்றே அழைக்கப்படுகிறது. இப்பெயர் மாற்றம் 2009இல் ஏற்படுத்தப்பட்டது. 1639 இல் மதராஸ் பட்டணம் என்று ஆரம்பமான இந்நகர் 2009 இல்தான் பெயர் மாற்றம் பெற்றது.

சென்னை நகர் குறிப்பாக 1956க்குப் பின்பு துரித வளர்ச்சி பெற்றுள்ளது. 1950களில்சென்னை நகருக்கு தெலுங்கர்கள் உரிமை கொண்டாடிய நிலையில் இந் நகர் தமிழ் நாட்டிற்குக் கிடைத்தது. இதனால் தமிழ் நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் சென்னை நகரின் தமிழர் இருப்பை தமிழ் பண்பாட்டை வலுப்படுத்த பல முயற்சிகள் மேற்கொண்டு வெற்றியும் பெற்றுள்ளனர்.

இன்று சென்னையில் தெலுங்கர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் கலாசாரச் செல்வாக்கு குறைவடைந்துள்ளது. சென்னை இன்று இந்தியாவின் நான்காவது பெரிய நகராக வளர்ந்துள்ளது.

இந்நகர் தமிழ் நாட்டின் தலை நகராகவும் தமிழ் நாட்டின் வட கிழக்கு மூலையில் ஆந்திர மாநிலத்தின் எல்லைக்கு அருகாமையாக இருப்பது மாநில நிர்வாகத்துக்குச் சாதகமில்லை. இருப்பினும் இந் நகரில் தமிழரின் பிடியை உறுதிசெய்ய, தமிழரின் இருப்பைஅதிகரிக்கஇந்நகரை தொடர்ந்து தமிழ் நாட்டின் தலை நகராக வைத்திருக்கிறார்கள்.

சென்னையில் தெலுங்கர் பிரச்சினை இல்லாதுவிடின் தமிழ் நாட்டின் தலைநகரை தமிழ் நாட்டின் மத்திய பகுதியில் அமைத்திருக்க முடியும்.

தமிழ் நாடு இந்தியாவின் முக்கிய மாநிலங்களில் ஒன்றாக இருப்பதுடன் இந்திய நாட்டின் சமூக பொருளாதாரத்தில் முக்கிய பங்கையும் வகிக்கின்றது. தமிழ் நாட்டுக்கு இந்திய லோக் சபையில் 39 ஆசனங்களும் பாண்டிச்சேரிக்கு (படம்) ஒரு ஆசனமும் இருக் கின்றது.

மேலும் தமிழ்நாட்டு முக்கிய சில அரசியல் பிரமுகர்கள் மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசத்தில் இருந்தும் தற்பொழுது ராஜ்ய சபாவில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறார்கள்.

இதுபோலராஜ்யசபையில்தமிழ் நாட்டுக்கு 18 ஆசனங்களும் பாண்டிச்சேரிக்கு ஒரு ஆசனமும் உண்டு.இந்தியமத்தியஅரசில் தமிழ் நாட்டை சேர்ந்தவர்கள் இராஜகோபாலாச்சாரியார் கவர்ன ஜெனரலாகவும், டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன், டாக்டர் அப்துல்கலாம் இந்தியாவின் ஜனாதிபதிகளாக இருந்துள்ளனர்.

மேலும் சிறப்பு மிக்க மத்திய அமைச்சர்கள் பலரை குறிப்பாக ரி.ரி.கிருஷ்ணமாச்சாரி, சி.சுப்ரமணியம், பழனியப்பன் சிதம்பரம் போன்ற பலரை தமிழ் நாடு கொடுத்திருந்தது. இந்தியா வில் மத்தியிலும் மாநிலத்திலும் சிறந்த ஆட்சியை வழங்க தமிழ் நாடு ஆக்கமான பங்களிப்பை கொடுத்துள்ளது.

6000 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றையும் மிகப் பெரிய பண்பாட்டையும் நாகரிகத்தையும் கலை இலக்கிய செழுமையையும் செம்மொழியான தமிழ் மொழியை தாய்மொழியாக கொண்ட தமிழ்நாடு காலத்திற்கு காலம் பல்வேறு ஏற்ற இறக்கங்கள் ஊடாக சென்று இன்று இந்தியாவின் சிறந்த மாநிலம் என்ற புதிய அரசியல் அடையாளத்தைப்பெற்றுள்ளது. (தொடரும்)

# புதிய பிராண்டுகளை படைக்கும் விலகுதல் கோட்பாடு

## தொழில் ரகசியம்

'சார்ள்ஸ் டார்வின்' என்றால் 'மனிதன் குரங்கின் வழித்தோன்றல்' என்று கூறியதுதான் நம் நினைவிற்கு வரும். 1859இல் 'இனங்களின் தோற்றம்' (The origin of species) என்ற புத்தகத்தை படைத்தவர்.

இனங்கள் என்ற விதை விருட்சமாய் வளர்ந்த விதத்தை விவரமாய் விவரித்தவர்.

இவர் படைத்த பரிணாம வளர்ச்சி தத்துவம்தான் பலரால் பேசப்படுகிறது. இனங்கள் வளர்ந்த விதம் ஒருபுறம் இருக்கட்டும். இவை பிறந்த விதமல்லவா முக்கியம். புதிய இனங்கள் தோன்றிய முறையல்லவா பிரதானம். உலக இனங்கள் ஒவ்வொன்றும் விலகி அதிலிருந்துதான் புதிய அவதாரங்கள் பிறந்தன என்கிறார் டார்வின்.

இதை விலகுதல் கோட்பாடு (Divergence) என்கிறார். விலகுதல் இல்லையெனில் ஒற்றை செல் இனங்களான 'ப்ரோகர்யோட்ஸ்' மட்டுமே காலப்போக்கில் வளர்ந்து இராட்சத அளவில் இன்று பூமியில் திரிந்து கொண்டிருக்கும். அப்படி நடந்திருந்தால் நாமும் இங்கு வாராவாரம் எழுதிக் கொண்டிருக்க மாட்டோம். நீங்களும் தலையெழுத்தே என்று இதை படித்துக் கொண்டிருக்கமாட்டீர்கள்!


விலகுதல் கோட்பாடுதான் பரிணாம வளர்ச்சிக்கே வித்திட்டது என்கிறார் டார்வின். இனங்கள் வளர்வதோடு விலகவும் செய்து புதிய இனங்கள் பிறந்து வளர்ந்தன. அதுதான் உலகில் நாம் பார்க்கும் கோடிக்கணக்கான இனங்கள் என்கிறார்.

'பாந்தேரா' என்ற மிருகம்தான் காலப்போக்கில் விலகி சிங்கம், புலி, சிறுத்தை என்று புதிய இனங்களாய் பிறந்து பரிணாம வளர்ச்சி அடைந்தன.

குரங்கு இனத்திலிருந்து விலகி காலப்போக்கில் வளர்ந்தவைதான் ஏப், கொரில்லா, சிம்பன்சி, ஒரங்குட்டான், கிப்பன், நீங்கள், நான் எல்லாம்.

விலங்கியலை விடுங்கள், பிராண்டுகள் பிறப்பதும் இப்படியே என்கிறார்கள் 'ஆல் ரீஸ்' மற்றும் அவர் மகள் 'லாரா ரீஸ்'. இவர்கள் எழுதிய சுவாரசியமான புத்தகம் 'பிராண்டுகளின் தோற்றம்' (The origin of Brands). இயற்கையின் விலகுதல் கோட்பாட்டு போல் பொருள்கள் விலகி அதிலிருந்து புதிய பொருள் வகைகள் தோன்றுகின்றன என்கிறார்கள் அப்பாவும் மகளும்.

முதலில் கார் என்ற பொருள் சிவனே என்று ஓடிக்கொண்டிருந்தது. அது காலப்போக்கில் விலகி 'சின்னக் கார்', 'செடான்', 'ஆடம்பர கார்', 'ஹேட்ச்பேக்', 'மினி வேன்',



'எஸ்யூவி', 'எலக்ட்ரிக் கார்', 'ஹைபிரிட்' என்று அதிலிருந்து புதிய பிரிவுகள் பிறந்தன.

அதாவது கார் என்ற பொருள் பிறந்து, வளர்ந்து அதிலிருந்து மேலும் புதிய வகைகள் பிறந்தன. பரிணாம வளர்ச்சியடைந்தன.

ஒரு பொருளிலிருந்து புதிய பிரிவுகள் பிறந்தாலும் ஒவ்வொரு பிரிவிற்கும் பிரத்தியேக தன்மைகள் உண்டு. எஸ்யுவி என்பது பெரிய சைஸ் ஹேட்ச்பேக் அல்ல. செடானின் மறு வடிவமும் அல்ல. ஆனால் அவை ஒரே பொருளிலிருந்து பிறந்தவை. ஆதார தன்மை ஒன்றாய் இருந்தாலும் ஒவ்வொரு புதிய பிரிவும் தனித்தன்மை கொண்டவை.

முதலில் மெயின்பிரேம் கம்ப்யூட்டர் என்ற பொருள் பிறந்தது. அது விலகி 'மினி', 'வர்க்ஸ்டேஷன்', 'டெஸ்க்ரொப்', 'பர்சனல் கம்ப்யூட்டர்', 'லேப்டாப்' என்று சைஸ் வாரியாய் புதிய பிரிவுகள் பிறந்து அதுவும் பத்தாதென்று இன்று 'டேப்ளட்' அளவிற்கு விலகியிருக்கிறது. அடுத்து இன்னும் விலகி புதிய பிரிவுகள் பிறந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

விலகுதல் கோட்பாடு எலெக்ட்ரோனிக், அறிவியல் சார்ந்த பொருள்களுக்கு மட்டும் என்ற எண்ணத்தை மனதில் பரிணாம வளர்ச்சியாய் வளர்க்காதீர்கள். வாழ்க்கை முதல் வியாபாரம் வரை எதுவுமே இக்கோட்பாட்டிற்கு விதிவிலக்கல்ல.

அனைவருக்கும் பொதுவாக ஹோட்டல் என்ற பொருள் பிரிவு இருந்தது. அதுவே பின் 'அசைவ' 'சைவ உணவகம்' என்று விலகியது. அசைவ உணவகங்களும் விலகி புதிய வகை ஹோட்டல்கள் பிறந்தன. இவையும் இன்று விலகி எத்தனை ரூபத்தில் கடை திறந்திருக்கின்றன என்பதை நினைத்துப் பாருங்கள்.

இயற்கையே இப்படித்தான் என்றால் செயற்கையான பிராண்டுகள் மட்டும் வேறு மாதிரியா இருக்கும்?

இனங்களை விடுங்கள், பாழாய் போன அரசியல் கட்சிகள் பிறப்பதும் இப்படியே.

என்ன, தலையை சுற்றுகிறதா? டாக்டரை பார்க்கவேண்டுமா? எந்த டாக்டரை? எண்சாண் உடம்பின் எந்த பகுதியில் பிரச்சினை என்றாலும் ஒரு காலத்தில் ஓடிச் சென்று பார்த்த குடும்ப டாக்டர் இன்று அநியாயத்திற்கு விலகி 'ஒஃப்தல்மாலஜிஸ்ட்', 'டெண்டிஸ்ட்' 'ஈஎன்ரி', 'நியூராலஜிஸ்ட்', 'பீடியாட்ரீஷியன்', 'கைனகாலஜிஸ்ட்' என்று ஹாலிவுட் பட பெயர்கள் போல் புதிய அவதாரங்கள் எடுத்திருக்கிறார்கள். இப்படியே விலகி இடது கண்ணுக்கும், வலது கண்ணுக்கும் கூட தனித் தனி டாக்டர் என்று வந்தாலும் வரலாம், யார் கண்டது!

ஒவ்வொரு பொருள் பிரிவும் காலப் போக்கில் விலகி அதிலிருந்து புதிய பிரிவுகள் பிறக்கும். இவ்வாறே புதிய பிராண்டுகள் அறிமுகப்படுத்த சந்தைப்படுத்துநர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்கிறார்கள் ஆல் மற்றும் லாரா. ஆக, புதிய பிராண்டுகள் அறிமுகப்படுத்தி சந்தையில் வெற்றி பெற முயலும் தொழிலதிபர்கள் புரிந்து கொள்ள வேண்டிய ஆதார தத்துவம் விலகுதல் கோட்பாடு. இருக்கும் பொருள் பிரிவுகளை பிரித்து மேய்ந்து, வாடிக்கையாளரின் தேவைகளை அது பூர்த்தி செய்யும் விதங்களை புரிந்து அதை செழுமைப்படுத்தும் விதங்களை ஆராயும் போதுதான் புதிய பொருள் பிரிவிற்கான யோசனை பிறக்கும். அப்படி புதிய பொருள் பிரிவை படைத்து அதில் முதல் பிராண்டாய் நுழைந்து வளர்வதே வெற்றிக்கு வழி.

இயற்கையில் சுற்று சூழலால் ஏற்படும் மாற்றங்கள்தான் இனங்கள் விலக காரணம் என்றால் தொழிலில் தொழிற்நுட்பம் மற்றும் மக்களின் சமூக கலாசார மாற்றங்கள்தான் பொருள்கள் விலகி புதிய பொருள் பிரிவுகள் பிறக்க காரணமாகின்றன.

காபி என்ற பானம் விலகி ஃபில்டர் காபி, இன்ஸ்டண்ட் காபி, ஐஸ் காபி, காபீன் ஃப்ரீ காபி என்று விலகியிருப்பது நம்மில் ஏற்பட்ட சமூக கலாசார மாற்றங்களால். கூட்டுக் குடும்பங்கள் தனிக் குடும்பங்களாய் விலகியிருப்பதும் இவ்வாறே!

புதிய பிராண்ட் என்பது ஒரு புதிய இனம் போல.

சிங்கம் என்பது பிராண்ட் என்றால், புதிய பிராண்டை உருவாக்க சிங்கத்தையா மேம்படுத்துவீர்கள்? சிங்கத்தை எவ்வளவு மேம்படுத்தினாலும் கடைசி வரை சிங்கம் தானே.

புதிய பிராண்ட் வேண்டுமென்றால் சிங்கம் பிரிந்து புலி ஆனது போல் இருக்கும் பொருள் பிரிவை பிரித்து புதியதை அறிமுகப்படுத்தும் வழியை தேடுங்கள் என்பதே இயற்கை நமக்கு கற்றுத் தரும் வழி!

புதிய இனம் பிறக்கையில் பல சமயங்களில் பழைய இனங்கள் மறைகின்றன. அதேபோல் பிறக்கும் புது பிராண்ட் இருக்கும் பழைய பிராண்டை அழித்து முன்னேறலாம். கம்ப்யூட்டர் டைப்ரைட்டரை அழித்தது போல. லேப்டாப் டெஸ்க்டாப்பை ஒழித்து வருவது போல.

பென் ட்ரைவ் டிவிடி தகடுகளை போட்டுத் தள்ளுவதை போல.

விலகுதல் கோட்பாட்டை அவ்வளவு எளிதாக கண்ணால் பார்க்க முடிவதில்லை. அதனாலேயே பலருக்கு இதன் சக்தி புரிவதில்லை.

தோட்டத்திலுள்ள மரத்தில் புதிய கிளைகள் பிறப்பது நம் கண்ணிற்கு தெரிவதில்லை. ஆனால் பல நாள் கழித்து அதே மரத்தை பார்க்கும் போது 'அட எப்படி இம்மரம் பெரியதானது, எங்கிருந்து இதில் புதிய கிளைகள் முளைத்தது' என்று ஆச்சரியப்பட வைக்கிறது!

கல் தோன்றி மண் தோன்றா காலம் முதல் வாழ்க்கை இப்படித்தான் புதிய இனங்களை படைத்து வருகிறது. வியாபாரம் இப்படியே புதிய பிராண்டுகளை அறிமுகப்படுத்தி வருகிறது. கோடிக்கணக்கான காலம் கடந்து வந்த பாதை இப்படி இருக்கும்போது வருங்காலம் மட்டும் வேறு விதமாகவா இருந்துவிடப் போகிறது!




## இவற்றின் பங்களிப்பு என்ன?

உலகம் முழுவதும் பல்வேறு நிதி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. வறுமையை ஒழிப்பது, உள்கட்டமைப்பை மேம்படுத்துவது, நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்தை முறைப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு பணிகளை இந்த நிதி நிறுவனங்கள் செய்து வருகின்றன. ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிப்பதில் உலக வர்த்தக நிறுவனம் முக்கிய பங்காற்றுகிறது. முக்கிய நிதி நிறுவனங்கள் பற்றியும் உலக வர்த்தக நிறுவனத்தையும் பற்றியும் சில தகவல்களே அருகில்....




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,729.66 | 6,697.86 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,844.68 | 3,828.59 ⇩ |

புரள்வு (ரூபா.மில்.) 5,333.158

**விலை அசைவுகளின் அடிப்படையில்**

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** எஸ்எம்பீ லீசிங்(X)(0.40), ஹரிச்சந்திர (2,782.60), நுவரெலிய(1,661.80), பீப்ள்ஸ் மேர்ச்(17.30), ஆதாம் கப்பிரல்(0.90).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** பிறக்லங். பினான்(65.20), பரஹன்(70.10), புளூடைமன்ட்(X)(0.50), ஆதாம் இன்வெஸ்மன்ட்(0.60), எஸ்எம்பி லீசிங்(0.70).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## முதலீட்டாளர் பயிற்சிப்பட்டறை

பங்குச்சந்தை முதலீட்டு ஆர்வலர்களுக்கான விசேட விரிவுரைகள் (workshop) எதிர்வரும் யூன் மாதத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வாரஇறுதி நாட்களில் பங்குப்பரிவர்த்தனை யாழ்-கிளையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் கலந்து கொள்ள ஆர்வமுடையவர்கள் பங்குப் பரிவர்த்தனை யாழ் கிளையிலோ அல்லது 0777822014 என்ற தொலைபேசி ஊடாகவோ thileepan@cse.lk ஊடாகவோ பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 150.77 | 154.57 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 193.50 | 200.10 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 167.74 | 174.10 |
| சுவிஸ் பிராங் | 153.81 | 159.89 |
| கனேடிய டொலர் | 111.06 | 115.45 |
| அவுஸ்திரேலிய டொலர் | 111.07 | 116.07 |
| சிங்கப்பூர் டொலர் | 108.34 | 112.30 |
| ஜப்பான் யென் | 1.34 | 1.39 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.36 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.51 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




# நொண்டிக் குதிரை

27.05.2017 தொடர்ச்சி...

"சிங்க ராஜாவே, ஒருநாள் நானும் என் நண்பர்களும் புல்தரையில் நின்ற போது மறைந்திருந்து நீங்கள் எங்களை கவனித்து விட்டீர்கள். தாங்கள் எங்களை உடனடியாகத் தாக்க வராமல் அமைதியுடன் அந்த இடத்தை விட்டுச் சென்றீர்கள். தாங்கள் அமைதியுடன் செல்வதை நான் கவனித்தேன். தங்கள் மூலம் என் நண்பர்களுக்கு ஆபத்து ஏற்படப் போகிறது என்பதை உணர்ந்தேன். அதனால் தான் அதனைத் தடுக்க வேண்டி ஓடோடி வந்தேன்.


"சிங்க ராஜாவே, நான் என் நண்பர்களை, என் உயிரை விட மேலாக மதித்து வருகிறேன். தங்களால் என் நண்பர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டால் அதனை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. எனவே, நானே என் உயிரைக் கொடுத்து உங்களுக்கு விருந்தாக வந்துள்ளேன். நீங்கள் என்னைச் சாப்பிடுங்கள். என் நண்பர்களை விட்டு விடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டது நொண்டிக் குதிரை.

தன் நண்பர்களுக்காக இந்த அளவுக்கு கெஞ்சும் நொண்டிக் குதிரையைக் கண்டு சிங்கத்தின் மனம் மேலும் இளகியது. அதன் கண்களில் இருந்து கண்ணீர் வடியத் தொடங்கியது.

"சிங்கமே, நீ எதற்காக அழுகிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது? நான் ஏதாவது உன் மனத்தை புண்படுத்தும் விதத்தில் பேசிவிட்டேனா?" என்று கேட்டது குதிரை.

"குதிரையே, நீ என் மனம் புண்படும்படியாகப் பேசவில்லை. ஆனால், உன் நண்பர்கள் அனைவருமே உன் மனம் புண்படும படியாகப் பேசுவதை நான் மறைந்திருந்து கவனித்தேன். ஆனால், நீயோ அதனை எல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாமல் உன் நண்பர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு இருக்கிறாயே, உன்னைப் பற்றி உன் நண்பர்கள் இதுவரையிலும் புரிந்து கொள்ளாதது துரதிர்ஷ்டம்தான். இதோ இப்போதே உன்னை அழைத்துச் சென்று, உனது உயர்ந்த குணத்தைப் பற்றி அவர்களுக்கு எடுத்துரைக்கிறேன்" என்றவாறு குதிரையை அழைத்துக் கொண்டு புறப்பட்டது சிங்கம்.

அந்த நேரத்தில் புல் தரையில்



எல்லா குதிரைகளும் கூட்டமாக நின்று புற்களை மேய்ந்து கொண்டிருந்தன. நொண்டிக் குதிரை சிங்கத்தோடு வருவதைக் கண்டதும் எல்லாக் குதிரைகளும் திடுக்கிட்டன.

உடனே சிங்கம், "நீங்கள் யாரும் என்னைக் கண்டு பயப்பட வேண்டாம். உங்களுக்கு ஒரு உண்மையை எடுத்துரைத்து, உங்கள் அறியாமையைப் போக்கும் பொருட்டே உங்களைத் தேடி வந்துள்ளேன்" என்றது சிங்கம்.

சிங்கத்தின் பேச்சைக்கேட்ட மாத்திரத்தில் எல்லா குதிரைகளும் திகைப்படைந்தன.

"சிங்க ராஜாவே, வணக்கம். தங்களின் அன்பான பேச்சைக் கேட்டதும் எங்கள் அச்சம் விலகி விட்டது. தாங்கள் எங்களுக்கு என்ன நீதி வழங்கினாலும் அதனை ஏற்றுக்கொண்டு உங்கள் பேச்சுக்கு கட்டுப்பட்டு இருப்போம்" என்றன குதிரைகள்.

"நல்லது குதிரைகளே! இதோ நிற்கின்ற உங்கள் நண்பனான இந்த நொண்டிக் குதிரையை நீங்கள் உங்களில் ஒருவனாக எண்ணாமல் அதன் மனத்தை புண்படுத்தி வந்தீர்கள். ஆனால், உங்கள் நண்பனான இவனோ, என்னால் உங்களுக்கு வரப் போகின்ற ஆபத்தைத் தடுத்து, உங்களுக்காக எனக்கு விருந்தாக உணவளிக்க வந்தது. அதன் தியாகத்தை நான் என்னென்று சொல்வது. இப்படி ஒரு தியாகமிக்க நண்பனை இத்தனை காலமும் நீங்கள் புரிந்துகொள்ளாமல் இருந்து விட்டீர்கள்" என்றது சிங்கம்.

சிங்கத்தின் பேச்சைக் கேட்டதும் எல்லா குதிரைகளும் தலை குனிந்தன. அன்போடு அந்த நொண்டிக் குதிரையினை சூழ்ந்து கொண்டன. அதனைக் கண்டு சிங்கமும் மகிழ்ச்சியடைந்தது.மற்ற குதிரைகளோ நொண்டிக் குதிரையைப் பார்த்தன.

"நண்பா, உனக்கு கால்தான் ஊனம். ஆனால், எங்களுக்கோ மனமே ஊனமாகி விட்டது. அதனால்தான் உன் நட்பின் அருங் குணத்தை தெரியாமல் இருந்து விட்டோம். நீ அமைதியாக இருந்தே சிங்க ராஜாவே போற்றும்படியான அன்பான செயலைச் செய்து விட்டாய். நாங்கள் எல்லாரும் உன்னை வாழ்த்தி வணங்க கடமைப்பட்டுள்ளோம்"என்றன குதிரைகள்.

"நாம் வந்த வேலை இனிதே முடிவடைந்து விட்டது. குதிரைகள் எல்லாம் திருந்திவிட்டன. இனி மேல் அவற்றுக்குள் எந்தவிதமான பேதமும் ஏற்படாது" என்று நினைத்து திரும்பி சென்றது சிங்கம்.

(முற்றும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

05.2017 29

- 1453 - ஒட்டோமான்படைகள்கொன்ஸ்தாந்திநோபில் நகரைக்கைப்பற்றிபைசண்டைன்பேரரசை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.
- 1660 - இரண்டாம்சார்ல்ஸ்பிரித்தானியாவின்மன்னனாக மீண்டும் முடி சூடினான்.
- 1727 - இரண்டாம்பீட்டர்ரஷ்யாவின்மன்னனாக முடி சூடினான்.
- 1780 - அமெரிக்கப் புரட்சிப் போர்: சரணடைந்த அமெரிக்கப் போர்வீரர்கள் 113 பேரை "பனஸ்ட்ரே டார்லெட்டன்" தலைமையிலான படைகள் கொன்றனர்.
- 1790 - ரோட் தீவு ஐக்கிய அமெரிக்காவின் 13வது மாநிலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1848 - விஸ்கொன்சின் ஐக்கிய அமெரிக்காவின் 30வது மாநிலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1869 - பிரித்தானியாவில் பகிரங்க மரணதண்டனை தடை செய்யப்பட்டது.
- 1886 - வேதியியலாளர் ஜோன் பெம்பர்ட்டன் முதற்தடவையாக கொக்கக் கோலாவுக்கான விளம்பரத்தை அட்லாண்டா ஜேர்னல் இதழில் வெளியிட்டார்.
- 1919 - ஐன்ஸ்டீனின் சார்புக் கோட்பாடு சோதிக்கப்பட்டது. பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டது.
- 1947 - இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1953 - முதற்தடவையாக சேர் எட்மண்ட் ஹில்லறி, ஷேர்ப்பா டென்சிங் இருவரும் எவரெஸ்ட் சிகரத்தை ஏறி சாதனை படைத்தனர்.
- 1982 - இலங்கை மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1985 - பெல்ஜியத்தில் ஐரோப்பிய கால்பந்தாட்டப் போட்டி ஒன்றில் இடம்பெற்ற கைகலப்பில் மைதானத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததில் 39 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.
- 1988 - அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ரேகன் முதற்தடவையாக சோவியத் ஒன்றியத்துக்கு விஜயம் செய்தார்.
- 1999 - டிஸ்கவரி விண்ணோட்டம் பன்னாட்டு விண்வெளிநிலையத்துடனான தனது முதலாவது இணைப்பை வெற்றிகரமாக முடித்தது.
- 1999 - 16 ஆண்டுகள் இராணுவ ஆட்சியின் பின்னர் நைஜீரியாவில் ஜனாதிபதியை மக்கள் தெரிவு செய்தனர்.
- 2005 - ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தீவிரவாத அமைப்பாக அறிவித்துத் தடை செய்தது.

### பிறப்புகள்

- 1872 - சிவயோக சுவாமி, ஈழத்துச் சித்தர் (இ. 1964)
- 1890 - மார்ட்டின் விக்கிரமசிங்க, சிங்கள எழுத்தாளர் (இ. 1976)
- 1917 - ஜோன் எஃப். கென்னடி, ஐக்கிய அமெரிக்காவின் 35வது குடியரசுத் தலைவர் (இ. 1963)
- 1942 - மாதுலுவாவே சோபித்த தேரர், இலங்கைப் பௌத்தபிக்கு, மனிதவுரிமை செயற்பாட்டளர் (இ.2015)
- 1984 - கார்மெலோ ஆந்தனி, அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்
- 1926 - அப்துலாயே வாடே, செனிகல் நாட்டின் 3வது அரசுத்தலைவர்
- 1929 - பீட்டர் ஹிக்ஸ், ஆங்கிலேய-ஸ்கொட்டிய இயற்பியலாளர்

### இறப்புகள்

- 1829 - ஹம்பிரி டேவி, ஆங்கிலேய இயற்பியலாளர் (பி. 1778)
- 1892 - பகாவுல்லா, பாரசீக ஆன்மிகத் தலைவர், பகாய் சமயத்தைத் தோற்றுவித்தவர் (பி. 1817)
- 1911 - டபிள்யூ. எஸ். கில்பர்ட், ஆங்கிலேய எழுத்தாளர் (பி. 1836)
- 1979 - மெரி பிக்ஃபோர்ட், கனேடிய-அமெரிக்க நடிகை (பி. 1892)
- 1987 - சரண் சிங், இந்தியக் குடியரசின் 7ஆவது பிரதமர் (பி. 1902)
- 2005 - ஹாமில்டன் நாகி, தென்னாபிரிக்க மருத்துவ உதவியாளர் (பி. 1926)
- 2009 - சோ. கிருஷ்ணராஜா, இலங்கை வரலாற்றாளர், மெய்யியல் பேராசிரியர் (பி. 1947)

### சிறப்பு நாள்

- நைஜீரியா - மக்களாட்சி நாள் (1999)
- ஐக்கிய நாடுகளின் அமைதி காப்போருக்கான சர்வதேச நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | மருதனார் மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 180 | 200 | 150 | 240 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 80 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 350 | 300 | 300 | 300 |
| தக்காளி | 140 | 160 | 80 | 120 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 80 | 70 | 100 |
| கோவா | 160 | 250 | 140 | 160 | 180 | 200 |
| கரட் | 250 | 400 | 200 | 240 | 220 | 400 |
| பூசணி | 80 | 70 | 40 | 50 | 60 | 80 |
| புடோல் | 100 | 100 | 50 | 80 | 140 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 140 | 160 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 80 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 70 | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 160 | 100 | 100 | 120 | 140 | 160 |
| லீக்ஸ் | 140 | 100 | 70 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 150 | 100 | 100 | 120 | 140 | 160 |
| கறிமிளகாய் | 250 | 100 | 100 | 160 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 120 | 80 | 120 | 100 |
| போஞ்சி | 200 | 250 | 140 | 140 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 50 | — | 120 | 200 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 20 | 50 | 20 | 40 |
| தேசிக்காய் | 60 | 60 | 50 | 50 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 65 | 70 | 40-60 |
| இராசவள்ளி | 200 | 400 | — | 220 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 300 | 300 | — | — | 300 | 280 |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 80 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 10 | 40 | 25 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 100 | 120 | — | — | 100 | — |

"செவிடன் காதில் ஊதிய சங்கு போல"
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அறிக்கைகளும் கருத்துரைகளும் இலங்கை அரசை செம்மைப்படுத்தாது

இலங்கையில் மிக நீண்டகாலமாக நிலவி வரும் இனப்பிரச்சினையைத் தீர்த்தல் என்ற விடயம் சாத்தியப்படுதல் பற்றி எவரும் சிந்திப்பதாக இல்லை.

அதிலும் குறிப்பாக சர்வதேச நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் அறிக்கைகள் விட்ட வண்ணம் இருக்கின்றனவே தவிர ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரியவில்லை.

போர்க்குற்றவாளிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாக்கக்கூடாது என சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்டம் என்ற அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூகா கேட்டுள்ளார்.

போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அவர்களை எக்காரணம் கொண்டும் பாதுகாக்கக் கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் யஸ்மின் சூகா விடுத்த கோரிக்கை நியாயமானது.

அதற்காக அந்தக் கோரிக்கையை ஜனாதிபதி மைத்திரி சிரம் தாழ்த்தி ஏற்றுக்கொள்வாரா? என்பதுதான் இங்கு ஆராயப்பட வேண்டும்.

போர்க்குற்றவாளிகளை பாதுகாக்கக் கூடாது என்ற கோரிக்கைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரிய மதிப்புக் கொடுப்பாராயின் யஸ்மின் சூகாவின் கோரிக்கை பொருத்தமானதும் சரியானதும் என எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போர்க்குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு ஒரு போதும் இடம்தரமாட்டார் என்பது நிறுதிட்டமான உண்மை.

இந்நிலையில் அவரிடம் கோரிக்கை வைப்பது, கோரிக்கை வைத்தோம் என்று சொல்வதற்கு உதவுமேயன்றி, போர்க்குற்றவாளிகள் தண்டனை பெறுவதற்கோ அன்றி போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவோ இது எந்த வகையிலும் உதவமாட்டாது என்பதே உண்மை.

ஆக, சர்வதேச அமைப்புக்களும் நாடுகளும் ஒரு சம்பிரதாய முறையில் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுகின்ற நடைமுறையைப் பின்பற்றுகின்றனவேயன்றி ஆக்கபூர்வமான அல்லது இலங்கை அரசுக்கு பொருத்தமான பொறிமுறையைப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை.

உண்மையில் அறிக்கை விடுதல், கோரிக்கை முன்வைத்தல் என்ற சர்வதேச நடைமுறைகள் எதுவும் இலங்கை அரசாங்கத்திடம் செல்லுபடியாகவில்லை.

அவ்வாறாயின் அந்த நடைமுறையை தொடர்ந்தும் பின்பற்றுவதை விடுத்து இலங்கை அரசுக்கு எவ்வாறான அழுத்தம் கொடுத்தால் சிலவரன்முறைக்கு இலங்கை அரசைக் கொண்டு வர முடியும் என்ற ஆய்வின் அடிப்படையில், சர்வதேசம் செயற்பட வேண்டும்.

அவ்வாறான ஆய்வுப்புலம் சர்வதேசத்திடம் இருந்திருக்குமாயின் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கான கால அவகாசம் என்பது அடியோடு நிராகரித்திருக்கப்பட வேண்டும்.

ஆனால் கால அவகாசம் அனைத்து நாடுகளினதும் ஏகமனதான சம்மதத்துடன் வழங்கப்பட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில், போர்க்குற்றவாளிகளை ஜனாதிபதி மைத்திரி பாதுகாக்கக்கூடாது என யஸ்மின் சூகா கேட்பது எந்தவகையிலும் பிரயோசனமற்றதாகும்.

இதை நாம் இவ்விடத்தில் கூறும் போது 500 புத்தபிக்குகள் வடக்கின் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர். வடபுலத்தில் பௌத்த விகாரைகளை நிறுவுவதே அவர்களின் இலக்காகும் எனும் போது நல்லாட்சியிலும் நடப்பது என்ன என்பது தெரிகிறதல்லவா?

ஆம், வெறும் கோரிக்கைகளும் அறிக்கைகளுமே சர்வதேசத்தின் வெளிப்பாடாக இருந்தால் இலங்கையின் ஆட்சியாளர்கள் எவரும் இதைத்தான் தொடர்ந்தும் செய்வர்.

# இயற்கையின் கோரத் தாண்டவம் இனவாதிகளுக்கு ஒரு படிப்பினை

## கல்வி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு

நாட்டில் இனவாதம் பேசியவர்களுக்கு இயற்கையின் கோரத்தாண்டவம் ஒரு படிப்பினையாக அமைந்துள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கண்டி சிடி மிஷன் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், நாட்டில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த காலங்களில் நாட்டில் சிலர் இனத்துவமாக செயற்பட்டு நாட்டில் அசாதாரண சூழ்நிலை களை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். இதனால் மூவின மக்களிடையே அசாதாரண நிலை ஏற்பட்டது.

தற்போதும் அந்த நிலை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. அவர்களின் பின்னணியில் பலர் செயற்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

இவ்வாறான நிலையில் இயற்கையின் கோரத் தாண்டவம் நாட்டை உலுக்கியுள்ள நிலையில், இனவாதம் பேசியவர்களுக்கு இது ஒரு படிப்பினையாக அமைந்துள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக இலட்சக்கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ள நிலையில், 100க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாடளாவிய ரீதியில் நிவாரண பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த செயற்பாடுகள் அனைத்தும் இன, மத, மொழிக்கு அப்பால் மனித நேயத்துடன் முன்னெடுக்கப்படுகின்றன.

இதில் தமிழ், முஸ்லிம், சிங்களவர் என வேறுபாடுகள் இல்லை. முகாம்களில் அனைத்து இன மக்களும் ஒரே கூரையின் கீழ் எந்த விதமான வேறுபாடுகளும் இன்றி இருக்கின்றனர்.

மீட்பு பணிகளும் இனவாதத்துடன் நடைபெற வில்லை. எல்லோரும் மனிதர்கள் என்றே செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் இனவாதம் பேசிய அனைவருக்கும் இந்த இயற்கையின் கோரத்தாண்டவம் ஒரு படிப்பினையாக இருக்கும் என நினைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்- விஜயகலா

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும் எனில் அரசியலில் எமது பெண்களின் பங்களிப்பு தேவை என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பெண்கள் வலுவூட்டல் கருத்தமர்வு ஒன்று நேற்றைய தினம் யாழ். கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த கால யுத்தத்தின் வடுவில் இருந்து இன்று வரை பலரால் மீள முடியவில்லை. அதிலும் பெண்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெண்கள் முன்னேற்றம் அடைவதற்த அவர்களை முன்னேற்றுவதற்கு பலமானவர்கள் இல்லை. பெண்களிடம் பல்வேறு திறமைகள் இருந்தும் வெளிக் கொண்டு வர முடியாமல் இருக்கிறார்கள்.

குடும்பத்திலும்தாம்வேலை செய்யும் இடத்திலும் தனிமையில் இருக்கும்போதும் தம்மை தாமே பாதுகாக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

நாட்டில் 52 வீதமான பெண்கள் உள்ள நிலையில் அரசியலில் மற்றும் வெவ்வேறு துறைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிக குறைவாக உள்ளது. குறிப்பாக அரசியலில் பெண்கள் தவிர்க்கப்படுகிறார்கள் ,அவர்களின் திறமைகள் மழுங்கடிக்கப்படுகிறது. ஒவ்வொரு தேர்தலின் போதும் பெண்கள் தவிர்க்கப்படுகிறார்கள். அரசியலில் இணைய பல பெண்கள் தமது விருப்பத்தை தெரிவித்தாலும் கட்சிகள் தவிர்க்கின்றன.

பெண்கள் தமது ஆளுமைய்ய வெளியில் கொண்டு வர துணிய வேண்டும். கடந்த காலங்களில் ஒவ்வொரு ஆட்சி மாற்றங்களின் போதும் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள் பாதுகாப்பில்லாமல் இருந்தார்கள். தற்போது அவ்வாறு இல்லை. சகலருக்கும் சம உரிமை உள்ளது.

எமக்கான அரசியல் தீர்வு திட்டம் மிக முக்கியம் தீர்வை பெற வேண்டும். அதற்காக தான் தமிழ் மக்கள் போராடிக் கொண்டு இருக்கிறோம். அது அவ்வாறு இருக்கும்போது எமது அபிவிருத்தியையும் கவனத்தில் கொள்ள வேண்டும்

பெண்கள் பாலியல் வல்லுறவின் பின் கொலை செய்யப்பட்டார்கள், சிறுமிகள் துஷ்பிரயோகம், கைதுகள், கடத்தல்கள், கொலைகள் தான் அதிகமாக நடந்தன. அவ்வாறான கலாசாரம்தான்கடந்தகாலங்களில் வளர்க்கப்பட்டுள்ளது.

வன்முறைகளை இல்லாது ஒழிக்க பெண்களின் பிரச்சினைகளுக்கு நீதி கோருவதற்கு பெண்கள் அரசியலில் இறங்கி தேர்தலில் போட்டியிடும் போது பெண்களுக்கு வாக்களிக்க வேண்டும்.

சில ஆண்கள்பெண்களை முன்னுக்கு கொண்டு வர விடமாட்டார்கள். திறமை உள்ள பெண்களுக்கு இனியாவது சந்தர்ப்பம் வழங்க முன் வர வேண்டும்.

ஒவ்வொரு ஆட்சி மாற்றத்திலும் சிலர் விலை போகின்றார்கள். அதனால் அநீதி நடக்கிறது. பெண்களுக்கு எதிரான அநீதிகள் தொடர்கின்றன. எனவே அழுத்தங்களை கொடுத்து எமக்கான நீதியை பெற பெண் பிரதிநிதிகள முன் வர வேண்டும் வேண்டும்

ஆணிடம் போய் அனைத்து விடயங்களையும் ஒரு பெண்ணால் கூற முடியாது. பெண் பிரதிநிதிகள் இருக்கும் போது அவர்களிடம் எமது பிரச்சினைகளை எடுத்துக் கூறி எமக்கு தீர்வினை பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மன்னார் பிரதேசத்தில் பள்ளமடுவிலிருந்து வெள்ளாங்குளம், விடத்தற்தீவு கிராமம், கள்ளியடி, இலுப்பைக் கடவை, மூன்றாம்பிட்டி, தேவன் பிட்டி, கணேசபுரம், விடத்தற்தீவு வைத்தியசாலை தேவன்பிட்டி நீர்ப்பாசனத் திணைக்களம், கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் (இ-9)

## நாய்களை பாதுகாப்பாக வளர்ப்போம் விலங்கு விசர் நோய் தவிர்ப்போம்!

நீர்வெறுப்பு நோய்த்தொற்றலுக்கு உள்ளாகக்கூடிய தொழில் புரிவோர்- கால்நடை வைத்தியர்கள். உதவியாளர்கள், றேபிஸ் தடுப்பு மருந்து போடுபவர்கள், வளர்ப்பு மிருகங் களை விற்பனை செய்வோர், பண்ணைப் பராமரிப்பில் ஈடுபடுவோர், றேபிஸ்தடை தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளல்வேண்டும். வளர்ப்புநாய், பூனைகள் கட்டின்றி பெருகுவதை தவிர்ப்போம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### வாழ்க வையகம் (Duty towards World)



நமது ஐவகைக் கடமைகளில் கடைசியில் வரும் உலகக் கடமையினை ஆற்றுவதில் முடிந்த வரையில் மிகுதியான அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். பொருளிலோ, செல்வாக்கிலோ, உடல் கட்டிலோ போதிய வலிவு இல்லாத நாம் எப்படி உலக 'நலக் கடமையினை ஏற்று ஆற்ற முடியும் என்று எவரும் மலைக்கவோ, சோர்வுறவோ வேண்டாம்.

உங்களிடம் தவத்தால் உறுதி பெற்ற மனோ வலிவு இருக்கிறது. உலக நலத்திற்காக உங்கள் விருப்பத்தைச் சங்கற்பமாக்கிப் பல தடவை உள்ளுக்குள் ஒலித்துக் கொள்ளுங்கள். சிதாகாசமாக இயங்கும் உங்கள் உயிராற்றலிலிருந்து கிளம்பும் அந்த உயர்ந்த நினைவு அலை மகாகாசம் என்ற பேரியக்கத் தொடர்கள் உயிரோடு கலந்து அந்த விருப்பம் நிறைவேற வழிவகுத்துக் கொள்ளும்.

உங்கள் கடமைகளில் ஒன்றாக நாள்தோறும் "வாழ்க வையகம்" என்ற மந்திரத்தைப் பத்து தடவையாகிலும் நமது. உடன் பிறந்தவர்களாகிய உலக மக்கள் அனைவரையும் விரிவாக நினைந்து ஒலித்துக் கொண்டிருங்கள்.

அன்பர்கள் பலருடைய இத்தகைய எண்ண உறுதி செயல்படுத்துவதற்காக எந்த நாட்டிலோ, ஒரு வெற்றி வீரனைப் பிறக்கச் செய்யலாம். அல்லது இப்போது உள்ள உலக நல நாட்டம் கொண்ட ஒருவரையோ, பலரையோ உலக நலத் தொண்டில் முழுமையாகத் திருப்பிவிடலாம். பேரியக்கத் தொடர் களத்தில் அத்தகைய மாபெரும் ஆற்றல் அடங்கியுள்ளது.

# வல்வை வி. கழகம் நடத்திவரும் உதைபந்தாட்ட அரையிறுதி இன்று

# கலைமதி- நவஜீவன்ஸ் பலப்பரீட்சை





பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டியின் இரண்டாவது போட்டியானது இன்று 2017.05.29 திங்கள் பி.ப. 4.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. இப் போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி பொம்மர்ஸ்-யங்கம்பன்ஸ் மோதல்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகளானவை இன்று 2017.05.29 திங்கள் பிற்பகல் 3.30 மணியளவில் றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் அரையிறுதி போட்டியில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)


கம்பர்மலை யங்கம்பன்ஸ்.வி.க


## நட்பு ரீதியிலான உதைபந்தாட்டம் சக்திவேல் வி. கழகம் வெற்றி



செம்பியன்பற்று சென்பிலிப்பிநேரீஸ் தேவாலய திருவிழாவை சிறப்பிக்கும் முகமாக 26.05.2017 அன்று நட்பு ரீதியான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இதில் சக்திவேல் விளையாட்டுக் கழகம் சென்பிலிப்பி நேரீஸ் விளையாட்டுக் கழகமும்மோதியது. இப் போட்டியில் சக்திவேல் விளையாட்டுக்கழகத்தினர் 3-0 என்ற கோல் கணக்கில்வெற்றி பெற்றுள்ளனர். (க)



## சம்பியன்ஸ் லீக் பயிற்சி ஆட்டம் இலங்கையை வீழ்த்தியது ஆஸி



சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் பயிற்சி ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 319 ஓட்டங்கள் குவித்து 2 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை தோற்கடித்தது.


சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியையொட்டி பயிற்சி ஆட்டங்கள் நேற்று முன்தினம் தொடங்கின.

முதல் பயிற்சி ஆட்டத்தில் அவுஸ்திரேலியா-இலங்கை அணிகள் லண்டன் ஓவலில் மோதின. இதில் முதலில் பேட் செய்த இலங்கை அணி 7 விக்கெட் இழப்புக்கு 318 ஓட்டங்கள் எடுத்தது. அதிக பட்சமாக கப்டன் மத்யூஸ் 95 ஓட்டங்களும், குணரத்னே 70 ஓட்டங்களும் விளாசினர்.

தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலியா 49.4 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 319 ஓட்டங்கள் குவித்து 2 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றியை ருசித்தது.

ஆரோன் பிஞ்ச் (137 ஓட்டங்கள்), டிராவிஸ் ஹெட் (85 ஓட்டங்கள், நொட்-அவுட்) வெற்றிக்கு வித்திட்டனர். (க)

## வரி ஏய்ப்பு வழக்கில் சிக்கினார் கிறிஸ்டியானோ ரொனால்டோ




ரியல் மாட்ரிட்டின் கிறிஸ்டியானோ ரொனால்டோ 9 மில்லியன் டொலர் அளவில் வரி ஏய்ப்பு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

போர்த்துக்கல் நாட்டின் முன்னணி கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ. இவர் ஸ்பெயின் நாட்டின் முன்னணி கிளப் அணியான ரியல்மாட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார். அந்த அணியில் வாரத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிறார். மேலும், விளம்பரங்கள்மூலம் பல கோடி ரூபாய் சம்பாதித்து வருகிறார்.

இதுபோன்று சம்பாதித்த வருமானத்திற்கு உரிய வகையில் வரி கட்டவில்லை என்ற விமர்சனம் எழுந்தது. சமீபத்தில் இதே விவகாரத்தில் மெஸ்சியின் தண்டனையை குறைக்க உச்சநீதிமன்றம் மறுத்து விட்டது.

இதனால் ரொனால்டோ விவகாரம் சூடுபிடித்துள்ளது. ஸ்பெயின் நாட்டின் வரித்துறை அதிகாரிகள் சுமார் 8.95 மில்லியன் டொலர் அளவிற்கு ரொனால்டோ மோசடி செய்துள்ளதாக கருதுகின்றனர்.

கிறிஸ்டியானோ ரொனால்டோ 2011இல் இருந்து 2013-வரை தனது படத்தை விளம்பரத்துக்கு பயன்படுத்துவதற்கான உரிமை குறித்து சரியான தகவலை தெரிவிக்கவில்லை என்று ஸ்பெயின் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. அதனடிப்படையில் இந்த விவகாரம் வெளி வந்துள்ளது.

ஒருவேளை வருமான வரித்துறையினர் விசாரணை நடத்தி, ரொனால்டோ மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஒரு வருடத்திற்கு நான்கு மாதம் என 12 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியிருக்கும். (க)

## பல்கலை...

ங்களின் மூலம் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 28ஆயிரத்து 952 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு 25,676 மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டு 28,952 ஆக அதிகரித்தது.

அதேவேளை, பல்கலைக்கழகங்களில் கற்றுக் கொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2015இல் 83 ஆயிரத்து 778 ஆக இருந்தது. இது, 2016இல், 86 ஆயிரத்து 061 ஆக அதிகரித்துள்ளது.

அரச பல்கலைக்கழகங்களில் கடந்த ஆண்டில, புதிதாக 9 பீடங்களும், 34 புதிய திணைக்களங்களும், 3 நிலையங்களும் உருவாக்கப்பட்டன.

இந்தக் காலகட்டத்தில் 38 பட்டக்கற்கைநெறிகள் மற்றும் 15 பட்ட பின் படிப்புக் கற்கைநெறிகளுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளது.(செ)

## வங்காள விரிகுடா...

வாய்ப்பு உள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் எஸ்.ஆர்.ஜயசேகர தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வங்காள விரிகுடாவின் மத்திய பகுதியிலுள்ள அழுத்தத்தின் காரணமாக இன்றைய தினம் வலுவடைந்து சூறாவளியாக உருவெடுத்து வடக்கு திசையை ஊடறுத்து பங்களாதேஷ் வரை பயணிக்கும் என்று வானிலை அவதான மையத்தின் அறிக்கைகள் கூறுகின்றன.

அதனால் நாட்டில் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படும். மத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் காலி மாத்தறை உள்ளிட்ட கடற்பகுதியை அண்டிய பிரதேசங்களில் காற்றின் வேகம் சடுதியாக அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

25ஆம் திகதி போன்ற பாரதூரமான நிலைமை தற்போதைக்கு இல்லாவிடினும் காற்றின் வேகம் அதிகரிப்பதை பொறுத்தே நிலைமையை தீர்மானிக்க வேண்டும். மேறபடி நிலைமை குறித்து ஆராய புதிய இயந்திரங்கள் பொருத்தபட்டிருந்தாலும் 24 மணித்தியாலய தொடர் மழையின் போது அளவீட்டு பணிகளை மேற்கொள்வது கடினமாக உள்ளது என்றார். (செ)

## 4-வது முறையாக...

னர்.

சனிக்கிழமை இரவு கடையினைப் பூட்டிவிட்டு சென்ற உரிமையாளர் மறுநாளான நேற்று காலையில் கடையினைத் திறக்கச் சென்றபோதே திருட்டு இடம்பெற்றமை தெரிய வந்துள்ளது.

இவ் விற்பனை நிலையத்தில் ஏற்கெனவே மூன்று முறை திருட்டு இடம்பெற்றுள்ளதுடன் இதில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் சந்தேக நபர்களையும் பருத்தித்துறை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந் நிலையில் தற்போது இடம்பெற்ற நான்காம் முறைத் திருட்டில் பெறுமதியான ஆறு தொலைபேசிகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-60)

## தமிழர்களின்...

குப் பதிலளித்துள்ள போதே அமைச்சர் தமது பதிலை சபையில் இவ்வாறு சமர்ப்பித்திருந்தார்.

ஏற்கெனவே இக்கேள்வியை சில தடவைகள் வாசுதேவ எம்.பி.சபையில் கேட்டிருந்தபோதும் அப்போது அதற்கு பதிலளிக்க கால அவகாசம் கோரப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இக்கேள்வி மீண்டும் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் எழுப்பப்பட்டது.

இதன்போது அதற்கான பதிலை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் சபையில் சமர்ப்பித்தார். வாசுதேவ நாணயக்கார எம்.பி தமது கேள்வியில், யுத்தத்தின் பின்னர் அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான தங்கம் எங்காயினும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதா? என கேட்டுள்ளார்.

இதற்கு அவ்வாறு வைப்பீடு எதுவும் கிடையாது என்றும் அது தொடர்பில் எந்த தகவலும் கிடையாது என்றும் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் பதிலளித்துள்ளார். (செ)

## இளைஞன் மீது...

இதில் படுகாயமடைந்த இளைஞன் நேற்று பிற்பகல் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளான்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தாண்டிக்குளம் முதலாம் ஒழுங்கையில் வீடு எடுத்து தங்கியிருக்கும் 15இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஒன்றிணைந்து நேற்று மதியம் 12.10 மணியளவில் மதுபோதையில் அப்பகுதியிலுள்ள இளைஞரான சிவதீஸ்வரன் கஜராஜ் என்ற 21வயதுடைய இளைஞனை வீட்டிற்குள் சென்று அவரை இழுத்துக் கொண்டு வெளியே வைத்து சரமாரியாக தாக்கியுள்ளனர்.

இதைத்தடுக்கச் சென்ற தாயார் மீதும் குறித்த குழுவினர் தாக்கியுள்ளதாகவும் இளைஞன் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை பறித்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

மேலும், இளைஞனின் பாவனையிலிருந்த மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்தியுள்ளனர். இத் தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்ட நிலையில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் 12.35 மணியளவில் முறைப்பாடு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (செ)

## விநாயகமூர்த்தி...

நேற்றைய தினம் கொழும்பில் காலமானார்.

சுகவீனம் காரணமாக கடந்த இரண்டு வாரகாலமாக தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையி லேயே அவர் நேற்றைய தினம் இயற்கை எய்தினார்.

சட்டவாளரான விநாயகமூர்த்தி, ஜி.ஜி பொன்னம்பலத்துடன் இணைந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஊடாக தனது அரசியல் பயணத்தை தொடங்கிய அவர் பின்னர் குமார் பொன்னம்பலத்துடன் இணைந்து செயற்பட்டார்.

தமிழீழ விடுதலை புலிகளின் அரசியல் சித்தாந்தத்தை முழுமையாக ஏற்பதாக பகிரங்கமாக அறிவித்த அவர் தமிழ் தேசியத்தின் பால் பற்றுறுதியுடன் செயற்பட்டவராவார்.

குமார் பொன்னம்பலத்தின் மறைவின் பின்னர் அகில இலங்கை தமிழ் காங்கிரசின தலைமை பொறுப்பை ஏற்ற அவர், 2000ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்டு அமோக வெற்றியீட்டினார். 2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உருவாக்குவதற்கு முன்னின்று செயற்பட்டவர்களில் ஒருவரான அவர் அதன் பிரதித்தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

2015ஆம் ஆண்டு வரை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பை பூர்த்திசெய்த அவர் குமார் பொன்னம்பலத்துடன் இணைந்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக பாடுபட்டார். வயதான காலத்திலும் மனித உரிமைக்காகப் பாடுபட்ட இவர் தனது 84ஆவது வயதில் நேற்றைய தினம் இயற்கையெய்தியுள்ளார்.

அன்னாரின் பூதவுடல் இன்றைய தினம் கொழும்பு பொரல, ஜெயரட்ண மலர்சாலையில்காலை 10 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்படுவதுடன் நாளை செவ்வாய்க்கிழமை கொக்குவிலில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 11 மணிக்கு ஈமக்கிரியைகள் ஆரம்பமாகி அதனை தொடர்ந்து இரங்கல் உரை இடம்பெற்று பிற்பகல் 2 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்படவுள்ளது. (செ-9)

## ஆயுதங்களுடன்...

1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக முறையிடப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (செ-17)

## சர்வமத பிரார்த்தனை...

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கிளிநொச்சி மாவட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்களின் தொடர் போராட்டத்தின் நூறாவது நாளான நாளை 30ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் மாபெரும் சர்வமத பிரார்த்தனை ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழில் உள்ள விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ஏற்பாட்டாளர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல்போன எமது உறவுகள் தொடர்பில் உரிய பதிலை அரசிடம் இருந்து கோரி கடந்த மூன்று மாதங்களாக தெருவோரம் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகிறோம். ஆனால் இதுவரை அரசிடம் இருந்து உரிய பதில் வழங்கப்படவில்லை.

எமது போராட்டம் நாளை 30ஆம் திகதி 100ஆவது நாளை எட்டவுள்ள நிலையில் குறித்த திகதியில் மாபெரும் சர்வமத பிரார்த்தனை ஒன்றை கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் மேற்கொள்ளவுள்ளோம்.

இந்த சர்வமத பிரார்த்தனையின் மூலம் சர்வதேசத்துக்கு எமது பிரச்சினையை மீண்டும் மீண்டும் தெரியப்படுத்தி தீர்வினை பெற்றுத்தர கோரவுள்ளோம்.

இந்த மாபெரும் பிரார்த்தனையில் பொது மக்கள், அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள், சிவில் சமூக உறுப்பினர்கள், வர்த்தகர்கள், மாணவர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி எமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும்.

இந்த மாபெரும் கவனயீர்ப்பு சர்வமத பிரார்த்தனையில் கலந்து கொள்வதற்காக மாவட்டங்களிலும் பயண ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் கலாரஞ்சினி - 0778087759, லீலாவதி - 0778864360 ஆகியோருடனும், முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் சந்திரலீலா - 0772056093, புஸ்பாம்பாள்-0771902527 ஆகியோருடனும், வவுனியா மாவட்டத்தை சேர்ந்தவர்கள் பாலேஸ்வரி - 0775530400, ஜெனிதா-0767877552 ஆகியோருடனும், மன்னார் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் உதயச்சந்திரா- 0776914414, இமாகிறேட்-0770738257 ஆகியோருடனும் யாழ்.மாவட்டத்தை சேர்ந்தவர்கள் விஜி -0777966187 என்பவருடனும் தொடர்புகளை ஏற்படுத்தி பயண ஏற்பாடுகளை செய்துகொள்ள முடியும். அத்துடன் அனைவரும் அன்றைய தினம் காலை 9 மணிக்கு கோவிலில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்வதாக மேலும் தெரிவித்தனர். (செ-9)

## 250ஐ தாண்டியது...

மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளினால் பாதிக்கப்பட்ட ஏழு மாவட்டங்களிலும், இதுவரையில் 151 பேர் பலியாகியும், 111 பேர் காணாமல் போனதாகவும் உத்தியோகபூர்வ தகவல்கள் பதி வாகியிருப்பதாக அரசு பேரிடர் முகாமைத்துவ மையத்தின் உதவி இயக்குநர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிட்டார்.

கம்பகா மற்றும் களுத்துறை மாவட்டத்தில் 47 மரணங்கள் உள்ளிட்ட 50 மரணங்களும் 62 பேர் காணாமல் போயுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

48 சத வீதமான மரணங்கள் சப்ரகமுவ மாகாணத்தில் பதிவாகியுள்ளன. அதாவது இரத்தினபுரி மாவட்டத்தில் 71 பேர் பலியாகியுள்ளனர். 20 பேர் காணாமல் போயுள்ளனர் கேகாலை மாவட்டத்தில் 2 பேர் உயிரிழந்தும் மேலும் 2 பேர் காணாமல் போயுள்ளனர்.

மாத்தறை, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தென் மாகாணத்தில் 28 பேர் பலியாகியுள்ளனர். 27 பேர் காணாமல் போயுள்ளதாக அரசு பேரிடர் முகாமைத்துவ மையம் இறுதியாக வெளியிட்டுள்ள தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமல் போனதாக கூறப்படும் நூற்றுக்கும் மேற்பட்டோர் மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் அல்லது நிலச்சரிவுகளில் புதையுண்டிருக்கலாம் என சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில் அவர்களை தேடும் பணிகள் 4-வது நாளாகவும் நேற்று தொடர்ந்திருந்தது. (செ)

## இறைச்சிக்காக...

க்காக யாரும் பசு, ஒட்டகம், காளை, எருமை மாடுகளை வாங்கவோ, விற்கவோ முடியாது. இந்த விதிமுறை மூலம், நாடு முழுக்க மாட்டிறைச்சி விற்பனை கூடங்கள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

மிருகவதை தடுப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து இந்த புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விதிமுறைகளில் கூறப்பட்டுள்ள உத்தரவுகள் வருமாறு,

வயதில் குறைந்த கால்நடைகளை சந்தைக்கு யாரும் கொண்டுவர முடியாது மேற்கண்ட விலங்குகளை சந்தைக்கு கூட்டி வருவோர் அதன் உரிமையாளர் கையெழுத்துடன் கூடிய ஒப்புதலுடன் வர வேண்டும் விலங்கின் உரிமையாளர்

முகவரி, போட்டோ அடையாள அட்டை நகல் ஆகியவையும் அவசியம். கால்நடையின் அடையாளங்கள் தெரியப்படுத்தப்பட வேண்டும் இறைச்சி தேவைக்காக கால்நடை சந்தைக்கு கொண்டுவரப்படவில்லை என தெரியப்படுத்த வேண்டும்.

கால்நடையை வாங்குபவரின் அடையாள அட்டை நகல், முகவரி உள்ளிட்ட விவரம் கொடுக்கப்பட வேண்டும்.

விவசாய தேவைக்காகவே கால்நடை வாங்கப்படுகிறது என்ற தகவலை உறுதி செய்ய தேவைப்படும் ஆதாரங்களை பெற வேண்டும்.

கால்நடையை வாங்குவோர் அடுத்த 6 மாத காலத்திற்குள் அதை விற்பனை செய்ய மாட்டேன் என்று உறுதியளிக்க வேண்டும் அடுத்த ஆறுமாத காலத்திற்கு அந்த ஆவணங்களை பராமரிக்க வேண்டும் சோதனை செய்யும் அதிகாரியிடம் இந்த ஆவணத்தை தேவைப்படும்போதெல்லாம் காட்ட வேண்டும்,

கால்நடையை வாங்கியவர் அதை இறைச்சிக்காக விற்பனை செய்ய கூடாது மாநில அரசின் கால்நடை பாதுகாப்பு சட்டங்களை மதித்து நடக்க வேண்டும்,

மதம் தொடர்பான விழாக்களில் இந்த கால்நடைகளை (மாடு, எருமை, ஒட்டகம், காளை) பலியிடக்கூடாது.

மாநில அரசின் சட்ட விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு வேறு மாநிலங்களுக்கு இந்த கால்நடைகளை விற்பனை செய்ய கூடாது.

கால்நடை சந்தைகளில் நடைபெறும் விற்பனையின்போது அதுகுறித்து 5 நகல்கள் எடுத்து வைக்கப்பட வேண்டும். ஒன்று விற்பனையாளரிடம், 2-வது வாங்கியவரிடம், 3வது வாங்கியவர் வாழும் தாசில்தார் அலுவலகம், 4வது நகல், மாவட்ட தலைமை கால்நடை அலுவலர், 5வது நகல் கால்நடை சந்தை கமிட்டியிடம் இருக்க வேண்டும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ)

## எண்மரை...

தில் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட 8 பேரின் உயிரை பிரஸ்தாப இளைஞர் தனி நபராக காப்பாற்றியுள்ளார். கட்டுக்கடங்காத வெள்ளம் காரணமாகவே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

எட்டுப் பேரின் உயிரை காப்பாற்றிய போதும், அதே வெள்ளத்தில் அவர் உயிர் பிரிந்தமை அப்பகுதி மக்களுக்கு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (செ)

## பதுளையில்...

யில் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் பதுளையின் கிறனர்பின் பாதுகாக்கப்பட்ட வனாந்தரப் பகுதியில் நேற்று மாலை நாலரை மணி தொடக்கம் எதிர்பாராத வகையில் காட்டுத்தீ பரவத் தொடங்கியுள்ளது.

பிரதேசத்தில் நிலவும் கடும் வரட்சியான காலநிலை மற்றும் காற்றின் வேகம் காரணமாக காட்டுத் தீயின் தாக்கம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

நேற்றிரவு 10 மணிவரை இருபத்தி ஐந்து ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளதுடன், காட்டுத் தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தீயணைப்பு ஊழியர்கள், அதிகாரிகள் பலரும் ஈடுபட்டுள்ளனர். (செ)

## 15 பவுண் தங்க...

தால் குறித்த வீட்டில் உறவினர்கள் பலர் இருந்துள்ள போதும் திருடர்கள் நூதனமான முறையில் திருட்டை அரங்கேற்றியுள்ளனர்.

வீட்டார் இரவு உறக்கத்திற்கு சென்ற பின் திருடர்கள் வீட்டினுள் இலாவகமாக உள்நுழைந்து தேடுதல் வேட்டையை நடத்தியுள்ளார்கள். எனினும் அதிகாலை வேளை சத்தம் கேட்டு எழுந்த வீட்டில் இருந்த பெண்மணி ஒருவர் இருட்டினுள் வீட்டிற்குள் ஒருவர் நடந்து செல்வதை அவதானித்த போது குறித்த நபர் திருடர் என்று அனுமானித்த அப்பெண் கூக்குரல் எழுப்பியுள்ளார்.

இதன்போது திருடிய 15 பவுண் நகைகள் மற்றும் திருமண வீட்டிற்கு வந்தவர்கள் அன்பளிப்பு செய்த பணம் (மொய்ப்பணம்) இருந்த பையை எடுத்துக் கொண்டு திருடர்கள் வேகமாகத்தப்பிச் சென்றுள்ளனர்.

எனினும் திருடர்கள் தப்பி ஓடும் போது அவர்கள் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கைவிட்டு ஓடியுள்ளனர். அவ் மோட்டார் சைக்கிள் திருடர்களுடையது என வீட்டார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வீட்டார் திருடர்களைத் துரத்திச் செல்லும் போதே குறித்த மோட்டார் சைக்கிள் வீட்டில் இருந்து சிறிது தூரத்தில் அநாதரவாக தெருவோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்திருந்தது.

அதனையடுத்து காலை கோப்பாய் பொலிஸாருக்கு இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு மோப்ப நாய் சகிதம் வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கும் போது, அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் குறித்த மோட்டார் சைக்கிளை மீட்டுச் செல்லும் நோக்குடன் திருட்டு இடம் பெற்ற வீட்டிற்கு அருகில் வந்து நின்று நோட்டமிட்டுள்ளனர்.

இவர்களை அவதானித்த வீட்டார், பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து அவர்கள் இருவரையும் விசாரணை செய்யும் நோக்குடன் பொலிஸார் அழைத்த போது அவர்களும் தப்பித்து ஓடியுள்ளனர்.

எனினும் பொலிஸாரும் அவ்வீட்டாரும் இணைந்து அவர்கள் இருவரையும் துரத்தி மடக்கிப் பிடித்துள்ளனர். அவர்களை பொலிஸார் கைது செய்ததோடு மேலும் கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிளையும் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்று மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்கள். (செ-87)


**ரொட்டி தயாரிப்பாளர் உடன் தேவை**

பிரபல உணவகம் ஒன்றுக்கு ரொட்டி தயாரிப்பாளர் உடனடியாகத் தேவை.

தொடர்பு:

0777283681

(சி-6714)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கில்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550*/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுககும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(சி-6639)

**கார் வாடகைக்கு**

புதிய திருமணக்கார் நாள் ஒன்றுக்கு 8000 மட்டும். நாள் வாடகைக் கார் 2000 மட்டும். இரவு நேரப் பயணிகள் கார் சேவை ஒரு கிலோ மீற்றருக்கு 40 ரூபாய் மட்டும்.

துர்க்கா கார் சேவை

077 833 1414

(9065)


## இராணுவ அச்...

சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பளை கல்வி நிலையம் ஒன்றின் ஏழாம் ஆண்டு நிறைவு விழாவும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நேற்றைய தினம் காலை 11.00 மணிக்கு கல்வி நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தனது பிரதம விருந்தினர் உரையின் போது மேற்படி கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறுகையில், தமிழர்களாகிய நாங்கள் கல்வியிலே மிகவும் தரம் வாய்ந்தவர்களாக விளங்கியுள்ளோம். அதனால்தான் எங்கள் மீது தரப்படுத்தல் என்னும் சட்டம் கொண்டு வரப்பட்டது. எங்களைத் தரப்படுத்திக் கீழே அமுக்க முற்பட்டுள்ளார்கள்.

இப்பொழுது நாம் கல்வியில் மாகாணத்தில் கடைசியாக நிற்கிறோம், மாவட்டத்திலே கடைசியாக நிற்கிறோம் என்றால் எங்களிடத்திலே ஏதோ குறைபாடு உள்ளது. எங்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட யுத்தம் எங்கள் மகிழ்ச்சியைக் காவு கொண்டுள்ளது. அந்த யுத்தத்தால் எங்கள் குடும்ப உறவுகள் அழிக்கப்பட்டுள்ளார்கள். எங்கள் சொத்துக்கள் எல்லாமே அழிக்கப்பட்டுள்ளன.

எங்களுடைய நிலங்களிலே நாம் இன்னும் நிம்மதியாக வாழமுடியாத நிலை தொடர்கின்றது. எங்களைச் சுற்றி இப்போதும் இராணுவத்தினர் ஆயுதங்களோடும் இராணுவச் சீருடைகளுடனும் சிவில் உடைகளுடனும் எங்களை அடக்கி ஆள்வதற்காகக் கண்காணித்து வருகின்றார்கள், அச்சுறுத்தும் பாணியில் நடந்துகொள்கின்றார்கள்.

ஆயுதங்களை ஏந்திய இராணுவச் சீருடை அணிந்தவர்களை நாம் எந்நேரமும் எமது பகுதிகள் அனைத்திலும் பார்த்துக்கொண்டு தான் உள்ளோம். நாம் வாழ்கின்ற பகுதிகள் எங்கு பார்த்தாலும் இராணுவத்தினரது ஆதிக்கம் தான் காணப்படுகின்றது.

ஆகவே எமது மாணவர்களின் கல்வி ஒரு அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே நடைபெறுகின்றது. எமது பிள்ளைகள் அச்ச சூழ்நிலைகளுடன் நெருக்கடிகளுக்குள்ளாலும்தான் கல்வியைத் தொடர வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதனால்தான் கல்வியிலே சில வேளைகளில் சில பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்படுகின்றோம் என சிறீதரன் எம்.பி தனது உரையில் குறிப்பிட்டார். (செ)


**பணிநிலை வேண்டுகை**

**Davidson - 501**
இயந்திர இயக்குநர் (ஆண்)
Machine Minder

புத்தகம் கட்டுநர் (ஆண்/பெண்)
Binder

உதவிக்கணக்காளர் (பெண்)
Accounts Clerk
(Quick Books Data Entry Operator)

முன்னனுபவமுள்ளவர்கள் மட்டும்

29, 30, 31 .05.2017 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் 01.00 மணி வரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் நேரில் வரவும்

**கரிகணன்**
வடக்கின் அச்சகதாரர்

இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P : +94 21 222 2717/ 8
+94 21 222 2737

(C-6710)

**யாழ்.மண்ணில் நல்லூரில் புதிய வரவு....**

**திறப்பு விழா அழைப்பு**

29.05.2017 திங்கட்கிழமை பகல் 12 மணி தொடக்கம் 1.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நல்லூர்க் கந்தன் துணை கொண்டு "WEL COME" Super Market என்னும் பல்பொருள் விற்பனை நிலையத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

இவ்விழாவுக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
திரு.திருமதி பரணிதரன் குடும்பத்தினர்.

இல.83, செட்டித்தெரு,
நல்லூர்.
தொ.பே: 0768578315


**கண்ணீர் அஞ்சலி**

அமரர்
**சரஸ்வதி தேவராசா**



கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்ம கர்த்தாசபை உறுப்பினர் ச.தேவராசா அவர்களின் அன்பு மனைவி சரஸ்வதி தேவராசா அவர்கள் நேற்று முன்தினம் (27.05.2017) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற மஞ்சவனப்பதி முருகனை பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தசபை,
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்.


**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்**

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை



எமது சேவை 365 நாட்களும்

அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன் 72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (Express Service)

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call 021 222 3536

முகவர்கள்: DHL aramex FedEx SKYNET

(சி-6705)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.